தமிழரசு

Tamilarasu

(Monthly)

கலைஞர் 100
1924 - 2023

ஜூலை 2023 (July 2023)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 54
இதழ் (Issue) : 1

இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில்

34 இணைகளுக்கான திருமணம்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
ஆனி - ஆடி
ஜூலை 2023

மலர் : 54 விலை ரூ.30 இதழ் : 1

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
கு. சுபாஷ்
இரா. பாலாஜி

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண். (குறள்: 615)

தன்னலம் விரும்பாமல், தன் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவன் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டுமக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகிற தூணாவான்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ "கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம்-
தமிழ்நாட்டின் வரலாற்றில் மாபெரும் திட்டம்" 4

★ "வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்"
இருந்து நீங்கள் பணியாற்றுங்கள் 8

★ மண்ணையும், மக்களையும் காப்பதற்கான கடமை
வேளாண் பெருங்குடி மக்களுக்குக் காத்திருக்கிறது 11

★ சேலம் மாவட்டத்தில், ரூ.170.31 கோடி மதிப்பில்
50,202 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் 25

★ காவிரி டெல்டா பகுதி விவசாய மக்கள்
குறுவை, சம்பா, தாளடி பாசனத்திற்கு
மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு 35

★ ஓசூரில் ரூ.187.20 கோடியில் சிப்காட்
தொழிற்பூங்காக்களுக்கான சுத்திகரிப்பு ஆலை.... 40

★ சென்னை, கிண்டியில் உலகத்தரத்தில்
நவீன வசதிகளுடன் ரூ.240.54 கோடிச் செலவில்
கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை 44

★ சென்னை, நந்தம்பாக்கத்தில்
ரூ.116 கோடி மதிப்பீட்டில் நிதிநுட்ப நகரம்,
ரூ.254 கோடி மதிப்பீட்டில் நிதிநுட்பக் கோபுரம் 52

★ மாணவ, மாணவியர்களை ஒழுக்கத்திலும், பொறுப்பிலும்
முதன்மையானவர்களாக ஆக்குகின்ற "சிற்பி" திட்டம் 58

★ குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மூலம்
ரூ.1,723.05 கோடி மதிப்பிலான முதலீட்டில்
30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் 64

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 07.07.2023 அன்று,
சென்னை, இராஜா அண்ணாமலைபுரம்,
அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில்,
இந்து சமய அறநிலையத்துறையின் திருக்கோயில்கள் சார்பில்,
34 இணைகளுக்கான திருமணங்களைத் தலைமையேற்று
நடத்திவைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி
மணமக்களை வாழ்த்தினார்.

"கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் - தமிழ்நாட்டின் வரலாற்றில் மாபெரும் திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் மகளிருக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் **"கலைஞர் மகளிர் உரிமைத் தொகை"** திட்டத்தினைச் செயல்படுத்துவது குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் 07.07.2023 அன்று முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசினுடைய நிருவாக வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்நாடு வரலாற்றிலும் இவ்வளவு பெரிய திட்டம் இதுவரை உருவாக்கப்பட்டது இல்லை என்று சொல்லும் வகையிலான மாபெரும் திட்டத்தைத் தொடங்குவதற்கான முதற்கட்டக் கூட்டம் இது!

தலைமுறை தலைமுறைக்குப் பயனளிக்கப் போகிற இந்த மகத்தானத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான திட்டம் வகுப்பதற்காக நாம் கூடியிருக்கிறோம்.

'எல்லோர்க்கும் எல்லாம்' என்ற நோக்கத்துடன் செயல்படும் நமது 'திராவிட மாடல்' அரசின் அனைத்துத் திட்டங்களுக்கும் ஒரு பொதுநோக்கு உண்டு. அதுதான் சமூகநீதி!

நீதிக்கட்சி காலம் தொடங்கி இன்றுவரை தமிழ்நாட்டை வழிநடத்தும் கோட்பாடுதான், சமூகநீதி!

இந்திய அளவில் மட்டுமல்ல, உலக அளவிலும் சமூகநீதியை அடிப்படையாகக் கொண்ட அரசையும், அதன்மூலம் பல புதுமையான, புரட்சிகரமான திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி, சமத்துவச் சமூகத்தை உருவாக்குவதில் நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட மாநிலம் நம் தமிழ்நாடு.

சமூக வளர்ச்சியைத் தடுக்கும் சக்தி

சமூக அநீதிக்கு எதிராக கிளர்ந்து எழுந்ததுதான் சமூகநீதி!

சாதிய ஏற்றத்தாழ்வு கொண்ட இரத்த பேதமும், ஆண், பெண் வேறுபாட்டை விதைக்கும் பால்

பேதமும், இந்தியாவின் சமூக வளர்ச்சியைத் தடுக்கும் சக்திகளாக காலம் காலமாக இருக்கிறது. வரலாற்றின் முந்தையப் பக்கங்களில் பதிவான பிற்போக்குச் சிந்தனைகளால் – செயல்களால் தமிழ்ச் சமுதாயம் பெரிதளவு பாதிப்புக்குள்ளாகி இருந்ததை நாம் அனைவரும் அறிவோம்.

இந்தப் பாதிப்பு சாதிரீதியான, மதரீதியான வேறுபாட்டை மட்டுமல்ல, சமூகத்தின் சரிபங்காகத் திகழும் மகளிரின் வாழ்க்கைத் தரத்தையும், அடையாளத்தையும், சுயமரியாதையையும் எந்த அளவிற்குப் பாதித்தது என்பதை நான் இங்கு அதிகமாக விளக்கத் தேவையில்லை.

தொடக்கக் காலத்திலிருந்தே தாய்வழிச் சமூக முறைதான், மனிதகுலத்தை வழிநடத்தி வந்திருக்கிறது. உழவுக் கருவிகளைக் கண்டுபிடித்து, வேளாண் சமூகமாக மாறியபோதுகூட, பெண்களின் உழைப்பு ஆண்களுக்கு நிகராகவே அமைந்திருந்தது. ஆனால், காலப்போக்கில், மதத்தின் பெயராலும், பழமைவாதக் கருத்துகளாலும், பெண்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டார்கள். அவர்களுக்குக் கல்வியறிவு மறுக்கப்பட்டது. பெண்குலத்தின் உழைப்பு நிராகரிக்கப்பட்டது. பூட்டிய இரும்புக் கூட்டின் கதவினைத் திறந்து, பெண் அடிமைத்தனத்தைத் தகர்த்து, அவர்களுக்கான சமூக, பொருளாதார விடுதலையை மீட்க எத்தனையோ சமூகச் சீர்திருத்தவாதிகள் பணியாற்றினார்கள்.

"மேட்டுக்குடியைச் சேர்ந்த ஒருவன், ஏழையை அடித்தால் நான் ஏழையின் பக்கம் நிற்பேன். ஏழை ஒருவன் தனது வீட்டில் தனது மனைவியை அடித்தால், அவன் மனைவி பக்கமாக நிற்பேன். யார் பக்கம் நிற்கிறேன் என்பதே எனது நிலைப்பாடு" என்று சொன்ன தந்தைப் பெரியார், இந்த நூற்றாண்டின் மாபெரும் சிந்தனையை விதைத்தார்.

அதனைப் பேரறிஞர் அண்ணாவும், தமிழினத் தலைவர் கலைஞரும் அரசின் திட்டங்களாகச் செயல்படுத்திக் கொடுத்தார்கள். இதன் விளைவுதான், இன்று பள்ளி, கல்லூரிப் படிப்புகளில் மாணவிகள் அதிகம் பயின்று கல்வியில் சிறந்து விளங்குகின்றனர்.

பெண்களுக்கான எண்ணற்றத் திட்டங்கள்

அரசுப் பணியாளர் தேர்வுகளில் பெண்கள் அதிகம் தேர்ச்சி பெறுவது தமிழ்ச் சமூகத்தின் முதிர்ச்சியைக் காட்டுகிறது. குறிப்பாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில், பெண்களுக்கான எண்ணற்றப் பல திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன.

பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வேண்டும் என்று 1929ஆம் ஆண்டு நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை 1989ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமாக்கினார். இதுதான் பெண்ணினத்திற்குத் திராவிட இயக்கம் வழங்கிய மாபெரும் அதிகாரக் கொடை. இதுதான் 'திராவிட மாடல்'!

தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் 1973ஆம் ஆண்டு ஆண்கள் மட்டுமே பங்கெடுத்து வந்த காவல்துறையில், பெண்களுக்கும் பணிப்பொறுப்புகள் வழங்கப்பட்டன.

பெண்களுக்கு அனைத்து அரசுப் பணிகளிலும் 30 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, உள்ளாட்சி அமைப்புகளே அடிப்படை என்பதை நன்கு உணர்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நாட்டிலேயே முதல்முறையாக உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீட்டினை வழங்கினார்கள்.

ஏழைப் பெண்களுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்கினார்.

ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களுக்கு முதலில் பள்ளிக்கல்வி வரை இலவசக் கல்வியும், அதன் பிறகு கல்லூரிவரை இலவசக் கல்வியும் வழங்கியதும் அவரே!

ஒன்று முதல் 5ஆம் வகுப்பு வரையிலான அரசுப் பள்ளி ஆசிரியர்களாக, மகளிரை நியமித்ததும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

அதோடு மட்டுமல்லாமல், டாக்டர் முத்துலட்சுமி நினைவு மகப்பேறு உதவித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், டாக்டர் தருமாம்பாள் கைம்பெண் மறுமணத் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழைக் கைம்பெண்களின் மகள்களுக்கான திருமண உதவித்திட்டம் என எண்ணற்றத் திட்டங்களைக் கொண்டு வந்து மகளிர் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்த அரசு கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு.

மகளிர் உரிமைத் தொகை திட்டம்

இத்தகைய சிறப்பு வாய்ந்த திட்டங்களை எல்லாம், மகளிர் நலனையும், அவர்களது மேம்பாட்டினையும் கருத்தில் கொண்டு

செயல்படுத்திக்காட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையிலும், அவரது நூற்றாண்டு விழாவிற்கு மேலும், மேலும் பெருமை சேர்க்கும் விதத்திலும், இந்த மகத்தான மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்திற்குக் “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்” எனப் பெயர் சூட்டுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதி, நமது அரசு இந்தத் திட்டத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது பெயரைச் சூட்டி மகிழ்ந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் அறிவிப்பதில் பெருமையடைகிறேன்.

நமது அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதும், மகளிருக்கு நகரப் பேருந்துகளில் கட்டணம் இல்லை என்பதுதான், நான் போட்ட முதல் கையெழுத்து!

அதுவரை 40 விழுக்காடாக இருந்த பெண் பயணிகளின் எண்ணிக்கை, இப்போது 61 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இதன்மூலமாக, பெண்களுக்கான அன்றாடச் செலவுகள் பெருமளவு குறைந்துள்ளது.

வேலைக்குச் செல்லும் பெண்கள், காய்கறி, பூ, மீன் எனச் சிறு வியாபாரங்களுக்குச் செல்லும் தாய்மார்கள், வேளாண் தொழில்களுக்குச் செல்லும் சகோதரிகள், கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவிகள், உற்றார் உறவினர்களைச் சந்திக்கச் செல்லும் பெண்கள் எல்லாம், இந்தத் திட்டத்தால் இன்று பயனடைந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படி எண்ணற்றத் திட்டங்களை மகளிருக்காக நாம் செயல்படுத்தி வந்தாலும், உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையில் தரவரிசைப்படுத்தப்பட்ட 146 நாடுகளில், இந்தியா 127ஆவது இடத்தைப் பெற்றுள்ளது என்பது மிகவும் கவலைக்குரிய செய்தி.

இதற்கு முக்கியக் காரணமாக, பெண்களின் பொருளாதார நிலைமையும், கல்வி நிலையுமே காரணமாக அமைந்திருக்கிறது. இந்த இரு காரணங்களில் முன்னேற்றம் காணாமல் சமூகத்திலும், குடும்பங்களிலும் மகளிர் உரிய அங்கீகாரம் பெற இயலாது.

புதுமைப்பெண் திட்டம்

இதற்காகத்தான் நமது அரசு பெண்களின் உயர்கல்வியினை இடைவெளியின்றித் தொடர்ந்து பயில உதவும் வகையில், உயர்கல்வியினை நிறைவு செய்யும் காலம் வரை, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் “புதுமைப்பெண்” என்ற முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்தி அதன்மூலம் மாதந்தோறும் ஏறக்குறைய இரண்டு இலட்சம் மாணவியர் பயனடைந்து வருகிறார்கள்.

இந்த வரிசையில் மகளிருக்கு மகுடம் சூட்டும் வகையில் மகளிர் உரிமைத்தொகையை மாதந்தோறும் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. இல்லறப் பொறுப்புகளுடன் பணிகளுக்குச் சென்று, அதன்மூலம் தங்கள் குடும்பங்களின் உயர்வுக்கு உழைத்து வரும் மகளிரின் உழைப்பை முறையாக அங்கீகரிக்க வேண்டும்.

இதனைக் கருத்தில்கொண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு தி.மு.க. தேர்தல் அறிக்கையில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குவோம் என்று வாக்குறுதி அளித்தோம். சொன்னதைச் செய்யத் தொடங்கிவிட்டதன் அடையாளம்தான் இந்தக் கூட்டம்.

கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின் போது, “தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சமூகநீதித் திட்டங்களிலேயே ஒரு மாபெரும் முன்னெடுப்பாக, வரலாற்றில் நிலைபெறவுள்ள, ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும் “மகளிர் உரிமைத் தொகை” என்ற திட்டத்தை அறிவித்தேன்.

விலை மதிப்பில்லா உழைப்பு

மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கும் இந்தத் திட்டத்தின் மூலம், நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், வயல்வெளிகளில் வேளாண் பணிகளில் ஈடுபடும் தாய்மார்கள், அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரேநாளில் ஒன்றுக்கும் மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய விளிம்பு நிலையில் வாழும் பெண்கள் எனப் பல்வேறு வகையில் தங்கள் விலைமதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து வழங்கிவரும் பெண்கள் இந்தத் திட்டத்தில் பயன்பெறவுள்ளார்கள்.

இந்தத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்துவதற்காக 2023-2024ஆம் ஆண்டு வரவு-செலவு அறிக்கையில் ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக இன்றைய நாள் இந்தத் திட்டத்தைச் சீரிய முறையில் செயல்படுத்திட வேண்டிய வழிமுறைகள் குறித்தும், ஒவ்வொரு துறைகளின் பங்களிப்புக் குறித்தும், மாவட்ட நிருவாகத்தின் பொறுப்புகள் குறித்தும் உங்கள் அனைவருக்கும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தலைமைச் செயலகத்தில் ஆற்றவேண்டிய பணிகளான, அரசாணை

வெளியிடுதல், வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடுதல் என்று எடுத்துச்சொல்லப்பட்ட ஒவ்வொரு துறைகளுக்கான பங்களிப்பினையும் சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் உரிய முறையில் செயல்படுத்தப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இத்தகைய ஒரு மாபெரும் திட்டம் இதுவரை செயல்படுத்தப்படவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டத்தினை வெற்றிகரமான ஒரு திட்டமாகச் செயல்படுத்திக் காட்டுவதில், மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய உங்களின் பங்கு முக்கியமானது.

இந்தத் திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 15ஆம் நாளன்று தொடங்கப்படவுள்ளது. இன்னும் 2 மாத காலமே உள்ளதால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதனை தங்களது தலையாயப் பணியாகக் கொண்டு, கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு, திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட உறுதுணையாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றரைக் கோடி விண்ணப்பங்கள்

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இத்திட்டத்திற்கென வகுக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உரிய பயனாளிகளைக் கண்டறிவதில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், இந்தத் திட்டத்தின் பயன்களைப் பெற கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடி விண்ணப்பங்கள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்பங்களைப் பெற பொது விநியோகக் கடைதோறும் சிறப்பு முகாம்களை நீங்கள் நடத்திட வேண்டும். இம்முகாம்களில், கூட்ட நெரிசலைத் தவிர்க்கவும், எந்தவொரு அசம்பாவித சம்பவமும் நிகழாமல் பார்த்துக் கொள்ளவும், உரியப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் நீங்கள் செய்திடவேண்டும்.

சமுதாயத்தில் உள்ள விளிம்பு நிலை மக்களாகிய சாலையோரங்களில் குடியிருப்போர், பழங்குடியினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர ஆதரவற்றோர் இந்தத் திட்டத்தில் பயன் அடைவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிசெய்ய வேண்டும். அவர்களிடம் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற தரவுகள் இல்லையென்றாலும் கூட, அவற்றைப் பெறுவதற்கு உரிய வழிவகை செய்து, இந்த மகளிர் உதவித்தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவி புரிய வேண்டும்.

தலைமைச் செயலாளர் அவர்களது தலைமையில் மாநில அளவில் இந்தத் திட்டத்தைக் கண்காணிக்கவும், ஒருங்கிணைக்கவும் ஏற்படுத்தப்படவுள்ள மாநிலக் கண்காணிப்புக்குழு, தேவைப்படும் ஒருங்கிணைப்புப் பணிகளைச் செய்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மகத்தானத் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள மகளிரின் சமூகப் பொருளாதார நிலைமை பெருமளவில் மேம்படும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது வழியில் செயல்படும் நமது அரசு, மகளிர் வாழ்வில் என்றென்றும் ஒளியேற்றிடும் விளக்காக அமையும் என இந்த நேரத்தில் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு கோடிப் பெண்களின் வாழ்க்கைக்கு உதவி செய்யும் உரிமைத்தொகை

இதுபோன்ற சிறந்த, உன்னதமான, முன்னோடித் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டை ஒன்றிய அளவில் மட்டுமல்ல – உலக அளவிலும் முதல் மாநிலமாக மாற்றிடுவோம் – அதற்காக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபடுவோம்.

எந்தத் திட்டமாக இருந்தாலும் அதனை அறிவிப்பது எளிது. செயல்படுத்துவது கடினம். முறையாகத் திட்டமிட்டால் செயல்படுத்துவதும் எளிதாகும். என்ன செய்கிறோம் என்பதற்கு இணையானது எப்படிச் செய்கிறோம் என்பதாகும்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என்ற உன்னதமானத் திட்டத்தை எந்த விதமான புகாருக்கும் இடமளிக்காமல் செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்று அதிகாரிகள் தொடங்கி அலுவலர்கள் வரை அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இது சம்பந்தமாக ஏதாவது உதவி தேவையாக இருந்தாலோ, சந்தேகம் இருந்தாலோ, முதலமைச்சர் அலுவலகத்தையோ, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவுள்ள மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்களையோ அல்லது என்னையோ கூட எந்த நேரமானாலும் தொடர்புகொள்ளுங்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகையானது ஒரு கோடிப் பெண்களின் வாழ்க்கைக்கு உதவி செய்யும் உயிர்த் தொகை! அதனை மனதில் வைத்து அனைவரும் அக்கறையுடனும், பொறுப்புணர்வுடனும் செயல்பட வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் பயன்பெறக் கூடியவர்களின் தகுதிகள்

வ. எண்	வழிகாட்டு நெறிமுறைகள்	தகுதிகள்
1.	**விண்ணப்பிக்கும் நடைமுறைகள்**	i) குடும்பத் தலைவிகளுக்கான கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் பயன்பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்ற குடும்பங்களில்,21வயதுநிரம்பியபெண் ஒருவர் விண்ணப்பிக்கலாம். அதாவது, செப்டம்பர் 15, 2002 தேதிக்கு முன்னர் பிறந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். ii) இத்திட்டத்திற்கு பொது விநியோக நியாயவிலைக் கடைகள் ஒரு கணக்கெடுப்பு அலகாக (Enumeration unit) எடுத்துக் கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் தங்கள் குடும்ப அட்டை இருக்கும் நியாயவிலைக்கடை அமைந்திருக்கும் விண்ணப்பப் பதிவு முகாமில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். iii) ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு பயனாளி மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியானவர்.
2.	**குடும்பத்தலைவி வரையறை**	i) குடும்ப அட்டையில் பெயர் இடம் பெற்றுள்ளவர்கள் அனைவரும் ஒரு குடும்பமாகக் கருதப்படுவர். ii) ஒவ்வொரு தகுதிவாய்ந்த குடும்பத்திலும் உள்ள குடும்பத் தலைவி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன் பெற விண்ணப்பிக்கலாம். iii) குடும்ப அட்டையில் குடும்பத் தலைவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பெண் குடும்பத் தலைவியாகக் கருதப்படுவார். iv) குடும்ப அட்டையில் ஆண் குடும்பத் தலைவராகக் குறிப்பிடப்பட்டிருந்தால், அந்தக் குடும்பத் தலைவரின் மனைவி குடும்பத் தலைவியாகக் கருதப்படுவார். v) குடும்ப அட்டையில் ஆண் குடும்பத் தலைவரின் மனைவியின் பெயர் ஏதேனும் காரணத்தினால் இல்லாதபட்சத்தில், குடும்பத்திலுள்ள இதர பெண்களில் குடும்பத் தலைவியாக ஒருவர் கருதப்படுவார். ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட 21 வயது நிரம்பிய பெண்கள் இருந்தால், இத்திட்டத்தின்கீழ் பயன்பெற, ஒரு நபரைக் குடும்ப உறுப்பினர்கள் தேர்வு செய்து விண்ணப்பிக்கச் செய்யலாம். vi) திருமணமாகாத தனித்த பெண்கள், கைம்பெண்கள் மற்றும் திருநங்கைகள் தலைமையில் குடும்பங்கள் இருந்தால் அவர்களும் குடும்பத் தலைவிகளாகக் கருதப்படுவர்.

3.	**பொருளாதாரத் தகுதிகள்**	கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கும் குடும்பங்கள் கீழ்க்காணும் மூன்று பொருளாதார அளவுகோல்களுக்கு உட்பட்ட குடும்பங்களாக இருத்தல் வேண்டும். i) ஆண்டு வருமானம் ரூ.2.5 இலட்சத்திற்குக் கீழ் வருமானம் ஈட்டும் குடும்பங்கள். ii) ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நன்செய் நிலம் அல்லது பத்து ஏக்கருக்குக் குறைவாகப் புன்செய் நிலம் வைத்துள்ள குடும்பங்கள். iii) ஆண்டிற்கு வீட்டு உபயோகத்துக்கு 3,600 யூனிட்டிற்கும் குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் குடும்பங்கள். பொருளாதாரத் தகுதிகளுக்காகத் தனியாக வருமானச் சான்று அல்லது நில ஆவணங்களைப் பெற்று விண்ணப்பத்துடன் இணைக்கத் தேவையில்லை.
4.	**விதிவிலக்குகள்**	மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால் வழங்கப்படும் அறிவுசார் மாற்றுத்திறன்; கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன், முதுகுத்தண்டுவடம், தண்டுவடம் மறப்பு நோய் மற்றும் பார்க்கின்சன் நோய் மாற்றுத்திறன், தசைச்சிதைவு நோய் மாற்றுத்திறன், தொழுநோய் மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித்தொகை பெறும் உறுப்பினரைக் கொண்ட குடும்பங்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவை. இவ்வகைப்பாட்டினர், திட்டத்தின் பிற தகுதிகளைப் பூர்த்தி செய்து, எவ்விதத் தகுதியின்மை வகைப்பாட்டிலும் வரவில்லை எனில், விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்.

படமும் / செய்தியும்

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பிறந்த நாள்

சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில், 07.07.2023 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு. உ.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.எம்.வி.பிரபாகரராஜா, பெருநகரச் சென்னை மாநகராட்சித் துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

“வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்” இருந்து நீங்கள் பணியாற்றுங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
சென்னை,
இராஜா அண்ணாமலைபுரம்,
அருள்மிகு கபாலீசுவரர்
கற்பகாம்பாள்
திருமண மண்டபத்தில்,
இந்து சமய அறநிலையத் துறையின்
திருக்கோயில்கள் சார்பில்
34 இணைகளுக்கான
திருமணங்களைத்
தலைமையேற்று
நடத்தி வைத்து
ஆற்றிய உரை - 07.07.2023

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 34 இணையர்களுக்கு நம் அனைவருடைய வாழ்த்துக்களோடு இங்கு மண விழா நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருக்கோயில்களின் சார்பில், இதனை மிகச் சிறப்பாக எப்போதும் என்னால் 'செயல்பாபு' 'செயல்பாபு' என்று அழைக்கப்படக்கூடிய அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்கள் முன்னின்று இந்த நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்! இதற்காக நான் வழக்கம்போல் அவரைப் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இலக்கை நோக்கி நம்முடைய திராவிட மாடல் அரசு பீடுநடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும்!

குறிப்பாக, கல்வி - தொழில் - பொருளாதாரம் - சமூகம் - சமயம் ஆகிய அனைத்துத் துறைகளிலும், அனைத்து மக்களும் கோலோச்ச வேண்டும் என்று நினைக்கக்கூடிய

அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

எந்த மனிதரையும் சாதியின் பேரால் தள்ளி வைக்கக் கூடாது. அதற்காகத்தான் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தை நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கிறது.

இன்றைக்கு ராஜஸ்தான் மாநிலத்தில் 8 பெண்கள் உட்பட பட்டியலினத்தவர், பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்த 17 பேரை அர்ச்சகராக்கி இருக்கிறார்கள். சென்னை உயர்நீதிமன்றமும் முறையாகப் பயிற்சி பெற்றவர்களாக இருந்தால் யார் வேண்டுமானாலும் அர்ச்சகராகலாம், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கருத்தியல் என்பது இதுதான். நம்முடைய ஆட்சியின் நோக்கத்தை இன்றைக்கு நீதிமன்றமும் அங்கீகரிக்கக்கூடிய காலமாக ஏன், இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களும் அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை அமைந்திருக்கிறது.

அனைத்துத் துறைகளும் வளர வேண்டும் என்ற அடிப்படையில் நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை எல்லோரும் நன்றாக அறிவீர்கள். அதில் இந்து சமய அறநிலையைத் துறையும் மற்ற துறைகளோடு போட்டி போட்டுக்கொண்டு மிக, மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இன்றைக்கு நாடு நன்றாக உணர்ந்து கொண்டிருக்கிறது.

கோயில்கள் மிகச் சிறப்பாகவும் சீராகவும் நடைபெற வேண்டும் என்பதற்காகதான் இந்து சமய அறநிலையத் துறையை உருவாக்கியதே நம்முடைய நீதிக்கட்சிதான் என்பதை நாம் யாரும் மறந்துவிடக் கூடாது.

'கோவில் கூடாது என்பதல்ல, அது கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது' என்று பராசக்தி திரைப்படத்தில் அன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் வசனம் எழுதினார். அப்படிக் கோயில்களில் எந்த தவறுகளும் நடந்துவிடக் கூடாது என்பதில் தலைவர் கலைஞர் அவர்கள் எந்த அளவுக்கு மிகுந்த எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் செயல்பட்டார் என்பதை உணர்ந்து இன்றைக்குத் திராவிட மாடல் அரசு அதே வழியில் பின்பற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். தலைவர் கலைஞருடைய ஆட்சிக்காலம் என்பது அனைத்துத் துறைகளிலும் பொற்காலமாக இருந்ததைப் போலவே, இந்து சமய அறநிலையத் துறையிலும் இன்றைக்கு ஒரு பொற்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

நான் பெருமையோடு சில செய்திகளை, சாதனைகளைப் பட்டியலிட விரும்புகிறேன். நம்முடைய கழக ஆட்சி மலர்ந்த பிறகு, திருக்கோயில்களுக்கு ஏராளமான திருப்பணிகள், வல்லுநர் குழுவின் ஆலோசனைப்படி செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் 43 ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன. பழமையான கோயில்களை, பழமை மாறாமல் சீர்செய்து குடமுழுக்கு விழாவை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேபோல் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு நவீன வசதிகள் கொண்ட அடிப்படைப் பணிகள் செய்து தரப்பட்டுள்ளன. திருக்கோயில் பணிகளை மேற்கொள்ள மண்டல, மாநில அளவிலான வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்களது ஒப்புதல் பெற்ற பிறகுதான் செயல்கள் எல்லாம் செய்யப்படுகின்றன. தற்போது வரை 3,986 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்வதற்கு வல்லுநர் குழுவால் அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

❖ 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களைப் பழமை மாறாமல் சீர்செய்வதற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

❖ திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களைச் சீரமைக்கும் வகையில் கருத்துருக்களை வழங்குவதற்கு சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 4 ஆலோசகர்களும், திருக்கோயில்களிலுள்ள பழமையான மூலிகை ஓவியங்களைப் பாதுகாக்கும் வகையிலான வழிமுறைகளை வழங்குவதற்குத் தனி ஆலோசகரும் நியமிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆதிதிராவிடர், பழங்குடியினர்கள் வசிக்கும் பகுதியிலுள்ள 1,250 திருக்கோயில்கள், 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிகளையும் சேர்த்து, இந்த நிதியாண்டில் மட்டும் 5,078 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அதனை நான் சில மாதங்களுக்கு முன்பு அறிவிப்பாக வெளியிட்டேன்.

கடந்த காலத்தில் 1,000 கிராமப்புறத் திருக்கோயில்கள், இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர், பழங்குடியினர்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள 1,000 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள தலா ரூ.1 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

நமது அரசு பொறுப்பேற்ற பின், திருக்கோயில்களின் எண்ணிக்கையை 1,250 ஆகவும் நிதியுதவியை ரூ.2 இலட்சமாகவும் உயர்த்தி அறிவிக்கப்பட்டது. இதற்காக ரூ.50 கோடிக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

ஏழை இணையர்க்கு ரூ.50,000 மதிப்புள்ள சீர்வரிசைகளோடு திருமணம் நடத்தி வைத்தல், 2 ஆண்டுகளில் 836 கோயில்களுக்குத் திருக்குடமுழுக்கு, 764 கோயில்களில் அன்னதானம், 8 கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம், 15 கோயில்களில் மருத்துவ மையம், 15,000 கோயில்களில் ஒருகால பூஜை திட்டம், திருத்தேர் மராமத்து, புதிய திருத்தேர் உருவாக்குதல் என இன்னும் பல பணிகள் முழு வீச்சில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் நாம் மேற்கொண்டு வருகிறோம். இவை அனைத்தும் ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் நிதியோடு அதிக இடங்களில் விரிவுப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் மூலமாகக் கோயில்கள் சீரமைகின்றன. பக்தர்கள் மனநிறைவை அடைகிறார்கள். மகிழ்ச்சி அடைகிறார்கள். அதைத்தான் நம்முடைய அரசும் விரும்புகிறது. இதுதான் திராவிட மாடல் அரசினுடைய நோக்கம்!

மறைந்த பெரியவர் - தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் 'கோயிலைச் சுற்றிலும் மக்கள். மக்களைச் சுற்றிலும் கோவில்கள்' என்று சொல்வார்கள். மக்களுக்கு நன்மைகள் செய்யவே கோவில்கள் இருக்கின்றன.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று சொல்வது இதன் அடிப்படையில்தான். அந்த வகையில்தான் 34 இணையருக்குத் திருக்கோயில்கள் சார்பில் திருமண விழாக்கள் நடத்தி வைக்கப்படுகின்றன.

இந்தத் துறைக்கு இந்து சமயத் துறை என்று பெயரல்ல, இந்து சமய அறநிலையத் துறை என்று பெயர். அதனால்தான் அறம் சார்ந்த தொண்டுகள் செய்யப்படுகின்றன. இதுபோன்ற அறப்பணிகளைத் தொடர்ந்து செய்யுங்கள் என்று நான் அனைவரையும் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை உங்களோடு சேர்த்து, நானும் மனதார, நெஞ்சார வாழ்த்துகிறேன். அதேநேரத்தில், நம்முடைய மணமக்களை நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கிற குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள், தமிழ் உணர்வை அந்தக் குழந்தைகளுக்கு ஊட்டுங்கள்.

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், "வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்" இருந்து நீங்கள் பாடுபடுங்கள், பணியாற்றுங்கள், உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டு, வாழ்க மணமக்கள், வாழ்க மணமக்கள் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மண்ணையும், மக்களையும் காப்பதற்கான கடமை வேளாண் பெருங்குடி மக்களுக்குக் காத்திருக்கிறது

வேளாண் வணிகத் திருவிழா 2023-ஐ தொடங்கி வைத்து, விழா கண்காட்சி அரங்குகளைத் திறந்து வைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியில் சிறந்து விளங்கிய விவசாயிகளுக்கு விருதுகள் வழங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை - 08.07.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 08.07.2023 அன்று, சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் வேளாண் வணிகத் திருவிழா 2023-யைத் தொடங்கி வைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகளைத் திறந்து வைத்து, வர்த்தகத்தில் சிறந்து விளங்கும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு விருதுகள் வழங்கினார்.

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நலத்திட்டங்களை இவ்வரசு ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் அறிவித்து வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றது. மாநிலத்தின் பொருளாதாரம் வளரும்போது விவசாயிகளின் வாழ்வும் அதே அளவு வளர்ந்து செழிக்க வேண்டும் என்பதே அரசின் குறிக்கோள்.

மாநில அளவில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான கண்காட்சி வேளாண்–உழவர் நலத்துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பு

2023-2024ஆம் ஆண்டிற்கான வேளாண்மை-உழவர் நலத்துறையின் மானியக் கோரிக்கையில்,

மாநில அளவில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான (Farmer Producer Organisation) கண்காட்சி சென்னையில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் என்பவை வேளாண் தொழிலை அதன் அடுத்தக்கட்ட வளர்ச்சிக்கும், விவசாய மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை வணிகப்படுத்துதலுக்கும் அடித்தளமாக அமைந்து வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வேளாண் வணிகத் திருவிழா தொடக்கம்

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வணிக ரீதியாக இலாபகரமாக இயங்குவதற்கு, தமிழ்நாடு அரசு பயிற்சியும், நிதிஉதவியும் வழங்கி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, வேளாண் வணிகத் திருவிழா-2023 சென்னை வர்த்தக மையத்தில் 08.07.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார்.

கண்காட்சி அரங்குகளின் விவரங்கள்

இவ்வேளாண் வணிகத் திருவிழாவில் 176 கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், 86 அரங்குகளில் 188 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைபொருட்களும், 90 அரங்குகளில் வேளாண்மை சார்ந்த பல்வேறு துறைகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA), நபார்டு வங்கி (NABARD), தொழில் முனைவோர்கள், பிற மாநிலங்களில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள், வங்கிகள் போன்ற பல்வேறு அமைப்புகள் சார்ந்த கண்காட்சிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வரங்குகளில் சிறுதானியங்கள், பாரம்பரிய அரிசி வகைகள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பனை சார்ந்த பொருட்கள், நறுமணப் பொருட்கள், காய்கறிகள், பழங்கள், பூக்கள், சிறுதானியங்களில் மதிப்புக் கூட்டப்பட்ட தின்பண்டங்கள், உடனடியாக சமைக்கும் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விளைபொருட்கள் பொதுமக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு விருதுகள்

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் “ஆளுமையில் சிறந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கான விருதினைப்” புதுக்கோட்டை இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், ஈரோடு - கழனி உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், “வர்த்தகத்தில் சிறந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கான விருது” கடலூர் மாவட்டம், மங்களூர் தானியப் பயிர்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், சேலம் - வீரபாண்டி களஞ்சிய ஜீவிதம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், தூத்துக்குடி பயறு உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து, 2022-2023ஆம் ஆண்டில் வேளாண் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் கடலூர் மாவட்டம், பண்ருட்டியை சேர்ந்த விவசாயி திரு.ம.இராமகிருஷ்ணன் அவர்களுக்கு விருதும், இரண்டு இலட்சம் ரூபாய்க்கான பரிசுத் தொகையும் வழங்கப்பட்டன.

முக்கிய தலைப்புகளில் கருத்தரங்குகள்

விவசாயம், விவசாயம் சார்ந்த வணிகம் குறித்த விழிப்புணர்வையும் தொழில் வாய்ப்புகள் குறித்தும் விவசாயிகள், பொதுமக்கள் தகவல்களைப் பெறுவதற்காகத் துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்கங்கள் இரண்டு நாட்கள் நடைபெற உள்ளன.

வேளாண் வணிகத் திருவிழாவில் இன்றையதினம் மாலை, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களைத் திறமையான முறையில் நிருவகித்தல், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான நிதியுதவித் திட்டங்கள் தொடர்பான கருத்தரங்குகளில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயனடைய உள்ளனர்.

அதைத்தொடர்ந்து 09.07.2023 அன்று அறுவடைக்குப் பின் மேலாண்மை, மதிப்புக்கூட்டுதல், ஏற்றுமதிக்கான சந்தை வாய்ப்புகள், வெற்றிபெற்ற உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் கடந்து வந்த பாதை, டிஜிட்டல் மார்க்கெட்டிங், சந்தை வாய்ப்புகள் குறித்த கருத்தரங்குகளும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களில் பொருட்களின் விற்பனையினை எளிதாக்கும் வகையில், வாங்குபவர்-விற்பனையாளர் சந்திப்பும் (Buyers-Sellers Meet) நடைபெற உள்ளன. இவ்வேளாண் வணிகத்

திருவிழாவில் சுமார் 5,000க்கும் மேற்பட்ட விவசாயிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைவர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான வேளாண் வணிகத் திருவிழாவைத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்!

இதனை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களையும் அவருக்குத் துணையாக நின்று செயல்படக்கூடிய துறை சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் அத்தனை பேரையும் நான் இந்த நேரத்தில் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண் துறை வளர்ச்சி என்பது மக்களின் வாழ்வோடும் - உயிரோடும் தொடர்புடையது. ஒரு நாட்டின் செழிப்பின் அளவுகோல், வேளாண் துறை!

“வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்” - என்று பாடினார் அவ்வையார் அவர்கள்!

எனவே, ஆட்சியாளர்களாகிய நாங்கள் பெயர்பெற வேண்டுமென்று சொன்னால், உழவர்கள் உரிய மரியாதையையும், சிறப்பையும், வளத்தையும் பெற்றாக வேண்டும்.

நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த இரண்டாண்டு காலமாக உழவர்களுடைய உள்ளத்தில் மகிழ்ச்சியை நாம் பார்க்கிறோம்.

பல்வேறு புதிய திட்டங்கள்

கழக அரசு அமைந்ததும், வேளாண் துறைக்குக் கூடுதல் முக்கியத்துவம் தரக்கூடிய வகையில் வேளாண்மைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இதனை மற்றுமொரு துறை என்று நினைக்காமல் வேளாண்மையை முதன்மையான துறையாக நாங்கள் நினைக்கின்ற காரணத்தால்தான், இத்தகைய வளர்ச்சியை எட்ட முடிந்தது. பல்வேறு புதிய திட்டங்களை நாம் தொடங்கி இருக்கிறோம்.

- கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்
- முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்

- வேளாண் நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்
- நீர்ப்பாசன நவீனமயமாக்கல் திட்டம்
- வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமை
- மண்வள மேலாண்மை
- இளைஞர்களைத் தொழில் முனைவோர் ஆக்குதல்

- ஆகிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மண்ணும் செழித்துள்ளது. மக்களும் செழித்துள்ளார்கள். பாசனப் பரப்பு அதிகமாகி உள்ளது. உற்பத்தியும் அதிகமாகி இருக்கிறது. கடந்த இரண்டாண்டு காலத்தில் வேளாண்மை - உழவர் நலத்துறை செய்த பல்வேறு செயல் திட்டங்கள்தான் இதற்கு முக்கியக் காரணமாக அமைந்திருக்கிறது!

- உணவு தானிய உற்பத்தியில் மகத்தான சாதனை செய்யப்பட்டுள்ளது. 120 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை விட 11 விழுக்காடு அதிகம்.
- சுமார் 79 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தியும்,
- 36 இலட்சம் மெட்ரிக் டன் சிறுதானிய உற்பத்தியும்,
- 5 இலட்சம் மெட்ரிக் டன் பயறு உற்பத்தியும் செய்யப்பட்டுள்ளன. இவை முந்தைய ஆண்டை விட 4 விழுக்காடு அதிகம்.
- காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி செய்ய ஜூன் 12ஆம் நாளே அல்லது அதற்கு முன்பாகவோ மேட்டூர் அணையைத் திறந்து விட்டிருக்கிறோம். இது ஒரு மிகப் பெரிய சாதனை என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
- காவிரி டெல்டா உழவர்களுக்காக ரூ.61 கோடிக்குக் குறுவைத் தொகுப்பு உதவித் திட்டத்தை வழங்கினோம்.
- அரிசி மட்டுமல்லாமல், சிறுதானிய உற்பத்தியிலும், பயறு உற்பத்தியிலும் சாதனை படைத்திருக்கிறோம்.
- பருத்தி, தென்னை என அனைத்திலும் கவனம் குவிக்கப்பட்டிருக்கிறது.
- உழவர்களுக்கு வேளாண் கருவிகள் வழங்குதல், கடன் வழங்குதல், மானியம் வழங்குதல் ஆகியவற்றில் அக்கறையோடு செயல்பட்டோம்.

வேளாண்மைப் புரட்சி

காவிரி டெல்டா பகுதியை அக்கறையோடு கவனித்தோம். காவிரி டெல்டா பகுதியின் வேளாண் வளர்ச்சிக்கும் இப்பகுதியில் உள்ள ஆறுகள், கால்வாய்களைத் தூர்வாருவதற்கும் முன்னுரிமை அளித்திருக்கிறோம். இவை அனைத்தும் சேர்ந்து தமிழ்நாட்டில் மாபெரும் வேளாண் புரட்சியை நடத்தி உள்ளன. இதற்கெல்லாம் மகுடம் வைக்கக்கூடிய விழாவாக வேளாண் வணிகத் திருவிழா இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வேளாண்மை என்பது வாழ்க்கையாக, பண்பாடாக இருந்தாலும், அது லாபம் தரும் தொழிலாக முழுமையாக இன்னும் மாறவில்லை. அப்படி உயர்த்தப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு நினைப்பதால்தான் வேளாண் வணிகத் திருவிழாவை நடத்துகிறது. வெறும் "அக்ரி எக்ஸ்போ"-ஆக இல்லாமல், இது "அக்ரி பிசினஸ் எக்ஸ்போ"-ஆக நடத்தப்படுகிறது.

உழவர்கள் உற்பத்தியாளர்களாக மட்டும் காலமெல்லாம் இருந்துவிடக்கூடாது. அவர்களே விற்பனையாளர்களாக மாற வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்துடன்தான் உழவர் சந்தைகளைத் தலைவர் கலைஞர் அவர்கள்

முதலமைச்சராக இருந்தபோது அமைத்துக் கொடுத்தார்கள். இடைத்தரகர்கள் இல்லாமல் வேளாண் பொருட்களை உழவர்கள் விற்பனை செய்து பயன்பெற்றார்கள்.

அடுத்து வந்த ஆட்சியாளர்கள் அதனை முறையாகச் செயல்படுத்தி இருந்தால் உழவர்களுடைய வாழ்வில் மாற்றம் ஏற்பட்டிருக்கும். கழக அரசு அமைந்ததும், சுமார் 100 உழவர் சந்தைகளை மீண்டும் புத்தொளி பெற வைத்தோம். புதிதாக 10 உழவர் சந்தைகளை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. உழவர் சந்தைகளில் இருக்கும் காய்கறிக் கழிவுகளை உரமாக்குவதற்கு அலகுகள் நிறுவப்பட்டு உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் அடுத்த கட்டமாக, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிறுவனங்களுக்கு மூலதன உதவியும், கடன் உத்தரவாதமும் தரப்பட்டுள்ளன. 140 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.12.45 கோடி நிதி உதவி அரசால் தரப்பட்டுள்ளன. இவர்களது உற்பத்திப் பொருட்கள் மாநகராட்சி அங்காடிகளில், விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. கூட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.

வேளாண் துறையில், உழவர்களுக்காகச் செய்யப்பட்ட மாபெரும் முன்னெடுப்பு இது. வேளாண் ஏற்றுமதிகளை அதிகப்படுத்த திட்டமிட்டுள்ளோம். அதற்காகவே, மின்னணு மயமாக்கலும் நடந்து வருகிறது. இவை அனைத்தும் உழவர்களின் வாழ்க்கையை உயர்த்தும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

வேளாண்மையில் நவீனத் தொழில்நுட்பங்கள்

மாபெரும் தொழில் நிறுவனங்கள் கண்காட்சிகள் நடத்தும் இடத்தில் வேளாண் கண்காட்சி நடத்தப்படுவது உள்ளபடி சிறப்பானது! இது ஒரு மிகப்பெரிய சாதனை! இது ஒரு மகத்தானது!

பாசனப் பரப்பு அதிகமாக வேண்டும். அதன்மூலமாக உற்பத்திப் பெருக வேண்டும். உற்பத்தியான பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும். உரிய விலையின் பயன்கள் உழவர்களுக்குக் கிடைக்க வேண்டும். தரமான வேளாண் பொருட்கள் மக்களுக்கு உரிய விலையில் கிடைக்க வேண்டும். ஏற்றுமதி பெருக வேண்டும்.

இத்தகைய வேளாண் புரட்சியை நாம் நடத்தி வருகிறோம். அதற்காக எத்தனையோ

திட்டங்களை நாம் தீட்டித் தந்திருக்கிறோம். இன்னும் பல திட்டங்களை அறிமுகம் செய்ய இருக்கிறோம்.

வேளாண்மையில், நவீனத் தொழில்நுட்பங்கள் அறிமுகம் செய்யப்பட வேண்டும். இரண்டு ஆண்டுகளாக நல்ல மழை பெய்து வருகிறது. தண்ணீர்ப் பிரச்சினை இல்லை. வேளாண் பணியாளர்கள் கிடைக்கிறார்கள். இவை அனைத்தையும் உழவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பருவநிலை மாற்றம், உணவுத் தேவை அதிகரிப்பு ஆகிய இரண்டையும் சமாளிக்கும் வகையில் நம்முடைய வேளாண் முயற்சிகள் அமைய வேண்டும்.

துல்லியமான வேளாண்மை முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஸ்மார்ட் போனைப் பயன்படுத்திப் பயிர் பாசன முறையைக் கண்காணித்தல், ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்துதல் ஆகியவை எல்லாம் இப்போது பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

வேளாண் துறையில் உற்பத்தியை அதிகரிக்க நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லும்போது, உழவர்களுக்குத் தொழில்நுட்பம் தெரிந்திருக்க வேண்டும். அதிகாரிகளுக்கு வேளாண்மை தெரிந்திருக்க வேண்டும். இவை இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டால், வேளாண்மை என்பது வர்த்தகத் தொழிலாக மாறும். அதற்கு இது போன்ற கண்காட்சிகள் அடித்தளம் அமைக்கும்.

இது போன்ற கண்காட்சிகளைத் தொடர்ந்து நடத்துங்கள். வேளாண் விற்பனை, வேளாண் வணிகத் துறை அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும் இது போன்ற கண்காட்சிகளால் விளை பொருட்களுக்கு அதிக சந்தை வாய்ப்புக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

வேளாண் சட்டங்கள்

இப்படி, வேளாண் பெருங்குடி மக்களின் நலன் போற்றும் அரசாக நம்முடைய அரசு இருந்து வருகிறது. ஆனால், உழவர்களுக்கு எதிராக 3 வேளாண் சட்டங்களைக் கொண்டுவந்து அவர்களை மாதக் கணக்கில் தகிக்கும் வெயிலிலும், நடுங்கும் குளிரிலும், தலைநகரில் போராட வைத்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. பல நூறு பேர் உயிரிழந்த பின்னும், அவர்களின் உறுதியைக் குறையாத கண்ட பின்னர்தான், அவர்கள் பின் வாங்கினார்கள். இதுதான் உழவர் விரோத ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஆனால், தி.மு.க. அரசு எப்பொழுதும் உழவர்களின் நண்பனாக இருக்கும்.

அதனால்தான் 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும், ஒரே கையெழுத்தில், ரூ.7,000 கோடி வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்தார் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அவர் வழியில் நடக்கும் நம்முடைய அரசு ஆட்சிக்கு வந்த ஒன்றரை ஆண்டுகளில், நமது அரசும் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான இலவச மின் இணைப்புக்களை உழவர்களுக்கு வழங்கி வரலாற்றுச் சாதனை படைத்திருக்கிறது.

இவையெல்லாவற்றையும் வேளாண் பெருங்குடி மக்களும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில், இந்த மண்ணையும், மக்களையும் காப்பதற்கான கடமை அவர்களுக்குக் காத்திருக்கிறது. அதற்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

வேளாண் அறிவு என்பது உழவர்கள் மட்டுமல்ல, அனைத்து மக்களும் பெற்றாக வேண்டும்.

மண்ணைக் காப்போம்.
மக்களைக் காப்போம்.

நன்றி வணக்கம்!

படமும்/செய்தியும்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளை 07.07.2023 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை, திரு.வி.க. நகரில் ரூ.69.78 கோடிச் செலவில் "செங்கைச் சிவம் பாலம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்து ஆற்றிய உரை – 01.07.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 01.07.2023 அன்று, ரூ.69.78 கோடிச் செலவில் கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் உள்ள அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கௌதமபுரம் அடுக்குமாடிக் குடியிருப்பில் பூங்கா, நூலகக் கட்டடம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் கட்டடங்கள், திரு.வி.க.நகர் மண்டலம், ஸ்டீபன்சன் சாலையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள "செங்கை சிவம் பாலம்" ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களைத் திறந்து வைத்தல்

கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட ஜி.கே. எம். காலனி 12ஆவது தெருவில் உள்ள அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி அறக்கட்டளையின் நிதியுதவியுடன் ரூ.1 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள நவீன வசதிகளுடன் கூடிய 3 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். மேலும், பள்ளி மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி உபகரணங்களை வழங்கினார்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கௌதமபுரம் அடுக்குமாடிக் குடியிருப்பில் முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்தல்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கௌதமபுரம் குடியிருப்புப் பகுதி

திறந்தவெளி நிலத்தில் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.80.69 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா, மாநிலங்களவை உறுப்பினர் திரு.என்.ஆர்.இளங்கோ அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரமணா நகர், கௌதமபுரத்தில் ரூ.40 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பகுதி நேர நூலகக் கட்டடம், ரூ.74.70 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 2 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் கட்டடங்கள், என மொத்தம் ரூ.1.95 கோடிச் செலவிலான முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

ஸ்டீபன்சன் சாலையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள "செங்கை சிவம் பாலம்" திறந்து வைத்தல்

பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க.நகர் மண்டலம், புளியந்தோப்பு, பெரம்பூர் பகுதிகளை இணைக்கும் வகையில், ஸ்டீபன்சன் சாலையில் மூலதன மானிய நிதி, இதரத் திட்டங்களின் நிதியின்கீழ், ரூ.52.90 கோடிச் செலவில் ஓட்டேரி நல்லா கால்வாயின் குறுக்கே பழுதடைந்த பழைய பாலத்தை இடித்துவிட்டு, 282 மீட்டர் நீளம் மற்றும் 22.70 மீட்டர் அகலத்தில் கட்டப்பட்டுள்ள புதிய பாலம், ரூ.7.13 கோடிச் செலவில் 548 மீட்டர் நீளத்தில் பாலத்திற்கான சாலை, அணுகு சாலை, மையத்தடுப்பு, இருபுறமும் நடைபாதை, மையத்தடுப்பில் வண்ணப் பூக்களுக்கான செடிகள் நடுதல் போன்ற பணிகள், ரூ.6.8 கோடிச் செலவில் மழைநீர் வடிகால் பணிகள் என மொத்தம் 830 மீட்டர் நீளத்தில் ரூ.66.83 கோடிச் செலவில் இப்புதிய பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

மழைக்காலங்களில் இச்சாலையில் தேங்கும் மழைநீர் வடியும் வண்ணம் குக்ஸ் சாலை சந்திப்பிலிருந்து ஓட்டேரி நல்லா கால்வாய் வரையிலும், புளியந்தோப்பு பகுதியில் தேங்கும் மழைநீர் வடியும் வண்ணம் டாக்டர் அம்பேத்கர் சாலையிலிருந்து ஓட்டேரி நல்லா கால்வாய் வரையிலும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஸ்டீபன்சன் சாலையில் கட்டப்பட்டுள்ள புதிய பாலத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செங்கை சிவம் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் “செங்கை சிவம் பாலம்” என்று பெயர் சூட்டி, பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.

இந்தப் பாலம் கட்டப்பட்டதன் மூலம், பெரம்பூர், ஓட்டேரி, புளியந்தோப்பு, புரசைவாக்கம், வேப்பேரி பகுதிகளில் உள்ள 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பெரிதும் பயனடைவதோடு, நாள்தோறும் சுமார் 70 ஆயிரம் வாகன ஓட்டிகள் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஸ்டீபன்சன் சாலையில் ஓட்டேரி நல்லா கால்வாயின் குறுக்கே இருந்த பழுதடைந்த பாலத்தை இடித்து அகற்றிவிட்டு, ஓர் புதிய பாலத்தை அமைத்திட வேண்டும் என்று முடிவெடுத்து, அதையும் குறித்த காலத்தில் கட்டிமுடித்து அந்தப் பாலத்தினுடைய திறப்பு விழா நிகழ்ச்சி இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

ஓரிரு மாதங்களுக்கு முன்பு கொளத்தூரையும்-வில்லிவாக்கத்தையும், வில்லிவாக்கத்தையும்-

அண்ணா நகரையும் இணைக்கக்கூடிய ஒரு மேம்பாலத்தை நான் திறந்து வைத்தேன். அப்படித் திறந்து வைத்த நேரத்தில் நம்முடைய மாவட்ட செயலாளர் மாண்புமிகு அமைச்சர் திரு. சேகர் பாபு அவர்களும், மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறையினுடைய அமைச்சர் திரு. நேரு அவர்களும், ஸ்டிபன்சன் சாலையிலே புதிதாகக் கட்டப்பட்டு இருக்கக்கூடிய பாலம் தயாராக இருக்கிறது, நீங்கள் உடனடியாகத் தேதி தந்தால் அதை திறந்து விடலாம் என்று என்னிடத்தில் எடுத்துச் சொன்னார்கள். நானும் உடனடியாக அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன். அப்போது அவர்கள் அந்தப் பாலத்திற்கு யாருடைய பெயரைச் சூட்டலாம் என்று ஒரு வினாவை என்னிடத்தில் தொடுத்தார்கள். நான் உடனடியாக சொன்னேன். இந்தப் பெரம்பூர்ப் பகுதியில் அன்றைக்கு திரு.வி.க. நகர் பகுதி, பெரம்பூர்ப் பகுதி என்று ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக இருந்த அந்த நேரத்தில், இந்தப் பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறை இந்தத் தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றி மறைந்தாலும் நம்முடைய நெஞ்சமெல்லாம் இன்றைக்கும் நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய செங்கைச் சிவம் அவர்களுடைய பெயரைச் சூட்டலாம் என்று நான் அப்போது சொன்னேன். உடனடியாக அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள். இந்தப் பாலத் திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன் என்று நான் சொன்னேன். அதைவிடச் செங்கை சிவம் அவருடைய பெயரால் அமைந்திருக்கக்கூடிய பாலத் திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் அளவு கடந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

ஓரிரு மாதங்களுக்கு முன்பு ஏற்கெனவே நான் சொன்னபடி அந்தப் பாலத்தைத் திறந்து வைத்தபோது, அந்தப் பாலத்திற்கு தியாக மறவன் சிட்டிபாபு பெயர் சூட்டப்பட்டது. இப்படிப் பல்வேறு பாலங்களுக்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்த நேரத்தில் இதே சென்னை மாநகரத்தில் பல்வேறு பாலங்கள் திறந்து வைக்கப்பட்டபோது, பல்வேறு மேம்பாலங்களாக இருந்தாலும், சுரங்கப்பாதைகளாக இருந்தாலும், கட்டடங்களாக இருந்தாலும், அந்தக் கட்டடங்களுக்கு, அந்தப் பாலங்களுக்கு, சுரங்கப்பாதைகளுக்கெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த இயக்கத்திற்காக, குறிப்பாகத் திராவிட இயக்கத்திற்காக உழைத்து பல்வேறு தியாகங்களைச் செய்திருக்கக்கூடிய இந்தத் தியாகச் செம்மல்கள் பெயர்களையெல்லாம் சூட்டியிருக்கிறார்கள். அந்த நினைவுகளை எல்லாம் மனதில் வைத்துதான் இந்தப் பெரம்பூர்த் தொகுதியில் கழகம் வளர்க்க, கழகம் வளர, இந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு அரும்பணியாற்றிய, அந்தப் பணிகள் எல்லாம் இன்றைக்கும் என்னுடைய நினைவில் இருக்கின்றன. 1989இல் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, நானும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவன். 1996இல் சட்டமன்ற உறுப்பினராகச் செங்கைச் சிவம் அவர்கள் சபையிலிருந்து பணியாற்றியபோது நானும் சபையிலிருந்து சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியவன். அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, இந்தத் தொகுதியினுடைய வளர்ச்சிக்கு இந்தத் தொகுதியினுடைய முன்னேற்றத்திற்கு, இந்தத் தொகுதி மக்களுடைய தேவைகளுக்கு, எண்ணங்களுக்கு ஏற்ற

வகையில், மிக மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர். ஒரு சட்டமன்ற உறுப்பினர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு அடையாளமாக இருந்து பணியாற்றியவர் செங்கைச் சிவம் அவர்கள். அவருடைய பெயரில் இந்தப் பாலம் அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

நீங்கள் சென்னையை வலம் வந்து பார்த்தால், நீங்கள் பார்க்கக்கூடிய பெரும்பாலான பாலங்கள் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக் காலத்தில், கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் உருவாக்கப்பட்டவை!

அண்ணா சாலையில் ஒரு காலத்தில் ஜெமினி சர்க்கில் என்று சொல்லக்கூடிய ஒரு இடம். அது இன்றைக்கு அண்ணா மேம்பாலம் என்று சொல்லக்கூடிய அளவிற்குத் தலைவர் கலைஞர் அவர்கள் மேம்பாலத்தை அந்த இடத்தில் உருவாக்கி, அண்ணா மேம்பாலம் என்று அதற்குப் பெயர் சூட்டினார்கள். இன்றோடு அந்த பாலம் 50 ஆண்டு கால வரலாற்றைப் பெற்றிருக்கிறது.

அதேபோல, அண்ணா சாலையிலிருந்து, சைதாப்பேட்டையைக் கடந்து மீனம்பாக்கத்திற்குப் போகின்றபோது இடையில் கத்திபாரா பாலம். அந்தப் பாலமும் நம்முடைய கழக ஆட்சிக் காலத்தில்தான் தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கோயம்பேடு பாலமாக இருந்தாலும் சரி, செம்மொழிப் பூங்காவாக இருந்தாலும் சரி, ஏன் வள்ளுவர் கோட்டமாக இருந்தாலும் சரி, நெம்மேலியில் அமைந்திருக்கக்கூடிய கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டமாக இருந்தாலும் சரி, டைடல் பார்க்காக இருந்தாலும் சரி.

இன்றைக்கு ஒரு பெரிய அரசு மருத்துவமனையாக இருக்கும் ஓமந்தூரார் பெயரில் அமைந்திருக்கக்கூடிய மருத்துவமனை, தலைமைச் செயலகம் அமையவேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள் பார்த்து, பார்த்துக் கட்டினார்கள். அது அரசியல் சூழ்நிலையின் காரணமாகப் பெயர் மாற்றப்பட்டது. அதற்குள் நான் அதிகம் செல்ல விரும்பவில்லை. இது அரசு நிகழ்ச்சி.

மெட்ரோ இரயில் திட்டம், நம்முடைய ஆட்சி காலத்தில்தான் உருவாக்கப்பட்டு இன்றைக்கு வெளிநாடுகளுக்குப் போட்டிப் போடக்கூடிய அளவுக்கு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

கோயம்பேடு காய்கறி அங்காடி, கோயம்பேடு பேருந்து நிலையம், அடையாறு ஐ.டி. காரிடார், நாமக்கல் கவிஞர் மாளிகை, பாடியில் அமைந்திருக்கக்கூடிய மேம்பாலம், மீனம்பாக்கத்தில் இருக்கக்கூடிய பாலம், மூலக்கடையில் இருக்கக்கூடிய பாலம், மேற்கு அண்ணாநகர் பாலம், வியாசர்பாடி பாலம், தொல்காப்பியப் பூங்கா பாலம் தென்சென்னை முழுக்க ரூ.1,400 கோடி மதிப்பில் மழைநீர்வடிகால் திட்டங்கள் - இப்படித் திரும்பிய பக்கம் எல்லாம்

சென்னையின் தேவையைத் தீர்த்து வைத்தவர் இன்றைக்கு நூற்றாண்டு விழா காணக்கூடிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். 50 ஆண்டுகளுக்கு முன்பு அவர் கட்டிய அண்ணா மேம்பாலம்தான் இன்றைக்கு அரை நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. வாழ்ந்து நிறைந்ததற்குப் பிறகும் பயன்தரத்தக்க எத்தனையோ நல்ல பல திட்டங்களை நமக்காக உருவாக்கிக் கொடுத்தவர் தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அவருடைய வழித்தடத்தில்தான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி இன்றைக்குச் சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நம்முடைய சென்னையின் மேம்பாட்டிற்காக ஏராளமான திட்டங்களை நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மாநகரப் பகுதிகளில் மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொண்டு வெள்ளம் வருகிறபோதெல்லாம் மக்கள் எந்த அளவுக்குத் துன்பப்படுகிறார்கள், துயரப்படுகிறார்கள் என்பதை அறிந்து அதற்கேற்றவகையில் அந்த வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்காக ரூ.3,184 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்றைக்கு அந்தப் பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பணிகள் அதனுடைய பயனாக, சென்ற ஆண்டு சென்னை மாநகரம் வெள்ளத்திலிருந்து எப்படி காப்பாற்றப்பட்டது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். முன்பெல்லாம், மழை பெய்தால், எங்குப் பார்த்தாலும் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும், வீட்டிற்குள் தண்ணீர் இருக்கும். மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்திப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சென்று பத்திரப்படுத்துவோம். அங்கு சென்று அவர்களுக்குத் தேவையான உணவுகளை வழங்குவோம். இது ஒவ்வொரு மழைக்காலத்தில் வழக்கமாக இருந்து கொண்டிருந்தது. ஆனால் அந்த நிலையை மாற்றிய ஆட்சிதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த மழைநீர் வடிகால் பணிகள் இன்றைக்கு வேக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் சில பகுதிகள் மீதமிருக்கின்றன. அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், அதையும் தாண்டி மெட்ரோ திட்டம் வேறு செயல்படுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தினால்தான் சில சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால் அந்தச் சாலைகளை மேற்கொள்ளப்படக்கூடிய பணிகள்

எல்லாம் விரைவில் சரிசெய்யவேண்டும், அதை ஒழுங்குபடுத்தவேண்டும் என்று நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு இருக்கிறேன்.

அதேபோல, சென்னை மக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் பூங்காக்களை அழகுபடுத்திட, அதை மேம்படுத்திட, கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.124 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் மூலமாக மக்கள் குடும்பத்தோடு சென்று பொழுதுபோக்க பொது இடங்களாக நமது பூங்காக்கள் இன்றைக்கு மாற்றம் பெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாகத்தான் ஸ்டீபன்சன் சாலையில் இந்த உயர்மட்டப் பாலம் செங்கைச் சிவம் பெயரால் இன்றைய நாள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு இது மிக, மிக அவசியமான பாலம்! நீங்கள் எல்லாம் பயன்படுத்தக்கூடிய உங்களுக்குத் தேவையான பாலமாக இது அமைந்திருக்கிறது.

திரு.வி.க. நகர் மண்டலத்தில், புளியந்தோப்பு பகுதியையும் பெரம்பூர் பகுதியையும் இணைக்கும் பாலமாக இது அமைந்துள்ளது. ஏற்கெனவே இருந்த பாலம் மிகமிக பழுதடைந்து இருந்த காரணத்தால் அதனை இடித்துவிட்டுப் புதிய பாலத்தை இங்கே கட்டி இருக்கிறோம்.

ஓட்டேரி நல்லா கால்வாயின் குறுக்கே இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது. ரூ.66.83 கோடி மதிப்பீட்டில் இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.52.90 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலமும் - ரூ.7.13 கோடி மதிப்பீட்டில் பாலத்துக்கான சாலை, அணுகு சாலை, பூங்காவும் - ரூ.6.8 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மழைக்காலத்தில் தண்ணீர் தேங்காதவாறு இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் இந்தச் சாலையில் தேங்கும் மழைநீர் வடியும் வண்ணம் குக்ஸ் சாலை

சந்திப்பில் இருந்து ஓட்டேரி நல்லா கால்வாய் வரையிலும் - புளியந்தோப்பு பகுதியில் தேங்கும் மழைநீர் வடியும் வண்ணம் டாக்டர் அம்பேத்கர் சாலையிலிருந்து ஓட்டேரி நல்லா கால்வாய் வரையிலும் மழைநீர்க் கால்வாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பாலம் கட்டப்பட்டதன் மூலமாகப் பெரம்பூர், ஓட்டேரி, புளியந்தோப்பு, புரசைவாக்கம், வேப்பேரி பகுதி மக்கள் பயனடைய இருக்கிறார்கள். இந்தப் பாலத்தில் நாள்தோறும் சராசரியாக 70 ஆயிரம் வாகனங்கள் செல்லும் என்று அதிகாரிகள் கணக்கெடுத்திருக்கிறார்கள். எனவே, இந்த வட்டாரத்து மக்களுக்குப் பயனுள்ள பாலமாக அமையப் போகிறது ஸ்டீபன்சன் சாலை பாலம்.

நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள், நானும் இந்த மாநகரத்தின் மேயராக இருந்தவன்தான். உங்கள் அன்போடு, ஆதரவோடு இரண்டு முறை பணியாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றவன் நான். அப்போதுதான் முதன்முதலில் சென்னை மாநகராட்சியின் சார்பில், பாலங்கள் கட்டக்கூடிய பணிகளைத் தொடங்கினோம். எப்போதுமே அரசாங்கத்தின் சார்பில்தான் பாலங்கள் கட்டுவார்கள். பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை என்று அரசின் பல்வேறு துறைகளின் சார்பில்தான் கட்டுவார்கள், மாநகராட்சியின் சார்பில் பாலங்கள் கட்டிய வரலாறு கிடையாது. முதன்முதலில் நான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மேயராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு அதற்கான முயற்சியில் இறங்கினேன். அதில் பத்துப் பாலங்களைக் கட்ட முடிவெடுத்து, 9 மேம்பாலங்களைக் கட்டி முடித்தோம். அதில் 1 பாலம் ஏன் காலம் கடந்தது என்றால், அதில் technical problem ஒன்று வந்தது. இந்த பெரம்பூர் மேம்பாலம். அதனால் கொஞ்சம் காலம் கடந்தது. ஆனால், 9 மேம்பாலங்களைக் குறித்த காலத்திற்கு முன்பே இவ்வளவு கோடி ரூபாயில் கட்டவேண்டும் என்று சொல்லி ஒரு மதிப்பீட்டுத் தொகை ஒன்று போடுவார்கள். எப்போதும் அரசாங்கத்தின் சார்பில், மாநகராட்சியின் சார்பில் அல்லது உள்ளாட்சித்துறையின் சார்பில், ஏதாவது ஒரு கட்டடமோ, ஒரு பணியைச் செய்வதற்கு முதலில் மதிப்பீடு செய்து அதற்கு ஒரு தொகையை ஒதுக்குவார்கள். ஆனால் அதை முடிக்கின்ற நேரத்தில் கொஞ்சம் தொகை அதிகமாகும். விலைவாசி சூழ்நிலைக் கருதி, காலமும் கடந்துவிடுகின்ற காரணத்தால் கொஞ்சம் மதிப்பீடு அதிகமாகிவிடுகிறது. நான் பெருமையோடு சொல்கிறேன். 9 மேம்பாலங்கள் நாம் கட்டியபோது மதிப்பீடு தொகையை விட குறைந்த மதிப்பீட்டில், செலவு செய்து இதுவரை சென்னை மாநகராட்சியில் இல்லாத ஒரு மிகப்பெரிய வரலாற்றை உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயராக இருந்தபோது அந்தக் காரியத்தை நான் செய்தேன். இது அனைவருக்கும் தெரியும்.

பாலங்களாக இருந்தாலும் சரி, சாலைகளாக இருந்தாலும் சரி, மழைநீர் கால்வாய்களாக இருந்தாலும் சரி, கழிவுநீர் கால்வாய்களாக இருந்தாலும், அனைத்தையும் இன்றைய தேவைகளுக்காக மட்டுமல்ல, நாளைய தேவைகளையும் கருதி நாளைய மக்கள் தொகையையும் கணக்கிட்டு அமைத்துத் தருவதை நோக்கமாக இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணமாக இருப்பது உட்கட்டமைப்பு. அந்த உட்கட்டமைப்பை நாம் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறோம். பாலத் திறப்பு விழா நிகழ்ச்சி அதில் நான் கலந்து கொள்கிற நேரத்தில் எனக்கு ஒன்று பசுமையாக நினைவில் இருப்பது எப்போதும் மறக்கமாட்டேன். ஆனால் இப்போதும் என்னுடைய மனதில் இருக்கிறது. என்னவென்று கேட்டால், நான் சிறு குழந்தையாக இருந்தபோது, முதன்முதலாகக் கோடம்பாக்கம் பகுதியில் குடியிருந்தோம். தலைவர் கலைஞர் அவர்கள் அரசியலில் இருந்தாலும், திரைப்படத்திற்காக வசனம் எழுதிக் கொண்டிருப்பார். அப்போது பெரும்பாலும் சினிமா ஸ்டுடியோ எல்லாம் கோடம்பாக்கப் பகுதியில்தான் அதிகமாக இருக்கும். இப்போது இருக்கக்கூடிய கோடம்பாக்கம் மேம்பாலம் அப்போது கிடையாது. அதில் இரயில்வே கேட் இருக்கும். அதில் பெரிய பெரிய நடிகர்களாக இருந்தாலும் சரி, இயக்குநர்களாக இருந்தாலும் சரி, தயாரிப்பாளர்களாக இருந்தாலும் சரி, பொதுமக்கள் யாராக இருந்தாலும் அந்த இரயில்வே கேட்டை கடந்துதான் போகவேண்டும். அரை மணி நேரத்திற்கு, முக்கால் மணி நேரத்திற்கு அல்லது ஒரு மணி நேரத்திற்கு ஒரு இரயில் வந்துகொண்டே இருக்கும். அதனால் இரயில்வே கேட்டை மூடுவார்கள். சில நேரங்களில் 1 மணி நேரம், 2, 3 மணி நேரங்கள் காக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். தலைவர் கலைஞர் அவர்களும் பல முறை அந்த வழியாகப் போயிருக்கிறார். பலமுறை காத்துக் கொண்டிருந்திருக்கிறார்.

நான் குழந்தையாக இருக்கும்போது வீட்டில் safety pin, அதாவது hook என்று சொல்வார்கள். அது திறந்த நிலையில் கீழே கிடந்தது. கைக்குழந்தையாக இருந்தபோது தரையில் தவழ்ந்து கொண்டிருந்தபோது நான் அந்த hook-ஐ முழுங்கிவிட்டேன். இதை எப்படியாவது எடுக்கவேண்டும் என்று ஏதேதோ முயற்சி செய்கிறார்கள். வீட்டில் வாழைப்பழத்தைத் கொடுக்கிறார்கள்,கவிழ்த்துப்பார்க்கிறார்கள்,ஒன்றும் முடியவில்லை. மருத்துவரிடம் போகவேண்டும் என்று முடிவு செய்து அதற்குப் பிறகு காரில் ஏற்றிக்கொண்டுவருகிறார்கள்.கோடம்பாக்கம்கேட் அருகில் நின்றுவிட்டோம். அதற்குப் பிறகு கேட் திறந்த பிறகுதான் மருத்துவமனைக்குச் சென்று, மருத்துவம் எல்லாம் செய்தபிறகு அந்த hook-ஐ எடுத்தார்கள். ஆனால் திறந்த நிலையில்தான் அந்த hook வந்தது. அதனால் தலைவர் கலைஞர் அவர்கள் எஃக்கையே விழுங்கிவிட்டு உயிரோடு இருக்கிறான். அதனால் எஃகு உள்ளம் கொண்ட ஸ்டாலின் பெயரைத் தலைவர் கலைஞர் அவர்கள் எனக்கு சூட்ட வேண்டும் என்று அப்போது முடிவு செய்தார்கள். நெஞ்சுக்கு நீதியில் தலைவர் கலைஞர் இதையெல்லாம் எழுதியிருப்பார்.

எதற்காக நான் சொல்கிறேன் என்றால், அப்போதே தலைவர் கலைஞர் அவர்கள் முடிவு செய்தாராம். hook-ஐ விழுங்கிய ஒரு குழந்தையைக் கூட கொண்டுபோக முடியவில்லையே, எத்தனை பேர் அவதிப்படுவார்கள். ஆகவே, இந்த இடத்தில் பாலம் கட்டினால் என்ன என்று அப்போதே முடிவு செய்தார் தலைவர் கலைஞர் அவர்கள். அதற்குப் பிறகுதான் அந்த இடத்தில் பாலம் உருவானது. அங்குமட்டுமில்லை, இன்றைக்குச் சென்னை மாநகரத்தில் பல இடங்களில், தமிழகத்தில் இருக்கக்கூடிய பல இடங்களில் எங்கெங்கு தேவைப்படுமோ அந்த இடங்களில் எல்லாம் பாலங்கள் உருவாகியிருக்கின்றன. நம்முடைய சேகர் பாபு தொடக்கத்தில் சொன்னதுபோல, உங்களுக்கு இந்த ஆட்சி ஒரு பாலமாக, நன்மைகளை உருவாக்கித் தரக்கூடிய பாலமாக இந்தத் திராவிட மாடல் ஆட்சி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஆட்சிக்கு நீங்கள் என்றைக்கும் துணை நிற்க வேண்டும்.

எந்த உணர்வோடு, இந்த வட்டாரத்தில் செங்கைசிவம் அவர்கள் பணியாற்றியிருக்கிறாரோ, கட்சிக்காகவும், பொதுமக்களுக்காகவும், இந்தச் சமுதாயத்திற்காகவும் அவர் தொண்டாற்றி இருக்கிறாரோ, அந்த உணர்வை நீங்களும் மனதில் வைத்துக் கொண்டு, உங்கள் கடமையை நிறைவேற்ற இந்த ஆட்சிக்கு என்றைக்கும் துணை நிற்கவேண்டும், துணை நிற்கவேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டு இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். ◆

சேலம் மாவட்டத்தில் ரூ.170.31 கோடி மதிப்பில் 50,202 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை - 11.06.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 11.06.2023 அன்று, சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.1,367.47 கோடிச் செலவில் 390 முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, ரூ.236 கோடி மதிப்பீட்டிலான 331 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 50,202 பயனாளிகளுக்கு ரூ.170.31 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சேலம் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் மற்றும் மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்துவிடும் நிகழ்வு ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக, 10.06.2023 அன்று, சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 11.06.2023 அன்று, சேலம் மாநகரில் உள்ள பேரறிஞர் அண்ணா பூங்கா வளாகத்தில் 1,817 சதுர அடிப் பரப்பளவில் 16 அடி உயரத்தில் 4 அடி உயரப் பீடத்துடன் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து, சேலம் மாநகராட்சியின் சார்பில் சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ்ச் சேலம் மாநகரில் ரூ.96.53 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி மாநகரப் பேருந்து நிலையத்தையும், மறுசீரமைக்கப்பட்ட நேரு கலையரங்கம், பெரியார் பேரங்காடி, வ.உ.சி. மார்க்கெட், போஸ் மைதான வணிக வளாகம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

சேலம் - கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இம்மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு முடிவுற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்தார். அதன் விவரங்கள்:

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், ரூ.245.18 கோடிச் செலவில்

சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ்ப் பழைய பேருந்து நிலையம், பெரியார் பேரங்காடி, போஸ் மைதானம், வ.உ.சி மார்க்கெட், நேரு கலையரங்கம் ஆகியவை மறு சீரமைக்கும் பணிகள், புதிய பேருந்து நிலையம் அருகில் அடுக்குமாடி வாகன நிறுத்துமிடங்கள், தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்க வளாகத்தில் நான்கு சக்கர, இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், ஆனந்தா பாலம் அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம், பள்ளப்பட்டி ஏரி புனரமைத்தல், நமக்கு நாமே திட்டத்தின்கீழ், மணக்காடு காமராசர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள், களரம்பட்டி உயர்நிலைப்பள்ளியில் புதிய கூடுதல் வகுப்பறைகள், அரிசிபாளையம், தாதகாப்பட்டி, என்.ஜி.ஜி.ஓ. காலனி, பழைய சூரமங்கலம் நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் புதிய மற்றும் கூடுதல் கட்டடங்கள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், ரூ.36.40 கோடிச் செலவில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் சிமெண்ட் சாலை, கான்கிரீட் சாலை, கழிவுநீர் வடிகால், உறிஞ்சுக்குழி, சிறுபாலம், பேவர் பிளாக், கொட்டகை, உலர்களம், கதிரடிக்கும் களம், சந்தை மேம்பாட்டுப் பணி, பேருந்து நிலைய மேற்கூரை, புதிய அங்கன்வாடிக் கட்டடம், நடைபயிற்சித் தளம், புதிய குழந்தைகள் மையம், மயானத்திற்குப் புதிய காத்திருப்போர் கூடம், நபார்டு திட்டத்தின்கீழ் மேம்பாலம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின்கீழ்ச் சமையற்கூடம்;

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், ரூ.652.84 கோடிச் செலவில் இளம்பிள்ளைக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் இளம்பிள்ளை, ஆட்டையாம்பட்டி, பனமரத்துப்பட்டி, மல்லூர், இடங்கணசாலை ஆகிய 5 பேரூராட்சிகள், சேலம், வீரபாண்டி, பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 778 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் முதற்கட்டமாக 301 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்;

நெடுஞ்சாலைத் துறையின் சார்பில், ரூ.293.84 கோடிச் செலவில் ஓமலூர் - மேச்சேரி சாலை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்துதல், சேலம் மேக்னசைட் மற்றும் ஓமலூர் இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம், உயர்மட்டப் பாலம் மற்றும் பல்வேறு சிறுபாலங்கள்;

சட்டத் துறை சார்பில், ரூ.101.55 கோடிச் செலவில் சேலம் அரசு சட்டக் கல்லூரிக்கான மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடம்;

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், ரூ.3.98 கோடிச் செலவில் சேலம் உருக்காலையில் மாவட்டப் பேரிடர் நிவாரண மையம்;

வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில், ரூ.1.80 கோடிச் செலவில் ஆத்தூரில் ஒருங்கிணைந்த வணிக வரித்துறை கட்டடம்;

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில், ரூ.2.30 கோடிச் செலவில் கம்மாளப்பட்டி, செட்டியூர், மகுடஞ்சாவடியில் கால்நடை மருந்தகக் கட்டடங்கள், பள்ளிப்பட்டியில் விந்து வங்கிக் கட்டடம்;

வேளாண்மை - உழவர் நலத் துறை சார்பில், ரூ.76 இலட்சம் செலவில் மேட்டூர் மற்றும் தேவூரில் துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள்;

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில், ரூ.3.20 கோடிச் செலவில் சேலம் அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தில் விடுதி மற்றும் உணவுக்கூடம்;

பள்ளிக் கல்வித் துறையின் சார்பில், ரூ.4.82 கோடிச் செலவில் இருப்பாளி, வனவாசி, கச்சுப்பள்ளி, தாதாபுரம், வெள்ளரிவெள்ளி, ஆட்டையாம்பட்டி, செட்டிமாங்குறிச்சி ஆகிய அரசு மேல்நிலைப்பள்ளிகளில் வகுப்பறைகள், கலை மற்றும் கைவினை அறை, கணினி அறை, ஆய்வகங்கள் மற்றும் சுற்றுச்சுவர்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில், ரூ.3.34 கோடிச் செலவில் கோனேரிப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர்களுக்கான குடியிருப்புக் கட்டடம், நைனாம்பட்டி, மல்லிக்குந்தத்தில் புதிய சுகாதார நல மையக் கட்டடங்கள், ஆத்தூர் அரசு மருத்துவமனையில் கண் அறுவைச் சிகிச்சை அரங்குடன் கூடிய கண் சிகிச்சைப் பிரிவு, பூலாவரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சமுதாய மையத்துடன் கூடிய மருத்துவர் குடியிருப்புக் கட்டடம்;

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் சார்பில், ரூ.1.22 கோடிச் செலவில் கெங்கவல்லியில் புதிய தீயணைப்பு – மீட்புப் பணி நிலையக் கட்டடம்;

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின்கீழ், ரூ.2.77 கோடிச் செலவில் ஓமலூரில் உதவி சிறை அலுவலர் மற்றும் சிறைக் காவலர்களுக்கான குடியிருப்புக் கட்டடங்கள்;

நீர்வள ஆதாரத் துறையின் சார்பில், ரூ.2.75 கோடிச் செலவில் மேட்டூர் அணையின் வெள்ள உபரி நீரை சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நீர் வழங்கும் திட்டப் பணிக்கான கண்காணிப்பு அலுவலகக் கட்டடம்;

போக்குவரத்துத் துறையின் சார்பில், ரூ.1.63 கோடிச் செலவில் வாழப்பாடியில் புதிய போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகக் கட்டடம்;

கூட்டுறவுத் துறையின் சார்பில், ரூ.9.09 கோடிச் செலவில் கல்பாரப்பட்டி, லட்சுமாயூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள், ஆத்தூர், சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்குக் கிடங்குகள், கோலாத்துக்கோம்பை, மோட்டுப்பட்டி, சிக்கம்பட்டி மிளகாய்காரனூர், தானாங்காடு, மலையடிப்பட்டி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்குப் புதிய கட்டடங்கள்;

என மொத்தம் ரூ.1,367.47 கோடி மதிப்பீட்டில் 390 முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். அதன் விவரங்கள்:

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், ரூ.63.40 கோடி மதிப்பீட்டில் மேட்டூர், எடப்பாடி நகராட்சிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் நிதியின்கீழ்ப் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள், போடிநாயக்கன்பட்டி ஏரி, அல்லிக்குட்டை ஏரி, மூக்கனேரி ஆகிய ஏரிகளைப் புனரமைத்து அழகுபடுத்தும் பணிகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், ரூ.159 கோடி மதிப்பீட்டில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 298 சாலைப் பணிகள், உத்தமசோழபுரம் – திருமணிமுத்தாற்றின் குறுக்கேயும், தென்னங்குடிபாளையம் - வசிஷ்ட ஆற்றின் குறுக்கேயும் உயர்மட்டப் பாலங்கள் அமைக்கும் பணிகள்;

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், ரூ.4.95 கோடி மதிப்பீட்டில் தலைவாசலில் குடியிருப்புடன் கூடிய புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்;

கூட்டுறவுத் துறையின் சார்பில், ரூ.8.48 கோடி மதிப்பீட்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு வேளாண் அங்காடி, சுற்றுச்சுவர், தானிய சேமிப்புக் கிடங்கு, உரக்கிடங்கு, உலர்களம், விவசாய வியாபார மையம் மற்றும் கிடங்கு நவீனமயமாக்கும் பணிகள்;

என மொத்தம், ரூ.236 கோடி மதிப்பிலான 331 புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்குப் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதன் விவரங்கள்:

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின்கீழ், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்ப் பழச் செடிகள், தென்னங்கன்றுகள், தார்பாய்கள், தெளிப்பான்கள், வேளாண் கருவித் தொகுப்புகள், பவர் டிரில்லர், டிராக்டர், சுழற்கலப்பை போன்ற பல்வேறு திட்டங்களின்கீழ் 11,118 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும், கூட்டுறவுத் துறையின்கீழ் 10,441 நபர்களுக்கு பயிர்க்கடன், மகளிர் சுயஉதவிக் குழு கடன்களும், மகளிர் திட்டத்தின் சார்பில் 10,052 நபர்களுக்கு மகளிர் சுயஉதவிக் குழு கடன்களும், வருவாய்த் துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உள்ளிட்ட துறைகளின்கீழ் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல், பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்குதல், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்குதல், விலையில்லா சலவைப் பெட்டி, தையல் இயந்திரம் வழங்குதல், பவர் டிரில்லர், பழங்குடியினர் நலவாரிய அடையாள அட்டை வழங்குதல் என 6,837 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும்;

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்கீழ் 1,000 பயனாளிகளுக்குப் புதிய மின்னணு குடும்ப அட்டைகளும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின்கீழ் 2022-2023ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 1,753 விளையாட்டு வீரர்களுக்குப் பரிசுத் தொகையும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின்கீழ்க் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரண நிதியுதவி, விபத்து மரண

நிதியுதவி என 1,116 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின்கீழ், இலவச தையல் இயந்திரம், பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், வைப்புத் தொகைப் பத்திரம் வழங்குதல் என 970 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும்;

ஊரக வளர்ச்சித் துறையின்கீழ், பாரதப் பிரதமர் வீடு வழங்கும் திட்டம் உள்ளிட்ட பிற நலத்திட்ட உதவிகள் 5,721 நபர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் ஊட்டச்சத்துப் பெட்டகம் 531 பயனாளிகளுக்கும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின்கீழ் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், முதுகு தண்டுவடம் பாதித்தவர்களுக்கான சிறப்பு பெட்ரோல் ஸ்கூட்டர் ஆகியவை 250 பயனாளிகளுக்கும், சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ், கொரோனா நோய்த் தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கான முதலமைச்சர் நிவாரண நிதி மற்றும் நிதி ஆதரவுத் தொகை 46 பயனாளிகளுக்கும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 20 பயனாளிகளுக்கு அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணைகளும், மாவட்டத் தொழில் மையத்தின் சார்பில் 12 பயனாளிகளுக்கு நீட்ஸ் திட்டம், முதலீட்டு மானிய உதவிகளும், தாட்கோ-வின் கீழ், 5 பயனாளிகளுக்கு சரக்கு வாகனமும், டிராக்டர்களும், வனத் துறையின்கீழ் 330 பயனாளிகளுக்குச் சுழற்சி நிதிக் கடன்களும் எனப் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் ரூ.170.31 கோடி மதிப்பில் 50,202 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, சேலம் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளச் செல்லும் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குச் சாலையின் இருமருங்கிலும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும், கோரிக்கை மனுக்களை அளித்துத் தங்களது தேவைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி இங்கே எனக்கு முன் உரையாற்றியிருக்கக்கூடிய மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள், மிகுந்த பெருமையோடு இங்கே குழுமியிருக்கக்கூடிய கூட்டத்தினுடைய எழுச்சியைப் பற்றி எடுத்துச் சொன்னார். அந்த அளவிற்கு இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது என்றுச் சொன்னால், இந்த

நலத்திட்ட நிகழ்ச்சியை, நலத்திட்ட விழாவாக மட்டுமல்லாமல், ஒரு மாநாடு போல் ஏற்பாடு செய்திருக்கக்கூடியவர் திரு. நேரு அவர்கள். மலைக்கோட்டை வீரரான திரு. நேரு அவர்கள் இன்றைக்குச் சேலத்தில் மக்கள் கோட்டையைத் திரட்டிக் காட்டியிருக்கிறார். அவருக்குத் துணை நின்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்கள் அத்தனை பேருக்கும், மக்கள் பிரதிநிதிகள் அத்தனை பேருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடங்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் சேலம் மாநகரில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்துவிட்டு மனநிறைவுடன் இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன்.

சேலத்தில் ஏற்கெனவே 27.08.2019 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் சிலை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது சேலம் மாநகராட்சியின் சார்பிலே பேரறிஞர் அண்ணா பூங்காவில் தலைவர் கலைஞர் அவர்களின் சிலை திறக்கப்பட்டுள்ளது.

அண்ணாவின் பூங்காவில் பூத்த மணம் தரும் மலர்தான் தலைவர் கலைஞர் அவர்கள். சேலத்துக்கும் தலைவர் கலைஞருக்குமான நட்பு என்பது அன்பான நட்பு. ஒரு குடும்ப நட்பு. தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு முழு கதை, வசனகர்த்தாவாக ஆக்கிய ஊர் இந்தச் சேலம்.

இன்றைக்கும் சேலத்தில் மார்டன் தியேட்டர்ஸ் முகப்பு கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. அந்த மார்டன் தியேட்டர்ஸின் உரிமையாளர் டி.ஆர்.சுந்தரம் அவர்கள், திரைப்படத் தயாரிப்பாளரான சுந்தரம் அவர்கள்தான் தலைவர் கலைஞர் அவர்களைச் சேலத்துக்கு அழைத்தார்கள். அப்போது தலைவர் கலைஞருக்கு ரூ.500 சம்பளம் கொடுத்தார்கள்.

"இங்கே பணியாற்ற வருவதன் காரணமாக எனது இயக்கப் பணிகள், கழகப் பணிகளுக்கு எந்த இடையூறும் வரக்கூடாது" என்று நிபந்தனை வைத்து – "அப்படி எதுவும் இருக்காது" என்று சுந்தரம் அவர்கள் சொன்ன பிறகுதான் தலைவர் அவர்கள் சேலத்தில் தங்கிப் பணியாற்ற ஒப்புக் கொண்டார்கள்.

அப்படிப் பணியாற்றத் துவங்கிய நேரத்தில் வெளிவந்த படம்தான் 'மந்திரிகுமாரி'. தலைவர் கலைஞர் அவர்கள் சேலத்தில் தங்கி இருந்த அந்தக் காலக்கட்டத்தில்தான் 1949ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகமே உருவானது. கழகத்தின் தொடக்க விழாவுக்குச் சேலத்தில் இருந்துதான் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னைக்குச் சென்றார் என்பது வரலாறு!

சேலம் உருக்காலை சர்வதேச அளவில் உயர்வு

அந்தளவுக்குக் கலைஞர் அவர்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த ஊர்தான் சேலம். அந்தச் சேலத்தில் அவரது நூற்றாண்டின் தொடக்கத்தில் முதல் சிலை நிறுவப்படுவது மிகமிகப் பொருத்தமான ஒன்று. இத்தகைய சேலம் மாவட்டத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மறைந்த எந்தன் ஆருயிர் அண்ணன் சேலத்து சிங்கம் வீரபாண்டியார் அவர்களால் இந்த சேலம் மாவட்டத்திற்கு ஏராளமானத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை நெஞ்சை நிமிர்த்தி என்னால் சொல்லமுடியும்! தற்போதும் இங்கே பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள நம்முடைய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. நேரு அவர்கள், அவரது சொந்த மாவட்டமான திருச்சியைவிடச் சேலத்திற்குத்தான் அதிக நிதியை ஒதுக்கீடு செய்து மற்ற துறைகளின் மூலமாகப் பல்வேறு நலத்திட்டங்களைக் கடந்த இரண்டு ஆண்டு காலமாக அவர் செயல்படுத்தி வருகிறார். அவர் இங்கே பட்டியலிட்டாரே அதனைவிட அதிக திட்டங்கள் இன்னும் சேலத்திற்கு வர இருக்கின்றன.

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நாம் செய்த சில சாதனைகளை மட்டும் இங்கே உங்களுக்கு நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

ஐம்பது ஆண்டுகாலக் கனவாக இருந்த சேலம் இரயில்வே கோட்டம், பெரியார் பல்கலைக்கழகம், சேலத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி, ஆத்தூரில் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, ரூ.1,553 கோடிச் செலவிலே சேலம் உருக்காலை சர்வதேச அளவிற்கு உயர்த்தப்பட்டு புதிய குளிர் உருட்டாலை உருவாக்கம், சேலத்தில் ரூ.136 கோடி மதிப்பில் அதிநவீன சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, சேலத்தில் புதிய இரயில்வே மண்டலம், ஏத்தாப்பூரில் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், சேலத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இப்படிக்

கணக்கில் அடங்காத வகையில் பல்வேறு திட்டங்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் இந்தச் சேலம் மாவட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

இந்த வரிசையில் இதைவிட அதிகமான சாதனைகளைச் செய்து கொடுப்பதற்கு இந்த ஆட்சி தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கடந்த 11.12.2021 அன்று, சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.1,242 கோடி மதிப்பிலான புதிய திட்டங்கள் என்னால் அறிவிக்கப்பட்டன.

சேலம் மாவட்டம், ஆணைகவுண்டன்பட்டி, கருப்பூர் பகுதிகளை உள்ளடக்கிய நிலப்பரப்பில், ரூ.29.50 கோடி மதிப்பீட்டில் 55 ஆயிரம் சதுர அடிப் பரப்பளவில் மினி டைடல் பூங்காவிற்கு 15 ஏக்கர் நிலம் தேசிய நெடுஞ்சாலை அருகில் ஒதுக்கப்பட்டுக் காணொலிக் காட்சியின் வாயிலாகக் கடந்த 19.05.2023 அன்று அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

அம்மாபாளையம் கிராமத்தில் ஜவுளிப் பூங்கா

“கொலுசு உற்பத்தியில் தலைசிறந்து விளங்கும் சேலம் மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கொலுசு உற்பத்தியாளர்கள் உடனடியாகத் தொழில் தொடங்குவதற்கு வசதியாக பன்மாடி உற்பத்தி மையம் அமைக்கப்படும்” என்று நான் அறிவித்தேன்.

அதன்படி, சேலம் அரியாகவுண்டம்பட்டியில் ரூ.24.55 கோடி மதிப்பீட்டில் கொலுசு உற்பத்தியாளர்களுக்கான பன்மாடி உற்பத்தி மையம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சேலம் மாவட்டத்தில், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும், பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய வகையிலும், மாபெரும் ஜவுளிப் பூங்கா ஒன்று அமைக்கப்படும் என்று நான், 11.12.2021 அன்று, அறிவித்திருந்தேன்.

இதற்காக, சேலம் மேற்கு வட்டம், ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில், 119 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, இங்கு ஜவுளிப்பூங்கா அமைப்பதற்கு நிலஒதுக்கீடு செய்வதற்கான பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

இந்த இடத்தில், இந்த நிகழ்ச்சியில் ரூ.880 கோடிச் செலவில் ஜவுளிப்பூங்கா அமைப்பதற்கான கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் சேலம் மாவட்ட மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்நோக்கு விளையாட்டு அரங்கம்

சேலம் மாநகராட்சியில் போடிநாயக்கன்பட்டி ஏரி, அல்லிக்குட்டை ஏரி, மூக்கனேரி ஆகிய 3 நீர்நிலைகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக ரூ.52 கோடி நிதி ஒதுக்கீட்டில் இந்தப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

சேலம், அம்மாப்பேட்டை பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகப் பொதுமக்களின் நீண்ட காலக் கோரிக்கையை ஏற்று ரூ.120 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் அமைக்க திட்ட ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சேலம் மாநகராட்சியில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு விளையாட்டு அரங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாலமலை பகுதி மலைவாழ் மக்களின் 75 ஆண்டுகாலக் கனவான சாலை வசதித் திட்டத்தினைச் செயல்படுத்தும் வகையில் ரூ.31.53 கோடி மதிப்பீட்டில் 17.2 கிலோ மீட்டர் நீளத்திற்கு தார்ச்சாலையாக மாற்றும் வகையில் கடந்த 03.04.2023 அன்று பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், எங்களைப் பொறுத்தவரையில் ‘சொன்னதைச் செய்வோம் செய்வதைத்தான் சொல்வோம்’ என்ற அடிப்படையில் செயல்பட்டு வருகிறோம். ஆட்சி அமைத்தது முதல் மாவட்டங்கள் தோறும் இதுபோன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்களையும் - திட்டங்களைத் தொடங்கும் விழாக்களையும் - முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைக்கும் விழாக்களையும் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் ஒரு சுற்று நிகழ்ச்சிகள் நடந்து முடிந்துவிட்டன. இப்போது சேலம் தொடங்கி அடுத்த சுற்று நிகழ்ச்சிகளைத் தொடங்கப் போகிறோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுப் பேருந்து நிலையம்

இன்றைய நாள் நடைபெறும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக இளம்பிள்ளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், ரூ.652.84 கோடி மதிப்பீட்டில் இளம்பிள்ளை, ஆட்டையாம்பட்டி, பனமரத்துப்பட்டி, மல்லூர், இடங்கண சாலை ஆகிய 5 பேரூராட்சிகள், சேலம், வீரபாண்டி, பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 778 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் முதற்கட்டமாக 301 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பணியைத் தொடங்கி வைத்துள்ளேன்.

ரூ.101.55 கோடி மதிப்பீட்டில் சேலம் அரசு சட்டக் கல்லூரிக்கான மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சேலம் பழைய பேருந்து நிலையத்தை ரூ.96.53 கோடி மதிப்பீட்டில் ஈரடுக்குப் பேருந்து நிலையமாக மறுசீரமைத்து 'முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி நூற்றாண்டு மாநகரப் பேருந்து நிலையம்' என இன்றைய நாள் பெயர் சூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பெரியார் பேரங்காடி, போஸ் மைதான வணிக வளாகம், வ.உ.சி மார்க்கெட், நேரு கலையரங்கம் ஆகியவற்றை மறுசீரமைக்கும் பணிகள் என இன்றைக்கு மட்டும் ரூ.1,367 கோடி மதிப்பில் 390 பணிகள் நிறைவுற்று மக்கள் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. ரூ.236 கோடி மதிப்பிலான 331 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இவை அனைத்திற்கும் மேலாக 50,202 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கின்றன. 23 அரசுத் துறைகளின் சார்பாக ரூ.170 கோடி மதிப்பீட்டில் இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கின்றன.

50,202 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் சென்றுசேர ஒரு அருமையான, மகிழ்ச்சியான விழாவாக, இந்த மாபெரும் நிகழ்ச்சியாக இது நடந்துகொண்டு இருக்கின்றது.

இப்படி அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்க்கை மேம்பாட்டையும் மனதில் வைத்துச் செயல்படும் அரசாக நமது திராவிட மாடல் அரசு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

அரசு தொடங்கியுள்ள திட்டங்களின் மூலமாகச் சேலம் மாவட்டத்தின் அனைத்துத் தரப்பினரும் பயனடைந்து வருகிறார்கள். இந்தச் சேலம் மாவட்டத்தில் மட்டும் 11 கோடி முறை கட்டணமில்லாப் பேருந்து வசதியைப் பெண்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

பெருமையோடு சொன்னார்களே, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து மூன்றாவது ஆண்டாகக் குறித்த நேரத்தில் பயிர் சாகுபடிக்குத் தண்ணீர் திறந்து வைக்கப்படுகிறது என்பது மட்டற்ற மகிழ்ச்சியினை அளிக்கிறது. அதில் நானும் மகிழ்ச்சி அடைகிறேன் என்றால் நானும் ஒரு டெல்டாகாரன் என்பதனாலேயே மகிழ்ச்சி அடைகிறேன்.

சேலம் மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து எண்ணற்ற பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் இந்த அரசு எப்போதும் முனைப்பாக உள்ளது. அதற்காகத்தான் மூத்த அமைச்சராக இருக்கக்கூடிய திரு. நேரு அவர்களை இந்த மாவட்டத்திற்குப் பொறுப்பு அமைச்சராக நியமித்து இந்தப் பொறுப்பை அவரிடத்திலே கொடுத்திருக்கிறோம்.

புதிய மின் இணைப்புகள்

காலை உணவுத் திட்டத்தின்படிச் சேலத்தில் 7,953 மாணவ மாணவியர் காலை உணவு உண்கிறார்கள். புதுமைப் பெண் திட்டத்தில் சேலத்தில் 17,000 மாணவிகள் மாதம்தோறும் ரூ.1,000 பெறுகிறார்கள்.

தமிழ்நாட்டிலேயே அதிகளவில் சேலம் மாவட்டத்தில் 17,093 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.40.90 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

11 உழவர் சந்தைகள் மூலம் 3,46,675 உழவர்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு ரூ.1.97 கோடி நுகர்வோர் பயனடைந்துள்ளனர்.

புதிய வேளாண் மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 6,750 புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு, உழவர்கள் பயனடைந்து வருகின்றனர். இப்படி இந்த அரசால் நிறைவேற்றப்பட்ட மக்கள் நலத்திட்டங்களைச் சொல்லிக்கொண்டே போனால் நேரம் போதாது.

இவை அனைத்திற்கும் மேலாக, முத்தாய்ப்பாக உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து நாளை தண்ணீரைத் திறந்து வைக்க இருக்கிறோம்.

பத்தாண்டுக் காலம் இந்தத் தமிழ்நாடு எந்த வகையில் எல்லாம் பாழ்பட்டுக் கிடந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒன்றிய அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளுக்குக் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போட்டு விட்டார்கள் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியாளர்கள்.

நம்பர் ஒன் தமிழ்நாடு

நிதி உரிமையைத் தாரைவார்க்கும் ஜி.எஸ்.டி. உரிமையை இழந்தோம். அதனால்தான் இன்றைக்கு நிதி போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லை. நிதி நெருக்கடியில் தவிக்கிறோம். உதய் என்ற திட்டத்தில் கையெழுத்துப் போட்டதால்தான் மின்கட்டணத்தைக் குறிப்பிட்ட காலகட்டத்தில் மாற்றி அமைக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இருந்தாலும் மக்களையும் பாதிக்காத வகையில் - அதே நேரத்தில் நிதி மேலாண்மையையும் உயர்த்திக் காட்ட வேண்டிய சூழல் கழக அரசுக்கு ஏற்பட்டது. பட்ஜெட்டில் வருவாய் பற்றாக்குறையைக் குறைத்தோம். அதேநேரத்தில் புதிய திட்டப்பணிகளையும் ஏராளமாகத் தொடங்கிக் கொண்டிருக்கிறோம். நிதி இல்லை என்று காரணம் காட்டிப் புதிய திட்டங்களை அறிவிக்காமல் இருக்கவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்களைப் பார்த்தீர்கள் என்றால், ஐந்து ஆண்டுகளில் அறிவிக்க வேண்டிய அளவிற்கான திட்டங்களை இரண்டே ஆண்டுகளில் அறிவித்து நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம். அதனால்தான் 'நம்பர் ஒன் தமிழ்நாடு'.

'நம்பர் ஒன் முதலமைச்சர்' என்று என்னை முதல் ஆண்டில் சொன்னார்கள். என்னை 'நம்பர் ஒன் முதலமைச்சர்' என்று சொல்வதைவிட 'நம்பர் ஒன் தமிழ்நாடு' என்ற பெயரை எடுக்க வேண்டும் அதுதான் எனக்குச் சிறப்பு என்று சொன்னேன். அந்தப் பெருமையை இன்றைக்கு அடைந்திருக்கிறோம். இது ஏதோ என்னால் ஆனது என்று நினைக்கவில்லை.

இது அமைச்சர் பெருமக்களால், அரசு அலுவலர்களால், மக்கள் பிரதிநிதிகளால், அவர்களது ஒத்துழைப்போடு, அந்த வேகத்துடனும், விவேகத்துடனும் செயல்பட்டதால்தான் இத்தகைய சாதனையை நம்மால் செய்ய முடிந்திருக்கிறது.

முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக அண்மையில் ஜப்பான், சிங்கப்பூர் நாடுகளுக்கு நான் சென்றிருந்தேன். சுமார் ரூ.3,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. வருகிற 2024ஆம் ஆண்டு சனவரி மாதம் சென்னையில் நடைபெற இருக்கிற உலக முதலீட்டாளர் மாநாட்டில் கலந்துகொள்ள பெரும்பாலான நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்திருக்கின்றன.

இந்தியாவில் தமிழ்நாடும், குறிப்பாகச் சென்னையும் உலக முதலீட்டாளர்களை ஈர்க்கும் மையமாக அமைந்திருக்கிறது. ஜப்பானைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்கள் ஏற்கனவே தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. எனவே, நாம் அவர்களுக்குத் தமிழ்நாட்டை அறிமுகம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

அவர்களுக்கு ஏற்கனவே அறிமுகமான தமிழ்நாட்டில் கடந்த பத்தாண்டு போல அல்லாமல் இப்போது நடைபெறும் நமது திராவிட மாடல் ஆட்சியில் தொழில் வாய்ப்புகளுக்கும், முதலீடுகளுக்கும் ஏற்ற சூழல் நிலவுவதைச் சுட்டிக்காட்டித், தமிழர் பண்பாட்டின் அடிப்படையில் நேரடியாகச் சென்று அழைப்பு விடுத்தோம். அழையா வீட்டுக்கு எந்த விருந்தாளியும் வரமாட்டார்கள்.

முதலீட்டாளர்கள் மாநாடு

நம்முடைய மாநிலத்தில் நிலவும் சூழல் அரசு செயல்படுத்தி வரும் முன்னேற்றத் திட்டங்கள், வளமான எதிர்காலத்தை நோக்கி நாம் நடைபோடும் பாதை, நம்முடைய படித்த இளைஞர் வளம் போன்றவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டினால்தான் முதலீட்டாளர்கள் ஆர்வத்தோடு நம் மாநிலத்துக்கு வருவார்கள்.

அப்படி முதலீட்டாளர் மாநாட்டுக்கு வரும் நிறுவனங்கள் நேரில் நம்முடைய கட்டமைப்புகளைப் பார்த்து ஆய்வு செய்து முதலீடுகளைச் செய்வார்கள். ஆனால் அதனைக் கூட தமிழ்நாட்டைப் பாழ்படுத்த நினைக்கும் கூட்டம் கொச்சைப்படுத்துகிறார்கள். அவர்களுக்குக் கொச்சைப்படுத்த மட்டும்தான் தெரியும். எதையும் ஆக்கத் தெரியாது! அழிக்கத்தான் தெரியும். அந்த வேலையைத்தான் அவர்கள் செய்கிறார்கள். செய்யட்டும், நான் கவலைப்படவில்லை.

'போற்றுவார் போற்றட்டும் - புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்' என்று நினைத்துக் கடந்து செல்பவன் நான். கலைஞர் வழியில் வந்தவன் நான். மக்கள் பணியாற்றவே நேரமில்லை. மக்களுக்குப் பிணியாக இருப்பவர்களுக்குப் பதில்சொல்ல எனக்கு நேரமில்லை.

ஐந்து முறை தமிழ்நாட்டை ஆண்ட முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டான இந்த ஓராண்டு காலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கான மாபெரும் திட்டங்களைத் தீட்டிக் காட்டி – கலைஞரே இன்னும் ஆள்கிறார், வாழ்கிறார், வாரி வழங்கிக் கொண்டு இருக்கிறார் என்ற பெயர் வாங்குவோம்.

அதனால்தான் கலைஞரின் நூற்றாண்டு விழாவை ஓராண்டு முழுவதும் கொண்டாடுவோம் என்று அறிவித்து, அதனை இன்றைக்கு நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். நம்முடைய அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையிலே தொடர்ந்து இந்த அரசுக்கு நீங்கள் ஆதரவு தாருங்கள், இன்னும் எண்ணற்ற திட்டங்களை உங்களுக்கு நிறைவேற்றித் தர இந்தத் திராவிட மாடல் அரசு காத்திருக்கிறது, காத்திருக்கிறது, என்பதை மட்டும் இந்த நேரத்திலே எடுத்துச்சொல்லி, நேரத்தின் அருமை கருதி, இந்த அளவில் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்புக் குழுக்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
அறிவிப்பு - 11.06.2023

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் சூன் 2023 திங்கள் முதல் சூன் 2024 திங்கள் வரை தமிழ்நாடு அரசால் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 22.05.2023 அன்று, தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களைப் பெருமைப்படுத்தும் விழாக்களாக மட்டுமல்லாமல், அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக அறிவித்து, நிறைவேற்றிய திட்டங்களை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையில் இந்த விழாக்கள் அமைய வேண்டும் என்றும், மாதந்தோறும் ஒவ்வொரு பொருளின் அடிப்படையில் இந்த விழாக்களை நடத்திட வேண்டும் என்றும், பெரிய அளவிலான விழாக்களாக மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பினரும் பங்கெடுக்கும் விழாக்களாக இவற்றை நடத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், அரசு நடத்துவதாக மட்டுமல்லாமல் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள், பயனடைந்த மக்கள் ஆகியோர் இணைந்து கொண்டாடுவதாக அமைய வேண்டும் என்று தெரிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, 02.06.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டு, அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக ஆற்றிய பணிகள், நிறைவேற்றிய திட்டங்கள் குறித்த குறும்படத்தையும் வெளியிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல்வேறு திறமைகள் கொண்ட பன்முக வித்தகர். அவர் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரின் பரிமாணங்களைப் போற்றும் வகையில்,

இதழாளர் – கலைஞர், எழுத்தாளர் – கலைஞர், கலைஞர் - கலைஞர், சமூகநீதிக் காவலர் - கலைஞர், பண்பாட்டுப் பாசறை - கலைஞர், ஏழைப் பங்காளர் - கலைஞர், சட்டமன்ற நாயகர் - கலைஞர், பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் - கலைஞர், நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி - கலைஞர், நிறுவனங்களின் நாயகர் – கலைஞர், தொலைநோக்குச் சிந்தனையாளர் - கலைஞர், தமிழ்த்தாயின் தவப்புதல்வன் – கலைஞர்,

இத்தலைப்புகளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில் இணைத் தலைவர்கள், உறுப்பினர் செயலர், உறுப்பினர்கள் கொண்ட 12 குழுக்கள் அமைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இக்குழுக்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையைப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள், பயனடைந்த மக்கள் ஆகியோருடன் இணைந்து எவ்வாறு கொண்டாடப்பட வேண்டும் என்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பொதுமக்கள், இளைஞர்கள் பயன்பெறும் விழாக்களாக அமைய வேண்டும் என்பதற்கான திட்டப்பணிகளை மேற்கொண்டு, அரசுடன் இணைந்து விழாக்களைச் சிறப்பாக நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

காவிரி டெல்டா பகுதி விவசாய மக்கள் குறுவை, சம்பா, தாளடிப் பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாயப் பெருமக்கள் குறுவைச் சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து 12.06.2023 அன்று தண்ணீர் திறந்து வைத்தார்.

சேலம் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள், மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்து விடும் நிகழ்வு ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக 10.06.2023 அன்று மாலை சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 11.06.2023 அன்று காலை சேலம் மாநகரில் உள்ள பேரறிஞர் அண்ணா பூங்காவில் புதியதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்து, சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சியில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விவசாயப் பெருமக்கள் குறுவைச் சாகுபடி செய்ய சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

சென்ற ஆண்டு குறுவைப் பாசனத்திற்காக அணை வரலாற்றில் சுதந்திர இந்தியாவில் முதல் முறையாக மே மாதத்தில், 24.05.2022 அன்று, தண்ணீர் திறந்து விடப்பட்டுக் குறுவை நெல் சாகுபடியில் புதிய சாதனை படைக்கப்பட்டது.

12.06.2023 அன்றைய நிலவரப்படி, மேட்டூர் அணையின் நீர்மட்ட அளவு 103.35 அடியாகவும் நீர் இருப்பு 69.252 டி.எம்.சி ஆகவும் உள்ளது. மேட்டூர் அணை கட்டப்பட்ட நாள் முதல் குறுவைச் சாகுபடிக்கு 19ஆவது முறையாக ஜூன்12 அன்று பாசனத்திற்குத் தண்ணீர் திறக்கப்படுகிறது.

காவிரி டெல்டா குறுவை பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12 முதல் செப்டம்பர் 15ஆம் தேதிவரை 5,26,000 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 125 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படுகிறது இதற்கு மேட்டூர் அணையில் இருந்து 99.74 டி.எம்.சி தண்ணீர் வழங்கியும் மீதமுள்ள 25.26 டி.எம்சி தண்ணீரானது மழை மற்றும் நிலத்தடி நீர் மூலமாகவும் பூர்த்தி செய்யப்படும்.

குறுவை பாசனம் நாமக்கல், கரூர், திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் 4,91,200 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 93.860 டி.எம்சி. தண்ணீரும், கடலூர், அரியலூர் மாவட்டத்திற்கு 30,800 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 5.88 டி.எம்.சி. தண்ணீரும் மேட்டூர் அணையிலிருந்து தேவைப்படுகிறது.

தற்போது மேட்டூர் அணையில் இருந்து குறுவைச் சாகுபடிக்கு ஜூன் மாதம் 12ஆம் தேதி அன்று காலை வினாடிக்கு 3,000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு, மாலைக்குள் படிப்படியாக வினாடிக்கு 10,000 கன அடியாக உயர்த்தப்பட்டு ஜூன் மாதம் இறுதிவரை வழங்கப்படும். ஜூலை மாதத்தில் வினாடிக்கு 10,000 கனஅடியிலிருந்து படிப்படியாக வினாடிக்கு 16,000 கன அடியாக உயர்த்தியும், ஆகஸ்ட் மாதத்தில் வினாடிக்கு 18,000 கன அடியாகவும் நீர் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

சம்பா, தாளடிப் பாசனம்

மேட்டூர் அணையிலிருந்து சம்பா, தாளடிப் பாசனத்திற்கு, செப்டம்பர் 15 முதல் ஜனவரி 28 வரை 12,10,000 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 205.60 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படும். இதற்கு அணையிலிருந்து 108.50 டி.எம்.சி தண்ணீர் வழங்கியும் மீதமுள்ள 97.10 டி.எம்.சி தண்ணீர் பருவமழை மற்றும் நிலத்தடி நீர் கொண்டும் பூர்த்தி செய்யப்படும்.

மேட்டூர் அணையின்கீழ்ப் பகுதியில் ஆற்றில் இருந்து சுமார் 155 குடிநீர் திட்டங்களின் மூலம் தினசரி 1,707.63 மில்லியன் லிட்டர் தண்ணீர் 18 மாவட்டங்களில் உள்ள பொதுமக்களின் குடிநீர்ப் பயன்பாட்டிற்காக ஆண்டு முழுவதும் எடுத்துப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 40க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கும், குடிநீர் பயன்பாட்டிற்கும் தண்ணீர் திறந்துவிடப்படும்பொழுது அணை மின்நிலையம் மூலம் 50 மெகாவாட் மின்சாரமும், சுரங்க மின்நிலையம் மூலம் 200 மெகாவாட் மின்சாரமும் மொத்தம்

250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அணையின்கீழ்ப் பகுதியில் 7 கதவணை நீர்மின் நிலையங்கள் மூலம் 7 x 30 மெகாவாட் ஆக மொத்தம் 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேட்டூர் அணையிலிருந்து குறுவை, சம்பா மற்றும் தாளடிப் பாசனத்திற்கு செப்டம்பர் மாதத்தில் முதல் 15 நாட்களுக்கு வினாடிக்கு 15,000 கனஅடி வீதமும் அடுத்த 15 நாட்களுக்குப் படிப்படியாக வினாடிக்கு 20,000 கனஅடி வீதம் தண்ணீர் வழங்கப்படும். அக்டோபர் மாதத்தில் முதல் 15 நாட்களுக்கு வினாடிக்கு 22,000 கனஅடி வீதமும் அடுத்த 15 நாட்களுக்கு நீர் தேவைக்கேற்ப வினாடிக்கு 15,000 கனஅடி வீதம் தண்ணீர் வழங்கப்படும். நவம்பர் மாதத்திற்குத் தண்ணீர் தேவைக்கேற்ப வினாடிக்கு 10,000 கனஅடி வீதமும், டிசம்பர் மாதத்திற்கு வினாடிக்கு 10,000 கனஅடி வீதமும் ஜனவரி மாதத்திற்கு வினாடிக்கு 12,000 கனஅடி வீதமும் தண்ணீர் வழங்கப்படும். பாசனத் தேவையைப் பொருத்து அணையிலிருந்து தண்ணீர் எடுக்கும் அளவினை உயர்த்தியும் குறைத்தும் வழங்கப்படும்.

நடப்பாண்டில் காவிரி டெல்டா விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தவும் நீர்பங்கீட்டில் நிலைமைக்கேற்பத் தண்ணீரை முறைவைத்துப் பயன்படுத்த நீர்வளத்துறை அலுவலர்களுடன் ஒத்துழைக்குமாறும், மிக அதிக அளவு மகசூல் பெற்றுப் பயனடையுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் ஆற்றிய உரை:

ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கம்!

தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தியை உயர்த்துவதற்காகவும் உழவர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காகவும் நாம் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு அதற்கான முன்னெடுப்புகளை எல்லாம் நாம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, உழவர் நலன் சார்ந்த திட்டங்களை வெற்றிகரமாக நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் குறிப்பாகக் கலைஞர் அவர்களின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தினோம். அதன்மூலம் இரண்டு ஆண்டுகளில் இதுவரை 23.54 இலட்சம் உழவர்கள் பயனடைந்து இருக்கிறார்கள். இதுவரை இல்லாத சாதனையாக மிகக் குறுகிய காலத்தில் 1.50 இலட்சம் இலவச வேளாண் மின் இணைப்புகள் புதியதாக வழங்கப்பட்டு இருக்கின்றன. இப்படி எண்ணற்ற திட்டங்களை வேளாண்துறை மூலமாக நிறைவேற்றி வருகிறோம். அதேபோல தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மேட்டூர் அணையைக் குறிப்பிட்ட நாளான ஜூன் 12ஆம் நாளிற்குள் திறந்து வைத்து வருகிறேன்.

குறிப்பிட்ட நாளில் திறந்து வைத்தால் மட்டும் போதாது, கடைமடை வரை காவிரி நீர் சென்றடைய வேண்டும் அதற்கும் திட்டமிட்டோம். அதற்காகக் கடந்த 2021ஆம் ஆண்டில், ரூ.62.91 கோடி மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், காவிரி நதிநீரைத் திறம்பட பயன்படுத்தி, குறுவை நெல் சாகுபடியை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக, நம்முடைய அரசு ரூ.61.09 கோடி மதிப்பீட்டில் குறுவை நெல் சாகுபடித் தொகுப்பு திட்டத்தைச் செயல்படுத்தியது. இதன் காரணமாக, காவிரி நதிநீர் கடைமடைப் பகுதி வரைக்கும் சென்று, கடந்த 2021ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் 4.9 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

அதேபோல், கடந்த 2022ஆம் ஆண்டில், மேட்டூர் அணையில் நீர் இருப்பு திருப்திகரமாக இருந்த காரணத்தினால், 19 நாட்கள் முன்னதாகவே, அதாவது மே 24ஆம் நாள் அன்றே மேட்டூர் அணையினைத் திறக்க நம்முடைய அரசு ஆணையிட்டது.

19 நாட்கள் முன்னரே அணை திறந்தாலும், அதற்கு முன்கூட்டியே அனைத்துக் கால்வாய்களையும் தூர் வாருவதற்கு நீர்வளத்துறை ரூ.80 கோடி மதிப்பீட்டில் அரசு ஆணையினை உரிய காலத்தில் வெளியிட்டு, அந்தப் பணிகள் எல்லாம் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. பணியின் தரம் குறித்து அனைத்துத் தரப்பு உழவர்களும் அப்போது மகிழ்ச்சியுடன் பாராட்டுத் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டும் காவிரி நதிநீரைத் திறம்பட பயன்படுத்தி நெல் உற்பத்தியை உயர்த்தும் நோக்கத்தில், ரூ.61.12 கோடிச் செலவில் குறுவை நெல் சாகுபடித் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

குறுவைப் பருவத்திற்குத் தேவைப்படும் குறைந்த வயதுடைய நெல் ரக விதைகள், இரசாயன உரங்கள், உயிர் உரங்கள், பயிர்க்கடன் போன்ற இடுபொருட்களும் டெல்டா மாவட்ட உழவர்களுக்கு உரிய காலத்தில் வழங்கப்பட்டன.

இதன் விளைவாகக் கடந்த ஆண்டில் குறுவை நெல் சாகுபடி கடந்த 48 ஆண்டுகளில் இல்லாத மிகப் பெரிய சாதனையாக, 5.36 இலட்சம் ஏக்கரைக் கடந்து, 12.76 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்து, சாதனை படைத்தது.

நடப்பு ஆண்டில் கோடைப் பருவத்தில் பெய்த மழையினால், டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீர் கணிசமாக உயர்ந்தது. மேலும், சென்ற ஆண்டில் மேட்டூர் அணை நீரை மிகவும் கவனமாகப் பயன்படுத்தியதன் காரணமாக, மேட்டூர் அணையின் நீர் இருப்புத் தற்போது 103.35 அடியாக உள்ளது. எனவே, மேட்டூர் அணையினைக் குறுவை நெல் சாகுபடிக்காக ஜூன் 12ஆம் நாளன்று திறப்பதற்கு நமது அரசு முடிவெடுத்தது.

நீர்வளத்துறை கடந்த இரண்டு ஆண்டுகளைப் போலவே, டெல்டா பகுதிகளில் கால்வாய்களைத் தூர்வாரும் பணிகளை மேற்கொண்டது. இதற்கென நடப்பாண்டில் ரூ.90 கோடியை அரசு அனுமதித்து, இந்தப் பணிகளை ஆய்வு செய்து விரைவாக முடிப்பதற்குக் கண்காணிப்பு அலுவலர்களும் நியமிக்கப்பட்டு, முடுக்கிவிடப்பட்டதால், இந்தப் பணிகள் எல்லாம் தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளன.

இந்தப் பணியின் முன்னேற்றத்தினை நேரடியாகப் பார்ப்பதற்காகச் சில நாட்களுக்கு முன்பு நானும், நம்முடைய மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களும், இன்னும் சில அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் தஞ்சாவூருக்கு நேரில் சென்று ஆய்வுகளை மேற்கொண்டோம். மேலும், குறுவை நெல் சாகுபடித் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து உழவர்களுடன் கலந்துரையாடி உரிய விவரங்களைக் கேட்டு அறிந்து கொண்டோம்.

முன்னதாக, மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களும், காவிரி டெல்டா மாவட்ட பகுதி உழவர்களுடன் கலந்துரையாடல் கூட்டத்தை நடத்தி, குறுவை நெல் சாகுபடியினை மூன்றாவது ஆண்டிலும் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு ஆணையிட்டிருந்தேன்.

அதன்படி, தற்போது குறுவை நெல் சாகுபடிக்குத் தேவையான குறைந்த நாள்

வயதுடைய நெல் ரக விதைகளும், இரசாயன உரங்களும், உயிர் உரங்களும் அரசு வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், தனியார் கடைகளிலும் இருப்பு வைக்கப்பட்டு, உழவர்களுக்கு உரிய காலத்தில் விநியோகிக்கப்பட்டன.

இதன் காரணமாக நிலத்தடி நீரைப் பயன்படுத்தி இதுவரை 1.6 இலட்சம் ஏக்கரில் குறுவை நெல்லில் நடவுப் பணி முடிவடைந்துள்ளது. மேலும், சமுதாய நாற்றங்கால் அமைத்து, காவிரி நதிநீர் வந்தவுடன், நடவுப்பணியினை உடனடியாகத் துவங்கும் வகையில் பணிகள் விரைவாக வேளாண்மைத் துறையினால் முடுக்கி விடப்பட்டன. இந்நிலையில் இன்றுமேட்டூர்அணையைத்திறந்துவைத்துள்ளேன்.

நமது அரசு பொறுப்பேற்று, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இன்று (12.06.2023), மேட்டூர் அணையினை உரிய காலத்திற்குள் நான் திறந்து வைப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், பாசன நீரினை டெல்டா மாவட்ட உழவர்கள் மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தி இடுபொருட்களைத் தேவையான அளவு உபயோகித்து, நடப்பு குறுவைப் பருவத்தில் நெல் உற்பத்தியை உயர்த்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நமது உழவர்களுக்கு நடப்பாண்டில் ரூ.75.95 கோடி மதிப்பீட்டில் குறுவை நெல் சாகுபடி தொகுப்பு திட்டத்தையும் இன்று நான் அறிவிக்கிறேன்.

குறுவைச் சாகுபடித் தொகுப்புத் திட்டம், 2023 என்ற இந்தத் திட்டத்தின்கீழ்,

ஏக்கருக்கு 45 கிலோ யூரியா, 50 கிலோ டிஏபி, 25 கிலோ பொட்டாஷ் என்ற விகிதத்தில், 2.5 இலட்சம் ஏக்கருக்குத் தேவையான இரசாயன உரங்கள் முழு மானியத்திலும், 1.24 இலட்சம் ஏக்கருக்குத் தேவையான நெல் விதைகள் 50 சதவிகித மானியத்திலும், மாற்றுப் பயிர் சாகுபடிக்காக 15,818 ஏக்கருக்கு மாற்றுப் பயிர் சாகுபடித் தொகுப்பும், 6,250 ஏக்கரில் பசுந்தாளுர விதைகளும், 747 பவர் டில்லர்களும், 15 பவர் வீடர்களும் மானியத்தில் விநியோகம் செய்வதற்காக, மொத்தம் ரூ.75.95 கோடி மதிப்பில் குறுவை சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

எனவே, இந்த நல்ல வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு காவிரி டெல்டா உழவர்கள் அனைவரும் பாசன நீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தி, தேவையான அளவு இரசாயன உரங்களை உபயோகித்து, நெல் சாகுபடியினை மேற்கொள்ளுமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு இன்று அறிவித்த குறுவைச் சாகுபடித் தொகுப்புத் திட்டத்தினால், நடப்பாண்டில் ஐந்து இலட்சம் ஏக்கருக்கும் அதிகமாக குறுவை நெல் சாகுபடி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உழவர்கள், வேளாண் தொழிலாளர் நலன் காக்க நம்முடைய அரசு எந்நாளும் தொடர்ந்து பாடுபடும் என்று மீண்டும் ஒருமுறை உங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

“காவிரி நதிநீரைத் திறம்பட பயன்படுத்தி, குறுவை நெல் சாகுபடியை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக, நம்முடைய அரசு ரூ.61.09 கோடி மதிப்பீட்டில் குறுவை நெல் சாகுபடி தொகுப்புத் திட்டத்தைச் செயல்படுத்தியது. இதன் காரணமாக, காவிரி நதிநீர் கடைமடைப் பகுதி வரைக்கும் சென்று, கடந்த 2021ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் 4.9 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.”

சமூக வலைத்தளப் பதிவுகள்

மக்கள் நல்வாழ்வுத்துறையின் முன்னோடி முயற்சிகளுக்கு வாழ்த்துக்கள்

வருமுன் காப்போம் திட்டத்தை வகுத்தளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, மக்கள் நல்வாழ்வுத் துறையின் மற்றுமொரு முன்னோடி முயற்சியாக, தமிழ்நாடெங்கும் 103 பன்னோக்குச் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

வழக்கமான மருத்துவ ஆலோசனைகளோடு, சிறப்புப்பிரிவு மருத்துவர்களைக் கொண்டு, தொற்றுநோய்களையும், தொற்றாநோய்களையும் உடனடியாகக் கண்டறியக்கூடிய பரிசோதனைகளையும் மேற்கொள்ளக் கூடிய வகையில் இந்த முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஏழை - எளிய நோயாளிகளுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில், அரசு மருத்துவமனைகளும், தனியார் மருத்துவமனைகளும் இணைந்து நடத்தும் இந்த முகாம்கள் வெற்றி பெற வாழ்த்துகிறேன். இந்தப் பன்னோக்குச் சிறப்பு மருத்துவ முகாம்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் மாண்புமிகு அமைச்சர்கள் – மருத்துவர்கள் – செவிலியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பாராட்டுகள்!

*தமிழ்நாடெங்கும் 103 பன்னோக்குச் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு - 24.06.2023*

பாலசாகித்ய புரஸ்கார், யுவசாகித்ய புரஸ்கார் விருதுகளைப் பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள்

நம் வரலாற்றின் வேர்களை இளையோர் அறிய, கீழடியைத் தன் கதைக்களமாய்க் கொண்டு ஆதனின் பொம்மையை உருவாக்கி, அதற்கு அங்கீகாரமாகப் பாலசாகித்ய புரஸ்கார் பெற்றுள்ள எழுத்தாளர் உதயசங்கர் அவர்களுக்கும்; இளமையில் பசி எனும் வலியை நாஞ்சில் நாட்டு மொழியில் மிக அழுத்தமான விவரிப்புகளால் பதிவு செய்த திருக்கார்த்தியல் சிறுகதைத் தொகுப்புக்காக யுவசாகித்ய புரஸ்கார் பெற்றுள்ள ராம் தங்கம் அவர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு - 23.06.2023*

சமூக நீதிக்கான பணியை அச்சமின்றி முன்னெடுத்தவர் திரு. வி.பி.சிங் அவர்கள்

முன்னாள் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்களது பிறந்தநாளில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை முன்னேற்றுவதில் உறுதியான அர்ப்பணிப்புடன் இருந்த அப்புரட்சியாளருக்கு என் புகழஞ்சலியைச் செலுத்துகிறேன். சமூகநீதிக்கான பணியை அச்சமின்றி முன்னெடுத்து, அனைவரையும் "இட ஒதுக்கீடு எங்கள் உரிமை" என ஓங்கி முழங்கச் செய்தவர் அவர்.

வாய்ப்பு மறுக்கப்பட்டோருக்கு அதிகாரமளிக்கும் இலக்கில் திரு. வி.பி.சிங் அவர்களும் தலைவர் கலைஞர் அவர்களும் ஒன்றிணைந்து செயல்பட்டவர்கள் ஆவர்.

திரு. வி.பி.சிங் அவர்களது சிந்தனைகள் மேலும் ஒளிமயமான, சமத்துவமான எதிர்காலத்தை நோக்கி நம்மைத் தொடர்ந்து வழிநடத்தட்டும்.

*முன்னாள் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி - 25.06.2023*

தீப்பெட்டித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான முக்கியமான நடவடிக்கை மேற்கொண்டமைக்கு நன்றி!

கடந்த ஆண்டு நான் எழுதியிருந்த கடிதத்தில் கோரியபடி, எங்கள் கவலைகளுக்குச் செவிமடுத்து, பாக்கெட் சிகரெட் லைட்டர்கள் இறக்குமதிக்குத் தடை விதிக்க நடவடிக்கை மேற்கொண்டமைக்காக மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் திரு. பியுஷ் கோயல் அவர்களுக்கு நன்றி. இது தமிழ்நாட்டில் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோரின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான முக்கியமான நடவடிக்கை ஆகும்.

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு - 29.06.2023*

அர்ப்பணிப்பும், திறமையும், அணியாக ஒருங்கிணைந்து விளையாடியப் பாங்கும் எங்களை பெருமைகொள்ளச் செய்கிறது

27 ஆவது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் தொடரில் அபாரமான வெற்றியைப் பெற்று, கோப்பையைக் கைப்பற்றியுள்ள தமிழ்நாடு மகளிர் கால்பந்து அணியினருக்குப் பாராட்டுகள். ஒரு போட்டியில் கூட தோற்காமல் இறுதிப்போட்டிக்கு முன்னேறி அடைந்திருக்கும் இவ்வெற்றி மிகவும் சிறப்புக்குரியது. உங்களது அர்ப்பணிப்பும், திறமையும், அணியாக ஒருங்கிணைந்து விளையாடிய பாங்கும் எங்களைப் பெருமைகொள்ளச் செய்துள்ளன. தொடர்ந்து உயரப் பறந்து மென்மேலும் நம் மாநிலத்துக்குப் பெருமை சேர்ப்பீராக!

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு - 28.06.2023*

இந்தியாவிலேயே மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுச் சாதனை

திராவிட மாடல் அரசின் செயல்திறனுக்கான சிறிய எடுத்துக்காட்டுதான் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் எனும் இந்தச் சாதனை. முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகத் தமிழ்நாட்டினை உயர்த்தி, தெற்காசியாவின் முதலீட்டு மையமாகத் தமிழ்நாட்டை ஆக்கிட உழைக்கிறோம். தொடர்ந்து அதற்கான வாய்ப்புகளை ஆராய்ந்து அவற்றில் சிறந்து விளங்கிடுவோம்.

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு - 04.07.2023*

சென்னை, கிண்டியில் உலகத்தரத்தில் நவீன வசதிகளுடன் ரூ.240.54 கோடிச் செலவில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 15.06.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 15.06.2023 அன்று, சென்னை, கிண்டி, கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் மொத்தம் 6 இலட்சம் சதுரஅடிப் பரப்பளவில், 1,000 படுக்கைகளுடன் ரூ.240.54 கோடிச் செலவில் உலகத்தரத்தில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையை மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடன் இணைந்து திறந்து வைத்தார். மேலும், சென்னை, கிண்டி, கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, 03.06.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பில், "சென்னைப் பெருநகரத்தில் உள்ள கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.250 கோடி மதிப்பீட்டில் 500 படுக்கை வசதிகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஒன்று அமைக்கப்படும்" என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டுவதற்காகச் சென்னை, கிண்டி, கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் சுமார் 4.89 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டுவதற்காக முதற்கட்டமாக ரூ.230 கோடி நிதியும், பின்னர் கூடுதலாக ரூ.10.54 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.03.2023 அன்று அடிக்கல் நாட்டினார்.

இந்த 1,000 படுக்கை வசதிகள் கொண்ட கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில், இருதயவியல் துறை, இருதய அறுவை சிகிச்சை துறை, நரம்பியல் துறை, நரம்பியல் அறுவை சிகிச்சை துறை, புற்றுநோய் மருத்துவத் துறை, புற்றுநோய் அறுவை சிகிச்சை துறை, குடல் இரைப்பை மருத்துவத் துறை, குடல் இரைப்பை அறுவை சிகிச்சை துறை, சிறுநீரக அறுவை சிகிச்சை துறை, சிறுநீரக மருத்துவத் துறை, இரத்தநாள அறுவை சிகிச்சை துறை, மூளை இரத்தநாள கதிரியல் துறை ஆகிய உயர் சிறப்பு மருத்துவச் சிகிச்சைக்கான வசதிகளைக் கொண்டுள்ளன.

மேலும், அவசர சிகிச்சை பிரிவு, மயக்கவியல் மற்றும் தீவிர சிகிச்சை, மத்திய ஆய்வகம், இரத்த வங்கி, கதிரியல் துறை (CT, MRI, USG, Digital x-ray), இயன்முறை மருத்துவம், மறுவாழ்வியல் துறை ஆகிய சிறப்புத் துறைகளையும், இருதய கேத்லேப் பிரிவு, மூளை இரத்தநாள கேத்லேப் பிரிவு, தீவிர இருதய சிகிச்சை பிரிவு, தீவிர மயக்கவியல் பிரிவு, 15 நவீன அறுவை அரங்குகள் ஆகிய வசதிகளையும் கொண்டுள்ளன.

இந்த உயர் சிறப்பு மருத்துவமனையில், ரூ.146.52 கோடிச் செலவில், பல்வேறு நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவ உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், மருத்துவமனையின் செயல்பாட்டிற்காக மருத்துவர்கள், செவிலியர்கள், பிற துணை மருத்துவ ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள் உட்பட 1,000 பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் நவீன வசதிகளுடைய தனி அறைகள், மத்திய நுண்கிருமி நீக்கு நிலையம், நவீன சலவையகம், மத்திய மருந்தகம், மத்திய ஆய்வகம், மருத்துவப் பதிவேடுகள் துறை, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், சிற்றுண்டியகம், தகவல் மையம், 24 மணி நேர தூய்மைப் பணி மற்றும் பாதுகாப்பு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, உதவி மையம், காத்திருப்பு அறை, மருத்துவக் கழிவு பராமரிப்பு, ஆக்ஸிஜன் குழாய் அமைப்பு, தரக்கட்டுப்பாட்டுத் துறை, மத்திய சேமிப்புக் கிடங்கு, ஊட்டச்சத்து, உணவுமுறை ஆகிய இதர வசதிகளையும் கொண்டுள்ளன.

இம்மருத்துவமனையில், இயக்குநர் அலுவலகம், செவிலியர் கண்காணிப்பாளர் அலுவலகம், நிருவாக அலுவலகம், நிலைய மருத்துவ அலுவலகம், கல்வி மற்றும் ஆராய்ச்சி துறை ஆகிய நிருவாகப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மருத்துவமனை சென்னையின் முக்கிய பகுதியில் அமைந்துள்ளதாலும், இந்த மருத்துவமனையில் உள்ள மேம்பட்ட வசதிகளாலும் தமிழ்நாட்டு மக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

'ஒரு மனிதரின் வாழ்க்கை என்பதை அவரது மரணத்துக்குப் பிறகு இருந்து, கணக்கிட வேண்டும்' என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அந்தவகையில் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல, நிறைவுற்றதற்குப் பின்னாலும் தமிழ்ச் சமுதாயத்துக்காகப் பயன்பட்டுக் கொண்டு இருக்கும் மாபெரும் தலைவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

இந்தக் கிண்டி பகுதி, சைதாப்பேட்டை தொகுதிக்கு உட்பட்டது. சைதாப்பேட்டை என்பது, கலைஞர் அவர்கள் நின்று, வென்ற தொகுதி. "சைதாப்பேட்டை வேட்பாளர் – திருவாளர் 11 இலட்சம்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ஆம் ஆண்டு தேர்தலுக்கு அறிவிப்பு செய்தார்கள்.

எனவே, இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இப்போதும் இருந்து ஒரு மாபெரும் மருத்துவமனையை வாங்கிக் கொடுத்திருக்கிறார் தலைவர் கலைஞர் அவர்கள். இந்த வளாகத்துக்கு 'கிங் இன்ஸ்டிடியூட்' என்று பெயர். இதுவும் பொருத்தமானதுதான்.

கலைஞர் என்றாலே 'கிங்' தான். அவர் வாழ்ந்த காலம் முழுவதும் கிங்-ஆகவும் கிங் மேக்கராகவும் இருந்தவர். அந்தவகையில் கிங் ஆராய்ச்சி வளாகத்துக்கு இதனை விடப் பொருத்தமான பெயரும் இருக்க முடியாது. பொருத்தமான இடமும் இருக்க முடியாது.

பதினைந்தே மாதத்தில் ... மறுபடியும் சொல்கிறேன்... பதினைந்தே மாதத்தில்... மறுபடியும் சொல்கிறேன்... பதினைந்தே மாதத்தில் இந்த மருத்துவமனையைக் கட்டி இருக்கிறோம். இதுதான் மிக முக்கியமான சாதனை!

2015ஆம் ஆண்டு அறிவித்துவிட்டு 2023ஆம் ஆண்டுவரை இரண்டாவது செங்கல்லைக்கூட எடுத்து வைக்காத அலட்சியத்தோடு ஒரு செங்கல் கதை உங்களுக்குத் தெரியும், முன்னால் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை இருக்கும் நிலையில், அடிக்கல் நாட்டிய 15 மாதத்தில் இந்த மாபெரும் மருத்துவமனையை நாம் கட்டி எழுப்பி இருக்கிறோம்.

மக்களுக்கு உண்மையான சேவை நோக்கத்தோடு திட்டங்களைத் தீட்டுபவர்களுக்கும் மக்களை ஏமாற்றுவதற்காகத் திட்டங்களை அறிவிப்பவர்களுக்குமான வேறுபாட்டைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

2021ஆம் ஆண்டு மே 7ஆம் நாள் தி.மு.க. அமைச்சரவை பொறுப்பேற்றுக் கொண்டது. ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் பிறந்தநாளையொட்டி கழக அரசு 6 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டது. அதில் மிக முக்கியமானது, "தென்சென்னையில் ரூ.250 கோடி மதிப்பீட்டில் 500 படுக்கை

வசதிகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை" அமைக்கப்படும் என்பதாகும்.

மருத்துவமனைக்கான 4.89 ஏக்கர் நிலம் சென்னை கிண்டி, கிங் மருத்துவ வளாகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டது. 500 படுக்கைகள் என்ற எண்ணிக்கையைப் பின்னர் ஆயிரம் என உயர்த்தினோம். 2022, மார்ச் 21 அன்று நான் அடிக்கல் நாட்டினேன். இது 2023 ஜூன் மாதம். அதாவது மொத்தம் 15 மாதத்திற்குள் இந்த மருத்துவமனை கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

ஆறு தளங்கள் கொண்ட இந்த மருத்துவமனை வளாகம், மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

A – புற நோயாளிகளுக்கான சிகிச்சை மற்றும் நிருவாகக் கட்டடம்,

B – அறுவை சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு,

C – எக்ஸ்ரே மற்றும் உள்நோயாளிகளுக்கான சிகிச்சைப் பிரிவு என அமைக்கப்பட்டுள்ளன.

அடித்தளம் – மருந்துகள் சேமிப்பு அறை, தரைத்தளம் – அவசர சிகிச்சை பிரிவு, முதல் தளம் – அறுவை சிகிச்சை வார்டுகள், 2ஆவது தளம் – பொது வார்டு, அறுவை சிகிச்சை அரங்குகள், 3ஆவது தளம் – புற்றுநோய் மருத்துவச் சிகிச்சைப் பிரிவு, 4ஆவது தளம் – தனி அறைகள், ரத்த வங்கி, 5ஆவது தளம் – மயக்க மருந்தியல் பிரிவு, 6ஆவது தளம் – தொடர் சிகிச்சைக்கான வார்டுகள்.

10 அறுவை சிகிச்சை அரங்குகள், உயர்தர ஆய்வகங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வசதிகள், 10 மின் தூக்கிகள், சலவைக் கூடங்கள், உணவகங்கள், தீத்தடுப்புக் கருவிகள் என நவீன வசதிகளுடன் உலகத்தரத்தில் இந்த மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது.

இதனை பிரம்மாண்டமானதாக மிகப் பிரம்மாண்டமானதாக மிக மிகப் பிரம்மாண்டமானதாக கட்டித் தந்துள்ள மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்களையும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்களையும் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

உலகத் தரத்துடனும் மிகப் பிரம்மாண்டமாகவும் இதனை எழுப்ப வேண்டும் என்பதற்காக வாரந்தோறும் இங்கு வந்து ஆய்வு நடத்திப் 'பார்த்துப் பார்த்துச் செதுக்கினார்' என்பார்களே, அதைப் போலத் திட்டமிட்டுச் செய்து மக்கள் நல்வாழ்வுக் கோட்டையாக எழுப்பிக் காட்டி இருக்கிறார் நம்முடைய அமைச்சர் எ.வ.வேலு அவர்கள்.

ஏவாமலேயே பணியாற்றக் கூடியவர் வேலு என்று கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர் நம்முடைய வேலு அவர்கள். செயல்படுவதில் மாரத்தான் மந்திரி என்று என்னால் சொன்னால் அது மா.சு. தான். இவர்கள் இருவரும் சேர்ந்து கலைஞர் புகழுக்கு மேலும் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

பொதுப்பணி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் செயலர்கள், அதிகாரிகள், அலுவலர்கள், இதனைக் கட்டித் தந்த கட்டுமான நிறுவனம், அதன் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தலைவர் கலைஞர் அவர்களை- 'டாக்டர் கலைஞர்' என்றுதான் அனைவரும் அழைப்பார்கள். அவர் மெடிக்கல் டாக்டர் அல்ல, சோஷியல் டாக்டர் – சமூக மருத்துவர் அவர். இந்தத் தமிழ்ச்சமுதாயத்தின் நோய்களைத் தீர்த்துக் குணப்படுத்த வந்த சமூக மருத்துவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

தனது அறிவாற்றலை, சிந்தனைத் திறனை மொழி ஆளுமையை, செயல் வேகத்தை, துணிச்சலை வாழ்நாளின் 95 வயது வரையிலும் தமிழ்ச்சமுதாயத்தின் நன்மைக்காகவே பயன்படுத்தியவர் கலைஞர் அவர்கள். "நான் கோட்டையில் இருந்தாலும் குடிசைகளைப் பற்றியே நினைப்பவன்" என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள். மிகமிகப் பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் பிறந்து ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களுக்காக வாழ்நாள் முழுவதும் சேவையாற்றியவர் தலைவர் கலைஞர் அவர்கள். அவர் பெயரால் அமைந்த நூலகத்தை அடுத்த மாதம் மதுரையில் திறக்க இருக்கிறோம்.

இன்றைய தினம் அவர் பெயரால் மருத்துவமனை திறக்கப்படுகிறது. அவர் பெயரை எந்தத் திட்டத்துக்கும் வைக்கலாம். அந்த வகையில் அனைத்துக்கும்

பொருத்தமானவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

முதன்முதலாக ஆட்சிக்கு வந்த நேரத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 3ஆம் நாள் தனது பிறந்தநாளை விளிம்பு நிலை மக்களுக்கான நாளாக மாற்றி அவர்களுக்கான திட்டங்களைத் தொடங்கும் நாட்களாக அதனைக் கொண்டாடியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

1971ஆம் ஆண்டு ஜூன் 3இல் 'பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம்' தொடங்கினார். 1972ஆம் ஆண்டு ஜூன் 3இல் 'கண்ணொளித் திட்டம்' தொடங்கினார். 1973ஆம் ஆண்டு ஜூன் 3இல் கை ரிக்க்ஷாவுக்குப் பதிலாக இலவச சைக்கிள் ரிக்க்ஷா வழங்கும் திட்டத்தைத் தொடங்கினார்.

தலைவர் கலைஞர் எந்தளவுக்கு ஏழை – எளிய, விளிம்பு நிலை மக்களின் ஏந்தலாக இருந்தார் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் தனது வாழ்க்கை வரலாறாக 'நெஞ்சுக்கு நீதி' எழுதினார் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். நெஞ்சுக்கு நீதியின் முதல் பாகம் வெளியீட்டு விழா 1975ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் நாள் கலைவாணர் அரங்கில் நடப்பதாக ஏற்பாடு ஆனது. முதல் பாகத்தை வெளியிட அன்றைய குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அமகது அவர்கள் ஒப்புக்கொண்டிருந்தார். நூலைப் பெற்றுக்கொள்ள அன்றைய தமிழ்நாடு ஆளுநர் கே.கே.ஷா அவர்கள் வருவதாக ஒப்புக்கொண்டார்கள். கடைசி நேரத்தில், இதோ இப்போது நடந்திருப்பதைப் போலவே, அப்போதும் குடியரசுத் தலைவரை வரவிடாமல் சிலர் தடுத்துவிட்டார்கள். அதைப் பற்றி எல்லாம் கவலைப்படவில்லை தலைவர் கலைஞர் அவர்கள். விழாவைத் தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி நடத்தினார் தெரியுமா? நெஞ்சுக்கு நீதி முதல் பாகத்தின் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்தவர் கண்ணொளி அற்றவரும் தமிழ்நாடு விழி இழந்தோர் சங்கத் தலைவருமான ஆசீர் நல்லதம்பி! அவர்தான் தலைமை வகித்தார். நூலை வெளியிட்டவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டவரும் தொழுநோயாளிகள் மறுவாழ்வுச் சங்கத்தின் பொதுச்செயலாளராக இருந்தவருமான கவிஞர் முகமது அலி அவர்கள்! நூலைப் பெற்றுக் கொண்டவர் கால் ஊனமுற்ற மாற்றுத்திறனாளியான செல்வி சாந்தகுமாரி அவர்கள்! சக்கர நாற்காலியில் மேடைக்கு வந்து நூலைப் பெற்றுக் கொண்டார் சாந்தகுமாரி அவர்கள். இத்தகைய ஏழைப் பங்காளர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

குடியரசுத் தலைவர் அவர்கள் வரவில்லையே என்பதைக் குறிப்பிட்டு, "என் வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது தொடர்ந்து 24 மணி நேரம் நீடித்ததில்லை" என்று கலைஞர் அவர்கள் எழுதினார்.

இப்படிப் பல்வேறு சோதனைகளைக் கடந்துதான் கலைஞர் அவர்களும் வளர்ந்தார். இப்போது நாமும் வளர்ந்துகொண்டு இருக்கிறோம். மகிழ்ச்சி 24 மணிநேரம் கூட நீடிக்க முடியாத அளவுக்குச் சோதனைகள் வந்தாலும் – 100 ஆண்டுகள் கழித்தும் கலைஞர் அவர்கள் பெயர் தமிழ்நாட்டில் நின்று நிலைத்துள்ளது. அவருக்குச் சோதனைகள் கொடுத்தவர்கள் காலச்சக்கரத்தில் மறக்கப்பட்டு விட்டார்கள். கலைஞர் அவர்கள்தான் இன்னும் பல நூற்றாண்டுக் காலத்துக்கு நினைக்கப்பட்டு வாழ்வார்.

இந்த மருத்துவமனை என்பது பல்லாண்டுகளுக்கு மக்களைக் காப்பாற்ற இருக்கிறது. நம்மிடம் விட்டால் இதுபோன்ற மருத்துவமனையை ஆண்டுக்கு ஒன்று கட்டிக்காட்ட முடியும். அத்தகைய மருத்துவக் கட்டமைப்பு உள்ள மாநிலம் நமது தமிழ்நாடு!

மருத்துவக் கட்டமைப்பில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. 'மெடிக்கல் சிட்டி' என்றுதான் சென்னைக்குப் பெயர். நாட்டிற்கே முன்னோடித் திட்டமாகக் 'கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' உருவாக்கி இலட்சக்கணக்கான ஏழை, எளிய மக்கள் இலவசமாக உயர்சிகிச்சை பெற்று உயிர்பிழைக்க வழிவகுத்த மனிதநேயர்தான் நம் நூற்றாண்டு நாயகர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதுமட்டுமல்ல, 1989ஆம் ஆண்டே டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையாரின் பெயரில் ஏழைக் கர்ப்பிணிகளுக்காக மகப்பேறு நிதி உதவித் திட்டத்தைத் தொடங்கியவரும் தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர்தான்.

2015ஆம் ஆண்டு, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்த அம்மா குழந்தைகள் நல பெட்டகத் திட்டமானாலும், அம்மா கர்ப்பிணித் தாய்மார்கள் நலப் பெட்டகத் திட்டமானாலும் எந்தவித அரசியல் காழ்ப்பும் இன்றி இப்போதும் நமது அரசு தொடர்ந்து நடத்தி வருகிறது. அதுதான் தலைவர் கலைஞர் அவர்கள் நமக்குக் காட்டிய வழி. யார் செய்திருந்தாலும் மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டமானால் அதை அரசியல் பார்வையோடு பாழாக்காமல், இன்னும் செழுமைப்படுத்துவதுதான் பேரறிஞரின் தம்பியான தலைவர் கலைஞரின் பாணி.

கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் விழுப்புரம், திருவாரூர், தருமபுரி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளைத் திறந்து வைத்தார்கள். மாவட்டத்துக்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற சிந்தனையை முதன்முதலாக விதைத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

திரு. மா.சு. அவர்கள் சொன்னாரே, இப்போது நாம் 'மக்களைத் தேடி மருத்துவம்', 'இன்னுயிர்க் காப்போம் – நம்மைக் காக்கும் 48' போன்ற நாட்டிற்கே பல முன்மாதிரியான மருத்துவத் திட்டங்களை வகுத்துச் செயல்படும் திறன் உலகம் முழுவதும் பல சுகாதார ஆர்வலர்களைத் தமிழ்நாட்டின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. நாட்டிலேயே 36 அரசு மருத்துவக் கல்லூரிகளுடன், இந்தக் கல்லூரிகளில் சுமார் 5,050 MBBS இடங்களுடன் தமிழ்நாடு முதலிடத்தில் திகழ்கிறது.

1999ஆம் ஆண்டு 'வருமுன் காப்போம்' என்ற திட்டத்தைத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் தொடங்கினார். 'கலைஞரின் வருமுன் காப்போம்' திட்டமாக இன்றுவரை அது செயல்பாட்டில் உள்ளது.

ஏழை - எளிய மக்களுக்கு இந்த முகாம்கள் பயனளித்துக் கொண்டு இருக்கின்றன. இந்த நிதியாண்டில் மட்டும் 1,502 முகாம்கள் நடத்தப்பட்டு 14 இலட்சத்து 79 ஆயிரத்து 732 பேர் பயனடைந்துள்ளார்கள். 108 ஆம்புலன்ஸ் சேவையை முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தார். இப்போது பச்சிளம் குழந்தைகளுக்கான அவசர ஊர்தியும் செயல்பட்டு வருகிறது. இருசக்கர அவசர கால ஊர்தியும் நடமாடும் மருத்துவப் பெட்டகமும் இப்போது பயன்பாட்டில் உள்ளன. ஒருங்கிணைந்த முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 1,760 மருத்துவமனைகள் இணைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் சிறப்பம்சமாக ஆதரவின்றித் தவிக்கும் 1,320 குழந்தைகளுக்குச் சிறப்பு என்ரோல்மெண்ட் வழங்கப்பட்டுள்ளது. செய்தித் துறையில் அங்கீகரிக்கப்பட்ட 1,414 செய்தியாளர்கள், பருவ இதழ் செய்தியாளர்கள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில்

பயனாளிகளாக வருமான வரம்பின்றிச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தில் இதுவரை 1 கோடியே 46 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளார்கள். தேசிய நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் குறிப்பாக, பெண்கள், குழந்தைகள் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

இப்படி மக்கள் நல அரசாக மக்களைக் காக்கும் அரசாக மக்கள் நல்வாழ்வு அரசாகத் தலைவர் கலைஞர் அவர்கள் வழியில் தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது. தலைவர் கலைஞர் அவர்களும் சோதனைகளைச் சாதனைகளாக மாற்றினார். அவர் வழியில் நாங்களும் சோதனைகளைச் சாதனைகளாக மாற்றுவோம்.

தமிழ்நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் நன்மைகள் செய்ய நினைக்கும்போதெல்லாம் அதற்கு ஒரு இடைஞ்சலை ஏற்படுத்தி நம்மைத் திசை திருப்பி நன்மைகளைத் தடுக்கப் பார்ப்பார்கள். அதற்காக டைவர்ட் ஆக மாட்டோம். மக்கள் நலன் ஒன்றே எனது இலக்கு என்ற நேர்வழியில் பயணிப்போம்.

'நான்கு குழந்தைகளுக்குத் தாயாக இருப்பவள், அதில் எந்தக் குழந்தை மெலிந்து இருக்கிறதோ அந்தக் குழந்தையையே அதிகம் கவனிப்பாள். அப்படி மெலிந்த குழந்தைகளைக் காக்கும் அரசு எமது அரசு' என்று தலைவர் கலைஞர் அவர்கள் சொல்வார். அதையேதான் இன்றைய திராவிட மாடல் அரசு பின்பற்றுகிறது.

இன்று திறக்கப்பட்டுள்ள மருத்துவமனையாக இருந்தாலும் - அடுத்த மாதம் திறக்கப்படும் நூலகமாக இருந்தாலும் இத்தகைய தாயுள்ளம் கொண்ட கலைஞரின் பேரால் அமைவதே பொருத்தமானது. இதனைத் திறந்து வைக்கும் வாய்ப்பு என்பது என் வாழ்நாளில் கிடைத்த மாபெரும் பேறாக நான் கருதுகிறேன்!

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல - கலைஞரின் மகன் என்ற பூரிப்பு உணர்வோடு இதனைத் திறந்து வைத்திருக்கிறேன்.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில், இன்னும் ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன். இதைச் சொன்னால் நமது நீர்வளத்துறை அமைச்சருக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.

அவர் பலமுறை இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார். வேலூர் மாவட்டத்தில் சி.எம்.சி போன்ற பல்வேறு பெரிய மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற தமிழ்நாடு மட்டுமன்றி இந்தியா முழுவதிலும் இருந்து மக்கள் வருகிறார்கள். இவர்களில் பொருளாதார ரீதியாக அதிக வசதியில்லாத பலரும் சிகிச்சைக்காக வருவதாலும் அவர்களுடன் வருபவர்கள் வேலூரில் தங்குவதற்கு, குறைந்த கட்டணத்தில் அறைகள் வாடகைக்குக் கிடைப்பதில்லை என்பது அரசின் கவனத்திற்குப் பலமுறை கொண்டுவரப்பட்டது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மனிதநேய பண்பாட்டு விழுமியத்தினைக் கடைபிடிக்கும் நமது அரசு, இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் வேலூர் அருகே சத்துவாச்சாரி உள்வட்டத்தில் உள்ள பெருமுகை என்ற கிராமத்தில் 2 எக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு அதில் 250 படுக்கை வசதி கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுத் தங்கும் விடுதி கட்டப்படும், என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திராவிட மாடல் அரசின் அங்கங்களாக உள்ள எங்கள் அனைவரையும் இன்றும் இயக்கிக் கொண்டிருக்கும் இயங்கு சக்தியாகத் தலைவர் கலைஞர் தான் இருக்கிறார். அவர் பெயரை உச்சரிக்கும் போதே ஓராயிரம் மடங்கு பலம் பெறுகிறோம். அந்தப் பலத்தில் எங்களது பயணத்தைத் தொடர்வோம்!

தமிழ் மக்களை வாழ வைத்துக் கொண்டிருக்கக்கூடிய நூற்றாண்டு காணும் தலைவர் கலைஞர் புகழ் வாழ்க! வாழ்க! வாழ்க! என வாழ்த்தி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

தெரிந்து கொள்வோம்...

- ❖ அனைவருக்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டுத் தமிழ்நாடு அரசு பொது விநியோகத் திட்டம் / சிறப்புப் பொது விநியோகத் திட்டம் ஆகியவற்றின் மூலம் அத்தியாவசியப் பண்டங்களைக் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்து வருகிறது.
- ❖ விநியோகம் செய்யப்படும் அத்தியாவசியப் பண்டங்களைச் சிலர் முறைகேடாக கள்ளச்சந்தையில் விற்று அதிக லாபம் ஈட்டும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றனர்.
- ❖ உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள், குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்கள் தொடர் ரோந்து பணி மேற்கொண்டு அத்தியாவசியப் பண்டங்கள் கடத்தல், பதுக்கலில் ஈடுபடுவோர் / உடந்தையாகச் செயல்படுவோர் மீது, இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955, தொடர்புடைய கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ் வழக்குப் பதிவு செய்து உரிய மேல் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.
- ❖ தொடர் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் கள்ளச்சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், 1980இன்படி அவ்வப்போது தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டு வருகின்றனர்.
- ❖ 01.05.2023 முதல் 31.05.2023 வரையிலான ஒரு மாத காலத்தில் கள்ளச்சந்தையில் விற்பதற்காகக் கடத்த முயன்ற, ரூ.18,41,994 மதிப்புள்ள 2,447 குவிண்டால் பொது விநியோகத் திட்ட அரிசி, 269 எரிவாயு உருளைகள், 180 கிலோ கோதுமை, 1,100 கிலோ துவரம் பருப்பு, மண்ணெண்ணெய் 450 லிட்டர் ஆகியவையும், மேற்கண்ட கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 150 வாகனங்களும் கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளன.
- ❖ குற்றச்செயலில் ஈடுபட்ட 561 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கள்ளச்சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1980இன்கீழ் 2 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்றியமையாப் பண்டங்கள் கடத்தல், பதுக்கல் தொடர்பாகப் பொதுமக்கள் 1800 599 5950 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

சென்னை, நந்தம்பாக்கத்தில்

ரூ.116 கோடி மதிப்பீட்டில் நிதிநுட்ப நகரம்

ரூ.254 கோடி மதிப்பீட்டில் நிதிநுட்பக் கோபுரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அடிக்கல் நாட்டினார் - 17.06.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 17.06.2023 அன்று, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் சென்னை, நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் சென்னை, ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கத்தில் ரூ.116 கோடி மதிப்பீட்டில் சுமார் 56 ஏக்கர் நிலப்பரப்பில், நிதிநுட்ப நகரம் (FinTech City) அமைப்பதற்கும், அங்கு முதற்கட்டமாக ரூ.254 கோடி மதிப்பீட்டில் 5.6 இலட்சம் சதுர அடி கட்டடப் பரப்பளவில் சர்வதேச தரத்திலான நிதிநுட்பக் கோபுரம் (FinTech Tower) என்ற அடுக்குமாடிக் கட்டடம் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டினார்.

நிதிநுட்ப நகரத்திற்கு (FinTech City) அடிக்கல் நாட்டுதல்

தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய அதிவேக வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, கடந்த 2000ஆம் ஆண்டு சென்னை ராஜீவ் காந்தி சாலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொலைநோக்குப் பார்வையோடு டைடல் பார்க் (TIDEL Park) அமைக்கப்பட்டது. இதன்மூலம் அந்தச் சாலை மட்டுமன்றி, அப்பகுதி முழுவதும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமையப்பெற்று, தற்போது தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் அடையாளமாக விளங்கி வருகின்றது.

அதேபோன்று, டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி உலகம் நகர்ந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், நிதிநுட்பத் துறை சார்ந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கி, நிதிநுட்பத் துறையில் சிறந்து விளங்கும் மாநிலமாகத் தமிழ்நாட்டினை உருவாக்க வேண்டும் என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் உயரிய நோக்கமாகும்.

அதை நிறைவேற்றும் வகையில், 2021-2022ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையில், நிதிநுட்பத் துறை வளர்ச்சிக்குத் தமிழ்நாட்டில் மாபெரும் வாய்ப்புகள் உள்ளதால் அதனை முன்னெடுக்கும் வகையில் சென்னை நந்தம்பாக்கத்தில் நிதிநுட்ப நகரம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் சென்னை, ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கத்தில் ரூ.116 கோடி மதிப்பீட்டில், 56 ஏக்கர் நிலப்பரப்பில் நிதிநுட்ப நகரம் அமைக்கப்படவுள்ளது. இந்த நிதிநுட்ப நகரம், நிதித்துறை சார்ந்த உள்நாட்டு, பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் கிளைகளை அமைப்பதற்கு ஏதுவாகச் சாலைகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், திடக்கழிவு மேலாண்மை, மழைநீர் வடிகால் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும். மேலும், அங்கு பணிபுரிபவர்களுக்கு அந்நகரத்திலேயே குடியிருப்பு வசதி ஏற்படுத்தப்படுவதுடன், வணிக வளாகங்கள், நட்சத்திர விடுதிகள், பூங்காக்கள், உணவகங்கள் போன்ற அனைத்து வசதிகளையும் கொண்டிருக்கும். இந்நகரம் அமைவதன் மூலம் ரூ.12,000 கோடி அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்படுவதுடன், சுமார் 80,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திட வழிவகை ஏற்படும்.

நிதிநுட்பக் கோபுரம் (FinTech Tower) கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்

நிதிநுட்ப நகரத் திட்டத்தின் ஒரு பகுதியாக ரூ.254 கோடி மதிப்பீட்டில், 5.6 இலட்சம் சதுர அடி கட்டடப் பரப்பளவில் சர்வதேசத் தரத்திலான ஒரு நிதிநுட்பக் கோபுரம் என்ற அடுக்குமாடிக் கட்டடம் கட்டப்படவுள்ளது. நிதி மற்றும் நிதிநுட்ப நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளைத் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளுடன் தயார் நிலையில் உள்ள அலுவலகங்கள் இங்கு அமைக்கப்படும். இதில் 250 இருக்கைகள் மற்றும் 50 இருக்கைகள் கொண்ட கூட்ட அரங்கங்கள், குழந்தைகள் காப்பகம், உடற்பயிற்சிக் கூடம், உணவகங்கள் போன்றவை அமைக்கப்படும். இந்த நிதிநுட்பக் கோபுரம் அமைவதன் மூலம், ரூ.1,000 கோடி அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்படுவதுடன் சுமார் 7,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திட வழிவகை ஏற்படும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு எடுத்த பல்வேறு முன்னெடுப்புகளின் காரணமாகத் தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது.

இந்தியாவிற்கே முன்மாதிரியான மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு வளர்ந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, தொழில்துறையானது மிக வேகமான முன்னேற்றங்களை உருவாக்கித் தந்து வருகிறது.

முன்பு நம்முடைய திரு.தங்கம் தென்னரசு அவர்கள் தொழில்துறை அமைச்சராகச் செயல்பட்டார்கள். அவரது வழித்தடத்தில் இப்போது திரு.டி.ஆர்.பி.ராஜா அவர்கள், தொழில்துறை அமைச்சராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு அரசின் தொழில்துறை நிகழ்ச்சிகள் என்பவை நமது மாநிலத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் நிகழ்ச்சிகளாக அமைந்திருக்கின்றன.

தொழில்துறையில், சாதனை மேல் சாதனைகளை நாம் செய்து வருகிறோம். முதலீடுகளை ஈர்ப்பதற்கு எடுத்து வைத்திடும் ஒவ்வொரு அடியும், வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் ஒரு பெரிய இலட்சியத்தினைக் கொண்டதாக இருக்கின்றது. அனைவரையும் உள்ளடக்கிய நமது திராவிட மாடல் வளர்ச்சி பல மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

நமது கடுமையான முயற்சி, உலகளாவிய நிறுவனங்களது கவனங்களை வெகுவாக ஈர்த்திருக்கிற காரணத்தால் தொழில் நிறுவனங்கள் தங்கள் முதலீடுகளை மேற்கொள்ள தமிழ்நாட்டை நோக்கி வந்த வண்ணம் இருக்கின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள இளைஞர்களும், பெண்களும் அவர்களது வசிப்பிடத்திற்கு அருகிலேயே பணிபுரிய ஏதுவாக, பரவலாக, மாநிலம் முழுவதும் இம்முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிதிநுட்பத்துறைக்கான மின்னணுமயமாக்கப்பட்ட நிதிச்சேவைகள் அனைத்தும் ஏழை, எளிய மக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும். ஆன்லைன் விற்பனைகள் இன்னும் பலமடங்கு அதிகரித்திருக்கின்றன.

கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் அதிகரிக்கத் தொடங்கிய மின்னணுமயமாக்கப்பட்ட வங்கிச் சேவைகளின் பயன்பாடு, தற்போது பன்மடங்கு வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த வளர்ச்சியை நன்கு பயன்படுத்திக் கொண்டு நாமும் வளர்ந்திடவேண்டியது அவசியம் என்பதை அரசின் கடமையாக நான் கருதுகிறேன்.

கைப்பேசி பணப்பரிவர்த்தனை

தற்போதுள்ள சூழ்நிலையில், ATM-இல் பணம் எடுப்பதைவிட, கைபேசி மூலமாகப் பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்வது அதிகமாக உள்ளது. வங்கிகள் ஏறக்குறைய முழு டிஜிட்டல் வங்கிகளாக மாறிவிட்டனவோ என்ற அளவிற்கு, தற்போது டிஜிட்டல் பணபரிவர்த்தனைகள் அதிகரித்து வருகின்றன. முற்றிலுமாக எல்லா இடங்களுக்கும் எல்லாத் தரப்பினரையும் இது இன்னும் சென்றடையவில்லை என்று சொன்னாலும், எதிர்காலத்தைக் கருதி, அதற்கு ஏற்ப நமது திட்டமிடுதல்கள் இருக்கவேண்டும்.

தற்போது அதிவேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், மின்னணுவியல், புத்தாக்கம் மற்றும் புத்தொழில் நிறுவனங்களும் தமிழ்நாட்டில் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளன.

பாரம்பரியமாகச் செயல்பட்டு வரும் வங்கி, வங்கி அல்லாத நிதிநிறுவனச் சேவைகள் வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைக்கும் நிதிநுட்பத்துறையும் தமிழ்நாட்டில் மிகப்பெரிய வளர்ச்சி காணும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

நிதிநுட்பத்தொழில் சூழலமைப்பைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது என்பதற்கு இங்கு அமையப் பெற்றுள்ள நிறுவனங்களே சாட்சி.

படித்த திறன்மிகு இளைஞர்களின் சக்தி இங்கு கொட்டிக் கிடக்கிறது. பல வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணமாக அமைந்திருக்கிறது. இதனை நாம் தக்க வைத்துக் கொள்ளவேண்டும். அடுத்த கட்டத்திற்கும் எடுத்துச் செல்லவேண்டும்.

நாளை வரப்போகும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப, நமது இளைஞர்களின் திறன்களை வளர்த்து, முன்னேறுவதில் நாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். அதன் ஒரு பகுதியாகத்தான், 'நான் முதல்வன்' திட்டத்தைத் தொடங்கி இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறோம்.

நிதிநுட்பத்துறை முதலீடுகளை மதிநுட்பத்துடன் ஈர்க்க, நாங்கள் ஏராளமான முன் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

நிதிநுட்பக் கொள்கை 2021

2025ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை நிதிநுட்ப நிறுவனங்களின் உலகளாவிய மையமாக மாற்றக்கூடிய வகையில் தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை 2021 என்ற சிறப்புக் கொள்கையை நான் வெளியிட்டிருக்கிறேன்.

- ரூ.50 கோடிக்கு மேல் முதலீடு மேற்கொள்ளும் நிதிநுட்ப நிறுவனங்களுக்குப் பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.
- தொழில்துறை வழிகாட்டி நிறுவனத்தில் தனியே ஒரு நிதிநுட்பப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.
- தொழில்துறை அமைச்சர் தலைமையில் ஒரு நிதிநுட்ப ஆட்சிமன்றக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் சென்னையில் ஒரு நிதிநுட்ப நகரம் அமைத்திடுவதற்கும், நிதிநுட்பச் சேவைகளை ஒரே இடத்தில் வழங்கும் வகையில், ஒரு நிதிநுட்பக் கோபுரத்தை அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டி வைத்ததில், நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நிதிநுட்ப நகரத்தில், இந்திய, பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கு ஏற்றவகையில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்துத்தர இருக்கின்றோம். சென்னை மாநகரத்தின் மையப்பகுதியான நந்தம்பாக்கத்தில், 56 ஏக்கர் நிலத்தை, இதற்கென ஒதுக்கி இருக்கிறோம். இதன்மூலம், நிதிநுட்பத் துறையில் ரூ.12 ஆயிரம் கோடி முதலீடுகளை ஈர்த்து, 80 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

மேலும், இங்கு 5.6 இலட்சம் சதுரஅடிப் பரப்பளவு கொண்ட ஒரு நிதிநுட்பக் கோபுரம் (FinTech Tower) ஒன்றை அமைக்கவுள்ளோம். இதன்மூலம், ரூ.1,000 கோடிக்கும் மேலாக முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, ஏறக்குறைய 7 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

சுருங்கச்சொன்னால், அடுத்த தலைமுறைத் தொழில்நுட்பங்களான நிதிச்சேவைகள், அது தொடர்பான செயல்பாடுகள் அதனுடைய மையமாக இந்த நிதிநுட்ப நகரம் செயல்படும்.

இது வெறும் தொடக்கம்தான். நாங்கள் மேற்கொண்டுள்ள இந்தப் பயணத்தில், உங்கள் அனைவரின் ஈடுபாட்டையும் நான் வரவேற்கிறேன். உங்கள் நிதிநுட்பத் தீர்வுகள் மூலம், தமிழ்நாட்டினைப் புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்வதற்கு உங்கள் ஆதரவை இந்த நேரத்தில் நான் வேண்டுகிறேன்.

> **“தொழில்துறையில், சாதனை மேல் சாதனைகளை நாம் செய்து வருகிறோம். முதலீடுகளை ஈர்ப்பதற்கு எடுத்து வைத்திடும் ஒவ்வொரு அடியும், வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் ஒரு பெரிய இலட்சியத்தினைக் கொண்டதாக இருக்கின்றது. அனைவரையும் உள்ளடக்கிய நமது திராவிட மாடல் வளர்ச்சி பல மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.”**

ஜனவரி மாதம் நடைபெற உள்ள, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் அதிக அளவில் பங்கேற்று, சிறப்பிக்குமாறும் உங்கள் துறை சார்ந்த தொழில்களில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளுமாறும் உங்களுக்கு இந்தத் தருணத்தில் அன்போடு அழைப்பு விடுக்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை வெகுவாக மிகச் சிறப்பாக நடத்திடக் காரணமாக இருந்த மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி.ராஜா அவர்களுக்கும், தொழில்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் திரு. ச.கிருஷ்ணன் அவர்களுக்கும், தொழில்துறை அதிகாரிகளுக்கும், எனது மனமார்ந்தப் பாராட்டுகள்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்துள்ள வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும், தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் உங்கள் அத்தனை பேருக்கும் நான் இந்தத் தருணத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

விளைநிலங்களின் மண்வளத்தை மேம்படுத்தும் "தமிழ் மண்வளம்" இணைய முகப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 28.06.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பில், விவசாயப் பெருமக்கள் தங்கள் நிலத்தில் உள்ள மண்வளத்தினை அறிந்து, அதற்கேற்ப உரமிடுவதை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள "தமிழ் மண்வளம்" எனும் புதிய இணைய முகப்பினை (http://tnagriculture.in/mannvalam) தொடங்கி வைத்தார்.

வேளாண் உற்பத்தி உயர மண் வளம் அவசியம்

பயிரின் மகசூலை உயர்த்துவதில் மண் வளம் முக்கியப் பங்காற்றுகிறது. மண் வளம் என்பது, மண்ணின் தன்மை, மண்ணிலுள்ள கரிம, அமிலநிலை, தழை, மணி, சாம்பல் போன்ற பேரூட்டச்சத்துக்கள், இரும்பு, மாங்கனீசு போன்ற நுண்ணூட்டச்சத்துக்களின் அளவினைக் குறிக்கும். மகசூலுக்கு முக்கியக் காரணியாக விளங்கும் மண்ணின் வளம் குறித்து ஒவ்வொரு விவசாயியும் அறிந்து அதற்கேற்ப உரமிடுவது மிகவும் அவசியமாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்தார் - 28.06.2023

"தமிழ் மண்வளம்" இணைய முகப்பு

விளைநிலங்களின் மண்வளத்தை மேம்படுத்தும் வகையில், கடந்த 2022-2023ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், "தமிழ் மண்வளம்" என்ற இணைய முகப்பு உருவாக்கப்படும் என்று மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, வேளாண்மை - உழவர் நலத்துறையின் மூலம் உருவாக்கப்பட்ட "தமிழ் மண்வளம்" எனும் இணைய முகப்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விவசாயிகளின் பயன்பாட்டிற்காகத் தொடங்கி வைக்கப்பட்டது.

"தமிழ் மண்வளம்" இணைய முகப்பின் பயன்கள்

விவசாயிகள் கணினி மூலமாகவோ அல்லது கைபேசி மூலமாகவோ http://tnagriculture.in/mannvalam/ எனும் இணையதள முகவரியில் "தமிழ் மண்வளம்" இணையதளத்தை அணுகலாம். இந்த இணைய முகப்பில், விவசாயிகள் தங்கள் மாவட்டம், வட்டாரம், கிராமம், தங்களது நிலத்தின் புல எண், உட்பிரிவு எண்ணைப் பதிவு செய்தால், உடனடியாக, மண் வளம் குறித்த அனைத்து விபரங்களும் பதிவிறக்கம் செய்யப்பட்டு, அவர்களது கைபேசியில் மண்வள அட்டையாக மின்னணு வடிவில் கிடைக்கும். இந்த இணைய முகப்பு தமிழ், ஆங்கில மொழிகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதில் மண்டல வாரியாகவும் மாவட்டத்தில் உள்ள வட்டாரம், கிராமங்கள் வாரியாகவும் மண்ணின் வகைகள் தரப்பட்டுள்ளன.

மண்ணின் தன்மை, நிலத்தடி நீரின் வகைப்பாடு, உப்பின் நிலை, களர்-அமில நிலை (pH), அங்ககக் கரிமம் (Organic Carbon), சுண்ணாம்புத்தன்மை (Calcareousness) போன்ற வேதியியல் குணங்கள் பற்றிய விபரங்களும், தழை, மணி, சாம்பல் சத்துக்கள் போன்ற விபரங்களும், கந்தகம், இரும்பு, மாங்கனீசு, துத்தநாகம், தாமிரம், போரான் போன்ற நுண்ணூட்டச் சத்துகளின் விவரங்களும், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் காடுகள் சார்ந்த எவ்வகை பயிர்களைச் சாகுபடிச் செய்யலாம், தேர்ந்தெடுக்கும் பயிருக்கு எவ்வளவு உரமிட வேண்டும் போன்ற பரிந்துரைகளையும் விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம்.

"தமிழ் மண்வளம்" என்ற இணைய முகப்பு இந்திய அளவில் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டு, நாட்டிலேயே முன்னோடியாக விளங்குகிறது. இந்த இணைய முகப்பின் பயனாக, விவசாயிகள் தங்கள் நிலத்தின் மண் வளத்தை அறிந்து, அதற்கேற்ப உரமிடுவதன் மூலம் சாகுபடிச் செலவு குறைவதுடன், மண் வளம் காக்கப்பட்டு, பயிர் மகசூல் அதிகரிக்கும்.

காலநிலைச் செயல் திட்டம்

தெரிந்து கொள்ளுங்கள்

- சென்னை, அதன் காலநிலைச் செயல் திட்டத்தின் மூலம் 2050ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தில் இருந்து 93% மின்சாரத்தை அடைய இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 2050ஆம் ஆண்டுக்குள் சென்னையின் 100% வணிகக் கட்டடங்களில் அதிகத் திறன் கொண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றலை பயன்படுத்துவதை இலக்காகக் கொண்டு செயல்படும்.
- சென்னையில் 2050ஆம் ஆண்டுக்குள், நிலையான போக்குவரத்து இயக்ககத்தை ஊக்குவிப்பதற்கு 80% நகர உட்போக்குவரத்தை பொதுபோக்குவரத்து மூலம் அடையவும், நடைபயிற்சி, சைக்கிள் ஓட்டுதலை ஊக்குவிக்கவும், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளை 100% மின்மயமாக்குதல், தனியார் வாகனங்களின் மின்மயமாக்கலை ஊக்குவிக்கும் இலக்குகளுடன் செயல்படும்.
- சென்னை நகரின் திடக்கழிவுகளை 100% மேலாண்மை செயக்கக்கூடிய திறமையான, பயனுள்ள, மீள்திறன் கொண்ட கழிவு மேலாண்மை அமைப்பு உருவாக்கப்படும்.
- சென்னையைத் "தண்ணீர்-செயல்திறன்" மிக்க நகரமாக மாறுவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக, 2050ஆம் ஆண்டுக்குள் நகரத்தின் 35% பகுதியில் நகர்ப்புற இயற்கையை விரிவுபடுத்தும் நோக்கம் செயல்படுத்தப்படும்.
- சென்னையில் வெள்ள அபாய மண்டலங்களுக்குள் வசிக்கும் பாதிக்கப்படக் கூடிய மக்களின் மறுவாழ்வு, வெப்பத்தைத் தாங்கும் திறன், பரவலாக்கப்பட்ட சுகாதார உள்கட்டமைப்பிற்காகத் தற்போதுள்ள குடிசை வீடுகளை மறுசீரமைத்தல் ஆகியவற்றால் "அனைவருக்கும் அழிவில்லாத காலநிலை" ஆதாரத்தை நோக்கிச் சென்னை நகரம் செயல்படும்

மாணவ, மாணவியர்களை ஒழுக்கத்திலும், பொறுப்பிலும் முதன்மையானவர்களாக ஆக்குகின்ற “சிற்பி” திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் நிறைவு விழாவில் ஆற்றிய உரை - 26.06.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 26.06.2023 அன்று, சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில், சென்னை பெருநகரக் காவல்துறை சார்பில் நடைபெற்ற “சிற்பி” நிறைவு விழாவில், சிற்பி திட்டத்தில் பயிற்சி முடித்த 5,000 மாணவ, மாணவியர்களிடம் கலந்துரையாடி அவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி, வாழ்த்தினார். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிற்பி கீதம் என்ற சிற்பி திட்ட மாணவ, மாணவியருக்கான பாடலையும் வெளியிட்டார்.

சென்னைப் பெருநகரக் காவல்துறை சார்பில் பள்ளி, மாணவர்கள் ஒழுக்கத்திலும் கல்வியிலும் மேலும் சிறந்து விளங்கிடவும், நாட்டுப்பற்றுடன் நல்ல பண்புகளை வளர்த்துக்கொள்ளவும், அவர்களை நல்வழிப்படுத்தவும், ‘சிற்பி’

> **“சிறுவர்களை இளமைக் காலம் முதல் பொது ஒழுக்கம் உள்ளவர்களாகவும், சமூகப் பொறுப்புள்ளவர்களாகவும் ஆக்கக்கூடிய இந்தச் 'சிற்பி' திட்டம் பயன்பட வேண்டும்.”**

(SIRPI - Students In Responsible Police Initiatives) என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.09.2022 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தொடங்கி வைத்தார். காவல்துறையுடன், பள்ளி மாணவர்களின் நெருக்கத்தை வளர்த்து நல்லுறவை ஏற்படுத்தி, சட்டத்தை மதிக்கும் சிறந்த குடிமக்களாகவும், காவல்துறையின் உண்மையான நண்பர்களாகவும் மாற்றும் உயரிய நோக்கில் “சிற்பி” திட்டம் தொடங்கப்பட்டது.

உன்னதமான, சிறந்த இளைய சமுதாயத்தினரை உருவாக்கிட அரசுப்பள்ளிகளைச் சேர்ந்த 2,558 மாணவிகள், 2,442 மாணவர்கள் என 5,000 பள்ளி மாணவ, மாணவிகளைக் கொண்டு “சிற்பி” (SIRPI) திட்டம் உருவாக்கப்பட்டது. 12 காவல்துறை உதவி ஆய்வாளர்கள், ஒரு பள்ளிக்கு இரண்டு நோடல் ஆசிரியர்கள் வீதம் நியமிக்கப்பட்டு, சிற்பி திட்ட மாணவ, மாணவியருக்குக் கல்வி, ஒழுக்கம், பொது அறிவு, கல்விச் சுற்றுலா எனப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

சிற்பி திட்டத்தின் மூலம், சிற்பி மாணவ, மாணவியருக்குப் பாடத்திட்ட புத்தகங்கள், சீருடைகள் (2 எண்ணிக்கை) வழங்கப்பட்டு, 40 வாரம் பயிற்சி வகுப்புகள் மற்றும் 8 கல்விச் சுற்றுலாத் தலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பயிற்சி வகுப்புகள் முடிக்கப்பட்டு, சிற்பி திட்டம் நிறைவு பெற்றது.

இப்பயிற்சி காலக்கட்டத்தில் சிற்பி மாணவர்களுக்குக் காவல்துறை, ஆசிரியர்கள் மூலம் கவாத்து, போக்குவரத்து விதிகள், கணினி வழிக் குற்றங்கள், குழந்தைகளுக்கானப் பாதுகாப்பு வழிமுறைகள், நல்லொழுக்கம், நெகிழி ஒழிப்பு, மாசுக் கட்டுப்பாடு, ஒளி மற்றும் ஒலி மாசு, நாட்டுப்பற்று, போதைப் பழக்கம் தடுக்கும் முறைகள், தனிப்பட்ட சுகாதாரம், இயற்கையைப் பேணுதல், யோகா, மனித நலம், தற்காப்பு, தேசப்பற்று, அரசு வேலைக்குச் செல்லத் தேவையான படிப்புகள், குதிரைப்படை, மோப்ப நாய்ப் பிரிவு, இயற்கை விவசாயம், நல்ல தொடுகை, தீய தொடுகை, உதவி தொலைபேசி எண்கள் போன்ற வகுப்புகள் நிபுணர்களால் கற்பிக்கப்பட்டன.

மேலும், சிற்பி மாணவ, மாணவிகள் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் யோகா வகுப்பில் கலந்து கொண்டு திரிகோண ஆசனம் செய்து, உலக இளம் சாதனையாளர்கள் விருது (World Young Achievers Record), தமிழ்நாடு இளம் சாதனையாளர்கள் விருது (Tamil Nadu Young Achievers Record), உலக ரெக்கார்டு யூனியன் (World Record Union) ஆகிய உலக சாதனை விருதுகளைப் பெற்றனர்.

இயற்கையைப் பேணும் விதமாக 5,000 மாணவ, மாணவியர்களும் ஐந்து இலட்சம் விதைப்பந்துகள் தயார் செய்து வனத்துறையினரிடம் ஒப்படைத்ததுடன், 5,000 மரக்கன்றுகள் நட்டு சாதனை படைத்ததற்காக Indian Records Academy, Asian Book of Records ஆகிய உலக சாதனை விருதுகளைப் பெற்றுள்ளனர்.

சிற்பி திட்டத்தைப் பெருமைப்படுத்தும் விதமாக, கடந்த 26.01.2023 அன்று காமராஜர் சாலையில் நடைபெற்ற குடியரசு தினவிழா அணிவகுப்பில், சிற்பி மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டு மிடுக்கான நடைபயின்று அனைவர் கவனத்தையும் ஈர்த்ததுடன், சிற்பி மாணவிகள் குழுவினர் சிறந்த படைத் தலைவருக்கான விருதையும் பெற்றுப் பெருமை சேர்த்தனர்.

சிற்பி நிறைவு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

முதலில் நீங்கள் எல்லாம் நல்லாயிருக்கிறீர்களா!

இந்தச் சிற்பி திட்டத்தில் கலந்து கொண்ட உங்கள் அனுபவம் எப்படிப் பயனுள்ளதாக இருந்ததா? நீங்கள் வந்திருக்கக்கூடிய ஆர்வத்தை, உற்சாகத்தை உங்கள் முகமலர்ச்சியைப் பார்த்தாலும், நீங்கள் எல்லாம் புன்சிரிப்புடன் இருக்கிறீர்கள்!

உங்களுடைய எழுச்சியை, வளர்ச்சியை பார்க்கும்போது உங்களுடைய எனர்ஜி எனக்கும் இப்போது வந்துவிட்டது!

இன்னும் சொல்லவேண்டுமென்றால், என்னோட பள்ளி நினைவுகாலம் எல்லாம் இப்போது வந்துகொண்டிருக்கிறது!

மாணவர்களுக்கு மிகவும் பிடித்த நம்முடைய முன்னாள் பிரதமர் எல்லோருக்குமான இந்தியாவைக் கனவு கண்ட நேருவோட பெயரால் அமைந்திருக்கின்ற இந்த ஸ்டேடியத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

எல்லோருக்குமான இந்தியாவை, சமத்துவ இந்தியாவைப் பேணிக்காக்க வேண்டிய பெரும் பொறுப்பு, இந்த நாட்டினுடைய எதிர்காலமாக இருக்கக்கூடிய உங்கள் கையில் இருக்கிறது!

நம்மோட திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டில் மிகப்பெரிய மறுமலர்ச்சி நடந்து கொண்டு வருகிறது. இந்தியாவில் எல்லாவற்றிலும் நம்பர்-1 தமிழ்நாடு என்று சொல்கின்ற அளவுக்கு நாம் இன்றைக்கு வளர்ந்து கொண்டு வருகிறோம்.

அதிலும் குறிப்பாக, கல்வித் துறையில் மகத்தான சாதனைகளை நாம் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். அதில் ஒரு முக்கியமான சாதனை என்னவென்று கேட்டீர்கள் என்றால், காலை சிற்றுண்டித் திட்டம், அதை நான் பெருமையாகச் சொல்வேன்.

ஏனென்றால், பசியோட படிக்க வருகின்ற குழந்தைகளுக்கு, முதலில் உணவு! அப்புறம்தான் வகுப்பறை என்று சொல்கின்ற மாதிரியான திட்டம் அது.

வயிற்றுப் பசியைப் போக்கிவிட்டால், உங்களுடைய அறிவுப்பசிக்கு உணவு கிடைத்துவிடும்!

இதை மனதில் வைத்துத்தான் காலைச் சிற்றுண்டித் திட்டத்தை நாம் உருவாக்கினோம்.

அதேப்போல,

இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன், பள்ளி மேலாண்மைக் குழுக்கள், பள்ளி செல்லாப் பிள்ளைகளைக் கண்டறிய செயலி, சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்குச் சிறப்பு நிதி, 1ஆம் வகுப்பு முதல் 3ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் இயக்கம், பயிற்சித் தாள்களுடன் கூடிய பயிற்சிப் புத்தகங்கள்,

9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வினாடி வினா போட்டிகள், "மாணவர் மனசு" என்ற ஆலோசனைப் பெட்டி, கணித ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி, உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், வகுப்பறை உற்று நோக்குச் செயலி, மின் ஆசிரியர் என்ற உயர்தர டிஜிட்டல் செயலி - ஆகிய திட்டங்களைப் பள்ளிக் கல்வித்துறை சார்பில் நாம் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

இந்த வரிசையில்தான், இந்தச் 'சிற்பி' என்ற திட்டத்தைச் சென்னை காவல்துறை திட்டமிட்டது. இதை நான்தான் தொடங்கி வைத்தேன். நன்றாகப் படிக்கின்ற மாணவர்கள், ஒழுக்கத்திலும் – நேர்மையிலும் – துணிச்சலிலும் – சமூகப் பொறுப்பிலும் – சிறந்தவர்களாக உருவாக்க நம்முடைய சென்னை மாநகரகத்தின் காவல் ஆணையர் மதிப்பிற்குரிய சங்கர் ஜிவால் அவர்களால் இந்தத் திட்டத்தை வடிவமைத்து, மாணவர்கள் படிப்பில் School first எடுக்க வைக்கின்ற மாதிரி, ஒழுக்கத்திலும், பொறுப்பிலும், முதன்மையானவர்களாக ஆக்குகின்ற திட்டம்தான் இந்தச் 'சிற்பி' திட்டம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 13.09.2021 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் இந்தத் திட்டத்தைப் பற்றி நான் அறிவித்தேன். சென்னை மாநகரில் இருக்கக்கூடிய 100 அரசுப் பள்ளிகளில், பள்ளிக்குத் தலா 50 மாணவர்கள் வீதம் பங்குபெறக் கூடிய வகையில் இது திட்டமிடப்பட்டது. சிறுவர்களை இளமைக் காலம் முதல் பொது ஒழுக்கம் உள்ளவர்களாகவும், சமூகப் பொறுப்புள்ளவர்களாகவும் ஆக்கக்கூடிய இந்தத் திட்டம் பயன்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டது.

கடந்த 14.09.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் இதை நான் தொடங்கி வைத்தேன். இந்தத் திட்டம் மூலம் குற்றமற்ற சிறந்த இளைய சமுதாயத்தினரை உருவாக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2,558 மாணவிகள், 2,442 மாணவர்கள் சிறந்த பொறுப்புள்ள சீர்மிகு சிற்பிகளாக இன்றைக்கு நீங்கள் எல்லாம் உருவாகி இருக்கிறீர்கள் அதைப் பார்த்து நான் அளவு கடந்த மகிழ்ச்சி அடைகிறேன். இதைச் செய்து காட்டுவதற்கு எல்லா வகைகளிலும் முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றி கண்டிருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு இப்போது நிறைவு விழா நடத்திக்கொண்டு இருக்கிறோம். உங்களுக்கு இதற்கான பாடப்புத்தகம், சீருடை தந்தார்களா? உங்களைக் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துக் கொண்டு போனார்களா? இந்த ஓராண்டுக் காலத்தில் சிற்பி மாணவர்களுக்குக் கவாத்து, போக்குவரத்து விதிகள், கணினி வழிக்குற்றங்கள், குழந்தைகளுக்கான பாதுகாப்பு வழிமுறைகள், நல்லொழுக்கம், பிளாஸ்டிக் ஒழிப்பு, ஒலி மாசுபாடு, நாட்டுப்பற்று, போதைப் பழக்கம் தடுக்கும் முறைகள், தனிப்பட்ட சுகாதாரம், இயற்கையைப் பேணுதல், யோகா, மனித நலம், தற்காப்பு, அரசு வேலைக்குச் செல்ல வேண்டிய படிப்புகள், குதிரைப்படை, மோப்ப நாய்ப் பிரிவு, இயற்கை வேளாண்மை, நல்ல தொடுகை, தீயத் தொடுகை கற்பித்தல், உதவி தொலைபேசி எண்கள் போன்ற வகுப்புகள் அந்தந்தத் துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய வல்லுநர்களாலும், காவல் துறையினராலும், சிற்பி நோடல் ஆசிரியர்களாலும் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஐ.ஏ.எஸ் – ஐ.பி.எஸ் போன்ற பயிற்சிகளுக்குச் செல்லும்போதுதான் இதுபோன்ற பயிற்சிகளை உங்களுக்குத் தருவார்கள். ஆனால், மிகச் சிறு வயதிலேயே இந்த பயிற்சியைத் தமிழ்நாடு அரசு உங்களுக்கு வழங்கி இருக்கிறது.

இந்தக் காலக்கட்டத்தில் நீங்கள் பல்வேறு சாதனைகளைச் செய்திருக்கிறீர்கள். அதையெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என்னிடத்தில் பெருமையாகச் சொன்னார்கள்.

முக்கியமாக, காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் விதமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 5,000 சிற்பி மாணவர்கள் சென்னை எழும்பூர் முதல் வண்டலூர் வரை சிறப்பு இரயில்களில் பயணம் செய்திருக்கிறார்கள்.

இயற்கையைப் பேணும் விதமாக ஐந்தாயிரம் குழந்தைகளும் ஐந்து இலட்சம் விதைப் பந்துகள் செய்து வனத்துறையினரிடம்

ஒப்படைத்திருக்கிறீர்கள். அதுமட்டுமல்லாமல், ஐந்தாயிரம் மரக்கன்றுகளையும் நட்டிருக்கிறீர்கள்.

74ஆவது குடியரசு நாள் விழாவில், சிற்பி மாணவர் படையினராக அணிவகுப்பில் கலந்து கொண்டது அதுவும் மிடுக்கான நடையில் என்னை மிகவும் வியப்படைய வைத்திருக்கிறது.

இப்படி உங்களோட சாதனைகள் என்னை மட்டுமல்ல எல்லோரையும் வியப்படைய வைத்திருக்கிறது. இந்த இளம் வயதில் இந்தச் சாதனைகளைச் செய்ய உங்களுக்கு வாய்ப்பு கிடைத்திருப்பது நீங்கள் இதை ஒரு பெரிய மைல் கல்லாக நினைக்கவேண்டும்.

இதுபோன்ற செயல்கள் உங்களை மட்டுமல்ல, உங்கள் குடும்பத்தையும், உங்களுடைய சுற்றத்தையும் சீர்மைப்படுத்தும். அதோடு, சிறார் குற்றங்கள் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு காவல்துறை இன்றைக்குச் சிறப்பான கவனத்தைச் செலுத்திக் கொண்டு வருகிறது.

சிறார்கள் குற்றச் செயல்களில் ஈடுபட குடும்ப உறுப்பினர்களோட கவனக் குறைவு, போதிய குடும்ப வருமானம் இல்லாமை, ஆதரவில்லாமல் சிறார்கள் வளர்வது, வேலைவாய்ப்பின்மை போன்றவை காரணமாக இருக்கின்றன.

இவற்றைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுத்துத் தடுக்க இது போன்ற திட்டங்கள் கைகொடுக்கும். போதைப் பொருள் ஒழிப்பு, குடிப்பழக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகள், சட்டம் சார்ந்த விழிப்புணர்வு பெறச் செய்தல், அரசு சார்ந்த, அரசு சாரா அமைப்புகளுடன் தொடர்பினை ஏற்படுத்துதல், சுய ஆளுமைத் திறனை மேம்படுத்துதல், பெற்றோர்களது பேச்சை மதித்து நடத்தல், பொதுமக்களோடு தொடர்பு, இளம் வயதிலிருந்து போக்குவரத்து விதிகளைக் கடைபிடிக்கச் செய்தல், தேசிய விழாக்களைக் கொண்டாடுதல், தேசிய சின்னங்களுக்கு மரியாதை செய்தல், மாநிலத்தின் செழுமை, வளர்ச்சியைக் கண்டு பெருமை கொள்ளச் செய்தல் ஆகிய பண்புகளை சிறுவர்களிடையே உருவாக்க வேண்டும்.

ஏனென்றால், இன்றைய இளைஞர்களே, நாளைய எதிர்காலம்!

இளைஞர்களைச் சீர்படுத்தினாலே, எதிர்காலத்தைச் சீர்படுத்த முடியும். அப்படி உருவாகக்கூடிய இளைஞர்கள் சிறந்த சமுதாயத்தை நிச்சயமாக செதுக்குவார்கள்.

தரமானக் கல்வி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு இன்றைக்கு இரண்டாவது இடத்திலிருக்கிறது. முதலிடத்திற்கு முன்னேறுவதற்கான அனைத்துப் பணிகளையும் பள்ளிக்கல்வித் துறை இன்றைக்குச் சிறப்பாக செய்துகொண்டு வருகிறது.

என்னைப் பொறுத்தவரை, மாணவர்களைத் தரமான 'மனிதர்களாக' உருவாக்குதே அரசாங்கத்தின் கடமையாக நான் கருதுகிறேன். இதில் முக்கியமாக 'நான் முதல்வன்' என்ற திட்டம் தமிழ்நாட்டு மாணவ, மாணவியரை அனைத்துத் திறமைகளும் கொண்டவர்களாக வளர்க்கின்ற திட்டமாக இது அமைந்திருக்கிறது.

இதனுடைய பயன், தலைமுறை தலைமுறைக்கு நிச்சயமாக தொடரும். 100 விழுக்காடு படிப்பறிவு என்பதை நாம் நிச்சயம் எட்டியாக வேண்டும். அனைவருக்கும் கல்வியைக் கொடுத்தாக வேண்டும். இடையில் நின்றுவிடும் பிள்ளைகளை மீண்டும் பள்ளிக்குள் அழைத்து வர முயற்சிக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக, கற்றல் குறைபாடுகள் உடைய குழந்தைகளுக்குத் தனிக்கவனம் செலுத்த வேண்டும். பெண் குழந்தைகளைத் தன்னம்பிக்கை கொண்டவர்களாக மாற்ற வேண்டும்.

இங்கே வந்திருக்கின்ற உங்களிடம் நான் வைக்கின்ற வேண்டுகோள் ஒன்றே ஒன்றுதான்.

பள்ளியோடு கல்வியை நிறுத்திடாமல் எல்லோரும் கல்லூரிகளுக்குப் போகவேண்டும்.

நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் படியுங்கள்! நன்றாக விளையாடி உடலை உறுதி செய்யுங்கள்! சமூகத்தைப் படியுங்கள்! அந்தக் கல்வியின் மூலமாகப் பகுத்தறிவையும், சுயமரியாதையையும் வளர்த்துக் கொள்ளுங்கள்! அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்! அந்தப் படிப்பை வைத்துச் சிந்தியுங்கள்! புதிய புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்துங்கள்! படிப்பு மட்டும்தான் உங்களிடமிருந்து யாராலும் பிரிக்க முடியாத சொத்து!

உங்களுடையப் படிப்பையும் திறமையையும் பார்த்து, பெரிய பெரிய கம்பெனிகள் உங்களை அழைத்து வேலை கொடுக்க வேண்டும். நீங்களும் தொழில் தொடங்கி, நிறைய பேருக்கு வேலை கொடுக்க வேண்டும்.

உங்களோட மற்ற கவலைகளை போக்குவதற்கு மற்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது. இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினான நான் இருக்கேன்! நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படக் கூடாது. படிக்கின்ற காலத்தில் உங்களுக்கு வேறு எதிலும் கவனச் சிதறல்கள் இருக்கக் கூடாது.

இன்றைக்குப் போதை ஒழிப்பு நாள்! அதனால் கேட்டுக்கொள்ள விரும்புவது, எந்தவிதமான போதைப் பழக்கத்திற்கும் நீங்களும் அடிமையாகக் கூடாது. உங்கள் நண்பர்களையும் அடிமையாக விடாதீர்கள்.

இன்றைக்கு உலக போதை ஒழிப்பு நாள்! உங்களைச் சுத்தியிருக்கிறவர்களுக்கு நீங்கள் சொல்ல வேண்டியது... "போதை என்பது உங்கள் உடலுக்கு மட்டுமல்ல, உங்கள் குடும்பத்திற்கு மட்டுமல்ல, நாட்டிற்கும், எதிர்காலத்திற்கும் அது மிக, மிகக் கேடு! அதனைப் புறந்தள்ளிப் போதையற்ற சமுதாயத்தை உருவாக்கவேண்டும்."

இதைத்தான் நீங்கள் எல்லோருக்கும் சொல்லவேண்டும். சொல்லுவீர்களா... சொல்லுங்க சொல்லுவீர்களா... எல்லோருக்கும்?

அன்புச் செல்வங்களே, அன்பு மாணவக் கண்மணிகளே, நீங்கள் நல்லவர்களாக, வல்லவர்களாக, நம்பிக்கைக் கொண்டவர்களாக, நீதியில், நேர்மையில் உறுதிகொண்டவர்களாக திகழ என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்!

ஆல் தி வெரி பெஸ்ட்! நன்றி! வணக்கம்!

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் புதியதாக நியமிக்கப்பட்டுள்ள தலைமைச் செயலாளர் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களைத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் 30.06.2023 அன்று தலைமைச் செயலகத்தில், சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மூலம் ரூ.1,723.05 கோடி மதிப்பிலான முதலீட்டில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில்
உறுதி செய்யப்பட்டு ஆற்றிய உரை – 27.06.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 27.06.2023 அன்று சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற பன்னாட்டுக் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழாவில், சுமார் 30,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிடும் வகையில் ரூ.1,723.05 கோடி மதிப்பிலான முதலீடுகள் உறுதி செய்யப்பட்டது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பு அளிப்பதிலும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆற்றிடும் பங்களிப்பினை அங்கீகரிக்கும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 27ஆம் நாள் பன்னாட்டு குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பன்னாட்டுக் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாளினை அரசு விழாவாகக் கொண்டாடிட வேண்டும் என ஆணையிட்டார். அதன்படி, சென்னை வர்த்தக மையத்தில் பன்னாட்டுக் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழா அரசு விழாவாகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின்கீழ்த் தொழில் தொடங்க மானியத்திற்கான ஆணைகள் வழங்குதல்

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமத்துவபுரம் தந்து சமூகநீதிகாத்திட்ட சமூகநீதிக்காவலர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதியை நிலைநாட்டிடும் விதமாக ஆதிதிராவிடர், பழங்குடியின தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வண்ணம், இந்த ஆண்டு தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள புதிய திட்டமான "அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின்" கீழ் முதல் 100 பயனாளிகளுக்கு ரூ.57.55 கோடி திட்ட மதிப்பீட்டில் தொழில் தொடங்க ரூ.18.94 கோடி மானியத்திற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின்கீழ்த் தொழிற்சாலைக்கான நிலம், கட்டடம், இயந்திரத் தளவாடங்கள், ஒரு சுழற்சிக்கான நடைமுறை மூலதனம் ஆகியவற்றின் மதிப்பில் 35 விழுக்காடு முதலீட்டு மானியத்துடன் கடன் பெற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், 6 விழுக்காடு வட்டி மானியம் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களுக்கு இத்தகைய மானியச் சலுகையுடன் வேறு எந்த மாநிலத்திலும் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் அறிவிக்கப்பட்ட இந்தக் குறுகிய மூன்று மாத காலத்தில் இதுவரை 127 ஆதிதிராவிடர், பழங்குடியினத் தொழில் முனைவோர்களுக்கு ரூ. 24.26 கோடி மானியத்துடன் ரூ.45 கோடிக் கடன் வழங்க ஒப்புதல் ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மூன்று தொழிற்பேட்டைகளைத் தொடங்கி வைத்தல்

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, செங்கல்பட்டு மாவட்டம் – கொடூர், திருச்சி மாவட்டம் – மணப்பாறை, மதுரை மாவட்டம் – சக்கிமங்கலம் ஆகிய இடங்களில் 262.03 ஏக்கர் பரப்பளவில் ரூ.153.22 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ள மூன்று தொழிற்பேட்டைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இதன்மூலம் சுமார் 21,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

முதல் குறுந்தொழில் குழுமமாகக் கடலூர் மாவட்டத்தில் முந்திரிப் பதப்படுத்தும் குறுந்தொழில் குழுமத்தைத் தொடங்கி வைத்தல்

குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் முதல் குறுந்தொழில் குழுமமாகக் கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், காடம்புலியூரில் ரூ.2.16 கோடித் திட்ட மதிப்பீட்டில், அதில் ரூ.1.81 கோடித் தமிழ்நாடு அரசு மானியத்துடன் அமைக்கப்பட்டுள்ள முந்திரிப் பதப்படுத்தும் குறுந்தொழில் குழுமத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் பரவலாகக் குறுந்தொழில் நிறுவனங்கள் கொண்ட பல்வேறு குறுங்குழுமங்கள் (Micro Cluster) உள்ளன. ஊரகப்பகுதிகளில் நீடித்த நிலையான வேலைவாய்ப்பினை உறுதி செய்திடவும், பாலினம் மற்றும் சமூக சமநிலையை உறுதிபடுத்திடவும் இந்தக் குறுங்குழுமங்களை மேம்படுத்துவது இன்றியமையாதது ஆகும். இக்குறு நிறுவனங்களின் மேம்பாட்டிற்காகக் "குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தைக் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு, இதுவரை 28 குறுங்குழுமங்கள் ரூ.117.33 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் ரூ.143.47 கோடித் திட்டமதிப்பீட்டில் அமைத்திட ஒப்புதல் அளிக்கப்பட்டுப் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மெய்நிகர் கண்காட்சியகத்தைத் தொடங்கி வைத்தல்

இவ்விழாவில், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சந்தை வாய்ப்பினை உருவாக்கிடும் நோக்கோடு மெய்நிகர் கண்காட்சியகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வெற்றி பெற்ற மாணவ அணிகளின் புத்தாக்கக் கண்டுபிடிப்புக்களுக்குப் பரிசுத்தொகை வழங்குதல்

மாணவர்களின் எதிர்காலத்தினைக் கருத்தில் கொண்டு, மாணவர்கள் புத்தாக்கச் சிந்தனையுடன் படிப்பு முடித்தப்பிறகு பலருக்கு வேலை கொடுப்பவராக மாற்றக்கூடிய "பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத்திட்டம்" தமிழ்நாடு அரசால் கடந்த ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதல் பதிப்பின்கீழ் வெற்றி பெற்ற 10 மாணவ அணிகளின், புத்தாக்கக் கண்டுபிடிப்புக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.10 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளுதல்

சமச்சீர் வளர்ச்சியை முன்னெடுக்கும் விதமாகத் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அனைத்துத் தொழில் பிரிவுகளையும் உள்ளடக்கிய ரூ.1,510 கோடி மதிப்பில் 7,400 வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில், கடன் வசதியாக்கல், தொழில்நுட்பக் கட்டமைப்பிற்கான ஃபேம் டிஎன் (FaMe TN) அமைப்பிற்கும், தொழில்முனைவோர்களுக்கும் இடையே 100 புதிய முதலீடுகளுக்கானப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், சிட்பி மூலம் கடன் பெறும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசின் சலுகைகளை வழங்கிடவும், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கு சிட்பி மூலம் நிதி ஆதாரங்கள் ஏற்படுத்திடவும் கடன் வசதியாக்கல், தொழில்நுட்பக் கட்டமைப்பிற்கான ஃபேம் டிஎன் (FaMe TN) மற்றும் சிட்பி (SIDBI) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் விருதுகள் வழங்குதல்

விழாவின் நிறைவாக, தொழில்துறையின் வளர்ச்சிக்குக் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த தொழில்முனைவோர் விருதினை ஹீட் எக்ஸ்சேஞ்சர்ஸ், வாகன உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் காஞ்சிபுரம்–பிரிசிசன்ஸ் எக்யுப்மெண்ட்ஸ் (சென்னை) பிரைவேட் லிமிடெட் (Precision Equipments (Chennai) Pvt. Ltd.,) நிறுவனத்திற்கும், மாநில அளவில் சிறந்த மகளிர் தொழில்முனைவோர் விருதினை வாகன உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் காஞ்சிபுரம்-யுனிடெக் பிளாஸ்டோ காம்பொனன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (Unitech Plasto Components Pvt. Ltd.,) நிறுவனத்திற்கும், மாநில அளவில் சிறந்த வேளாண்சார் தொழில் நிறுவனத்திற்கான விருதினை மாம்பழக் கூழ் தயாரிக்கும் கிருஷ்ணகிரி – பவித்ரன் அசப்டிக் ஃப்ரூட் புராடக்ட் (Pavithran Aseptic Fruit Product) நிறுவனத்திற்கும், மாநில அளவில் சிறந்த தரம், ஏற்றுமதி நிறுவனத்திற்கான விருதினை விண்வெளி, பாதுகாப்பு உபகரணங்கள் தயாரிக்கும் சேலம் – ஏரோஸ்பேஸ் என்ஜினீயர்ஸ் பிரைவேட் லிமிடெட் (Aerospace Engineers Pvt. Ltd.,) நிறுவனத்திற்கும், மாநில அளவிலான சிறந்த சிறப்புப் பிரிவைச் சேர்ந்த சிறந்த நிறுவனத்திற்கான விருதினை இயந்திரத் தளவாடங்கள் தயாரிக்கும் கோயம்புத்தூர் – DM என்ஜினீயரிங் நிறுவனத்திற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கி, வாழ்த்தினார்.

மேலும், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நிதிவசதியினைச் சிறப்பாக வழங்கிய சிறந்த வங்கிக்கான முதலிடத்திற்கான விருதினை இந்தியன் வங்கிக்கும், இரண்டாம் இடத்திற்கான விருதினை இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கும், மூன்றாம் இடத்திற்கான விருதினை பேங்க் ஆஃப் பரோடா வங்கிக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், இன்றையதினம் நடைபெற்ற இவ்விழாவில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சார்பில் ரூ.1,723.05 கோடி மதிப்பிலான முதலீடுகள் உறுதி செய்யப்பட்டது. இதன்மூலம் சுமார் 30,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடிக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், இந்தத் தொழில் நிறுவனங்களுடைய நாள் மிகச் சிறப்பாக எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடைபெறக்கூடிய விழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சமூகநீதியும், சமச்சீர் தொழில் வளர்ச்சியும் தலைவர் கலைஞர் அவர்களின் இரு கண்கள்.

பெரு நிறுவனங்களுக்கும் சிறு நிறுவனங்களுக்கும் ஒரே கொள்கை என்பது அனைவரையும் உள்ளடக்கிய சமச்சீர் வளர்ச்சிக்கு ஏற்றதல்ல என்பதை உணர்ந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்தியாவிலேயே முதன்முதலில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கெனத் தனியாக ஒரு கொள்கையைக் கொண்டுவந்தார்.

தொழில் முனைவோர்கள் எளிதில் தொழில் தொடங்க அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டு 1970ஆம் ஆண்டிலேயே சிட்கோ தொடங்கி வைத்தார். இன்றைக்குத் தமிழ்நாட்டில் 37 மாவட்டங்களில் 127 தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. இவ்வாறு சமச்சீர் வளர்ச்சிக்கு வித்திட்டவர்தான் நூற்றாண்டு விழா கொண்டாடிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அவரது வழியில் பொருளாதார வளர்ச்சியிலும் சமூகநீதியை நிலைநாட்டிடும் விதமாக ஆதிதிராவிடர், பழங்குடியினத் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில், நம்முடைய தமிழ்நாடு அரசு 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்' என்ற ஒரு மகத்தானத் திட்டம் தொடங்கி வைக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ்த் தொழிற்சாலைக்கான நிலம், கட்டடம், இயந்திரத் தளவாடங்கள், சுழற்சிக்கான நடைமுறை மூலதனம் ஆகியவற்றின் மதிப்பில் 35 விழுக்காடு முதலீட்டு மானியத்துடன் கடன் பெற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 6 விழுக்காடு வட்டி மானியம் பத்து ஆண்டுகள் வரை வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களுக்கு இவ்வளவு மானியச் சலுகையுடன் வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்ற திட்டங்கள் இல்லை. திட்டம் அறிவிக்கப்பட்ட இந்தக் குறுகிய மூன்று மாத காலத்தில் இதுவரை 127 ஆதிதிராவிடர், பழங்குடியினத் தொழில் முனைவோர்களுக்கு ரூ.24.26 கோடி மானியத்துடன் ரூ.45 கோடிக் கடன் வழங்க ஒப்புதல் ஆணை பெறப்பட்டுள்ளது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இதில் 100 பயனாளிகளுக்கு ஒப்புதல் ஆணை இந்த நிகழ்ச்சியில் வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெரும்பங்காற்றும் MSME துறையின் முன்னேற்றத்திற்காக நம்முடைய அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது. ஓய்வு பெற்ற அதிகாரி திரு. என்.சுந்தரதேவன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் குறுகியக் கால நடவடிக்கைகள், நடுத்தரக் கால நடவடிக்கைகள், நீண்ட கால நடவடிக்கைகள் என வகைப்படுத்தி நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

தமிழ்நாடு வர்த்தக வரவுகள், தள்ளுபடித் தளமானது, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 'தோள் கொடுப்போம் தொழில்களுக்கு' என்ற தலைப்பில் மதுரையில் என்னால் தொடங்கி வைக்கப்பட்டது.

தொழில்முனைவோர்கள் 159 வகையான தொழில் உரிமங்களை 27 அரசு துறைகளிடமிருந்து எளிதாகப் பெற Single Window Portal 2.0 தளம் நமது அரசு பொறுப்பேற்றவுடன் துவக்கி வைக்கப்பட்டு, இதுவரை 20 ஆயிரத்து 353 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 17 ஆயிரத்து 618 தொழில் உரிமங்கள் வழங்கப்பட்டு 1,903 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

தமிழ்நாட்டில் பரவலாக, குறுந்தொழில் நிறுவனங்கள் கொண்ட பல்வேறு குறுங்குழுமங்கள் (Micro Cluster) உள்ளன. ஊரகப்பகுதிகளில் நீடித்த நிலையான வேலைவாய்ப்பினை உறுதி செய்திடவும், பாலினம், சமூக சமநிலையைஉறுதிபடுத்திடவும் இந்தக் குறுங்குழுமங்களை மேம்படுத்துவது இன்றியமையாதது.

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தமது உலகளாவிய தரம், தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், வளர்ந்து வரும் தொழில் துறையில் நுழைய வழிவகை செய்யவும் பெரும் குழுமங்கள் அமைக்கப்படும் என நமது அரசால் அறிவிக்கப்பட்டு, முதற்கட்டமாக 4 பெருங்குழுமங்கள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- ❖ திண்டிவனத்தில் மருந்துப் பொருட்கள் பெருங்குழுமம்.
- ❖ திருமுடிவாக்கத்தில் துல்லிய உற்பத்திப் பெருங்குழுமம் (Precision Engineering Cluster)
- ❖ விண்வெளி, பாதுகாப்புத் துறை சார்ந்த பெருங்குழுமம், ஸ்மார்ட் மொபிலிட்டி, மின்வாகனத் துறை சார்ந்த பெருங்குழுமம் ஆகியவற்றை அமைப்பதற்காக விரிவானத் திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை 6 தொழிற்பேட்டைகள் திறக்கப்பட்டுள்ளன. மேலும், ஆறு மாவட்டங்களில் 6 தொழிற்பேட்டைகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை, கோயம்புத்தூர் போன்ற தொழில் மிகுந்த நகரங்களில் பணிபுரியும் வெளியூர், வெளிமாநில பணியாளர்கள், தொழிலாளர்களுக்குத் தரமான மற்றும் குறைந்த வாடகையில் தங்குமிட வசதி என்பது ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக, சவாலாக இருந்து வருகிறது. இதற்குத் தீர்வாக அரசு சார்பில் தங்கும் விடுதிகள் (Hostel) கட்டித் தரப்படும் என்று அரசால் அறிவிக்கப்பட்டு, முதற்கட்டமாக, சென்னை, கோயம்புத்தூர் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நமது அரசு பொறுப்பேற்ற பின்பு தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்திற்கு உயிர் கொடுக்கப்பட்டு, ஆண்டிற்கு ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு செயல் திட்டங்கள் மாநிலம் முழுவதும் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலிருந்து மொத்தம் 6,257 புத்தொழில் நிறுவனங்கள் ஸ்டார்ட்அப் இந்தியா தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டு மே மாதம் முதல் கடந்த இரண்டு ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை மட்டுமே, 2016ஆம் ஆண்டு முதல் 2021 ஏப்ரல் மாதம் வரையிலான 5 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இரண்டு மடங்கிற்கும் அதிகம். தி.மு.க அரசின் வேகத்துக்கும் செயல்திறனுக்கும்

இதுவே சிறந்த சான்று என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை, ஈரோடு, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் வட்டாரப் புத்தொழில் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன போல, நடப்பு நிதியாண்டில் சேலம், ஓசூர், கடலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இரண்டாம், மூன்றாம் கட்ட நகரங்களிலும் வட்டார புத்தொழில் மையங்களை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த நிதியாண்டு ரூ.30 கோடிச் சிறப்பு நிதியைப் பட்டியலின/ பழங்குடியினரால் நிறுவப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்குப் பங்கு முதலீடாக வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டது. சென்ற ஆண்டில், இந்தத் திட்டத்திற்குக் கிடைத்த வரவேற்பினைத் தொடர்ந்து, இந்த நிதியாண்டில் ரூ.50 கோடியாக இந்தச் சிறப்பு நிதியானது உயர்த்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாணவரின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு, மாணவர்களைப் புத்தாக்கச் சிந்தனையுடன், படிப்பு முடித்தபின் பலருக்கு வேலை கொடுப்பவராக மாற்றக்கூடிய "பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம்" நமது அரசால் கடந்த ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் வெற்றி பெற்ற 10 மாணவ அணிகளின் புத்தாக்கக் கண்டுபிடிப்புக்களை நான் பார்வையிட்டேன். இவர்களுக்குத் தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.10 இலட்சம் வழங்கப்படுகிறது.

தொழில்துறையின் வளர்ச்சிக்கு MSME நிறுவனங்களின் பங்களிப்பிற்காக விருது பெற்றுள்ள நிறுவனங்களுக்கும், நிறுவனங்களின் நிருவாகத்திற்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்நிறுவனங்கள் மென்மேலும் வளர்ந்து இந்திய அளவில் ஏன் உலக அளவில் சிறப்புப் பெறவேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

MSME நிறுவனங்களின் உயிர்நாடி என்பது வங்கிகள் அந்த நிறுவனங்களுக்கு அளிக்கும் தடையில்லா நிதி வசதி. அந்த நிதிவசதியினை MSME நிறுவனங்களுக்கு வழங்கிய சிறந்த மூன்று வங்கிகளுக்கான விருதுகளையும் நான் வழங்கி உள்ளேன். அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

MSME நிறுவனங்களின் வளர்ச்சிக்குக் கழக அரசு உறுதுணையாக இருக்கிறது - இருக்கும் என்பதை நான் உறுதி செய்கிறேன். அனைத்து நடவடிக்கைகளையும் நமது அரசு எடுத்து வருகிறது. கடந்த ஆட்சியில் MSME துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.607.60 கோடி என இருந்த நிலையில், இது படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்போது ரூ.1,505 கோடியாக உயர்ந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் MSME துறை எடுத்திருக்கும் புதிய முயற்சிகளால் 120 பயனாளிகளுக்கு ரூ.59.71 கோடி மானியம், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.1,510 கோடி, விருது பெறுவோர் 49 பேருக்கு ரூ.12.50 கோடி, 262 ஏக்கர் பரப்பில் ரூ.153.22 கோடி முதலீட்டில் 3 சிட்கோ தொழிற்பேட்டைகள் என மொத்தம் ரூ.1,723.05 கோடி அளவிற்குப் பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளன. இதன்மூலம் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

நான் இதுவரை குறிப்பிட்ட 20க்கும் மேற்பட்ட திட்டங்கள் எல்லாம் MSME நிறுவனங்களின் வளர்ச்சிக்காக நமது அரசு பொறுப்பேற்றப்பின் தொடங்கப்பட்ட திட்டங்கள்.

தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய சமத்துவ வளர்ச்சியாக இருக்க வேண்டும் என நாங்கள் திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வருகிறோம்.

இந்தத் திட்டங்கள் எல்லாம் முழுமையாக வெற்றி பெற வேண்டும் என்று சொன்னால், உங்களின் ஒத்துழைப்பு குறிப்பாக MSME நிறுவனச் சங்கங்களின் பங்களிப்பு மிக, மிக இன்றியமையாதது. பன்னாட்டுக் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாளான இன்று, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொண்டு இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்.

ரூ.3.12 கோடி மதிப்பில்
3 பெரியார் நினைவுச் சமத்துவபுரங்கள் சீரமைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 28.06.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் திருவள்ளூர், கடலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ரூ.3.12 கோடிச் செலவில் சீரமைக்கப்பட்டுள்ள 3 பெரியார் நினைவு சமத்துவபுரங்கள், கடலூர், திருப்பூர், விருதுநகர், திருநெல்வேலி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல் மாவட்டங்களில் ரூ.34.76 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், 2 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி, ஊராட்சித்துறை அலுவலக வளாகக் கட்டடங்கள், ஒரு புதிய பேருந்து நிலையம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

தந்தைப் பெரியாரின் சமூகச் சமத்துவ கொள்கையைச் செயல்படுத்தும் பொருட்டும், அனைத்துச் சமூகத்தினரும் ஒற்றுமையாகவும், சகோதரத்துவத்துடனும் வாழவேண்டும் என்ற நோக்கத்துடனும் "பெரியார் நினைவுச் சமத்துவபுரம்" முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1997ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
திறந்து வைத்தார்–28.06.2023

அதன்படி, 1997–2001 வரையில் 145 சமத்துவபுரங்கள், 2008–2011 வரையில் 93 சமத்துவபுரங்கள், என மொத்தம் 238 சமத்துவபுரங்களை அமைக்க ஆணையிடப்பட்டு, 233 சமத்துவபுரங்கள் கட்டிமுடிக்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 5 சமத்துவபுரங்களில், ஒரு சமத்துவபுரம் பணி

முடிக்கப்படாத நிலையிலும், 4 சமத்துவபுரங்கள் மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படாத நிலையிலும் கடந்த 10 ஆண்டுகளாக இருந்து வந்தது.

அதன் தொடர்ச்சியாக, விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், கொழுவாரி ஊராட்சியில் அமைக்கப்பட்ட சமத்துவபுரம், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், கண்ணமங்கலப்பட்டி ஊராட்சியில் அமைக்கப்பட்ட சமத்துவபுரம் ஆகிய இரண்டு சமத்துவபுரங்களும் முற்றிலுமாகச் சீரமைப்புச் செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் ஏற்கெனவே திறந்து வைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, தற்பொழுது, மீதமுள்ள மூன்று சமத்துவபுரங்களில், திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம், இராமசமுத்திரம் ஊராட்சியில் அமைந்துள்ள சமத்துவபுரத்தில் 100 வீடுகளுக்கான சிறுபழுதுகள் நீக்கம் ரூ.70.14 இலட்சம் மதிப்பீட்டிலும், இதர உட்கட்டமைப்பு வசதிகளின் சீரமைப்புப் பணிகள் ரூ.31.01 இலட்சம் மதிப்பீட்டிலும், என மொத்தம் ரூ.101.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றியம், தொளார் ஊராட்சியில் அமைந்துள்ள சமத்துவபுரத்தில் 78 வீடுகளுக்கான சிறுபழுதுகள் நீக்கம் ரூ.71.44 இலட்சம் மதிப்பீட்டிலும், இதர உட்கட்டமைப்பு வசதிகளின் சீரமைப்புப் பணிகள் ரூ.26.50 இலட்சம் மதிப்பீட்டிலும், என மொத்தம் ரூ.97.94 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியம், காட்டுக்குளம் ஊராட்சியில் அமைந்துள்ள சமத்துவபுரத்தில் 100 வீடுகளுக்கான சிறுபழுதுகள் நீக்கம் ரூ.87.40 இலட்சம் மதிப்பீட்டிலும், இதர உட்கட்டமைப்பு வசதிகளின் சீரமைப்புப் பணிகள் ரூ.25.41 இலட்சம் மதிப்பீட்டிலும், என மொத்தம் ரூ.112.81 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்காணும் திருவள்ளூர், கடலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள சமத்துவபுரங்கள் ரூ.3.12 கோடிச் செலவில் சீரமைக்கப்பட்டு,மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர் அவர்களால் திறந்து வைத்து, திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த 5 பயனாளிகளுக்கு வீடுகளுக்கான சாவிகளை வழங்கினார்.

மேலும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலர்களைச் சந்திக்க வரும் பொதுமக்கள் ஆகியோரின் வசதிக்காக, பழைய பழுதடைந்த கட்டடங்களுக்கு மாற்றாகப் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசால் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, தற்போது வரை 277 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட அனுமதி

வழங்கப்பட்டு, அதில் 211 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, கடலூர் மாவட்டம் – ஸ்ரீமுஷ்ணம் ஒன்றியத்தில் ரூ.3.74 கோடிச் செலவிலும், திருப்பூர் மாவட்டம் – காங்கேயம் ஒன்றியத்தில் ரூ.3.13 கோடிச் செலவிலும், விருதுநகர் மாவட்டம் – விருதுநகர் ஒன்றியத்தில் ரூ.3.09 இலட்சம் செலவிலும், திருநெல்வேலி மாவட்டம் – அம்பாசமுத்திரம் ஒன்றியத்தில் ரூ.2.91 கோடிச் செலவிலும், திண்டுக்கல் மாவட்டம் – வடமதுரை ஒன்றியத்தில் ரூ.3.07 இலட்சம் செலவிலும் கட்டப்பட்டுள்ள 5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடமானது 17,324 சதுர அடிப் பரப்பளவில், இரண்டு தளங்களுடன், ஊராட்சி ஒன்றிய கூட்ட அரங்கு,பயிற்சி அரங்கு,ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான அறைகள், பொறியியல் பிரிவிற்கெனத் தனி அலுவலகம், கணினி அறை, எழுதுபொருட்கள் பாதுகாப்பு அறை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

மேலும், கிருஷ்ணகிரி, நாமக்கல் மாவட்டங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் இயங்கி வரும் மாவட்ட அளவிலான அலுவலகங்களை ஒருங்கிணைக்கும் வகையில்,பல்வேறு அலுவலர்களுக்குத் தனித்தனி அறைகளுடன் கிருஷ்ணகிரியில் ரூ.8 கோடிச் செலவிலும், நாமக்கல்லில் ரூ.8.20 கோடிச் செலவிலும், தலா 28,716 சதுர அடிப் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறை அலுவலக வளாகக் கட்டடங்கள்;

கடலூர் மாவட்டம் – நல்லூர் ஒன்றியம், வேப்பூர் ஊராட்சியில் 51 கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் 57,620 சதுர அடிப் பரப்பளவில் ரூ.2.62 கோடிச் செலவில், 10 பேருந்துகள் நிறுத்துவதற்கெனத் தனித்தனி பேருந்து நிறுத்தும் தளங்கள், பயணிகள், பொருட்களை ஏற்றி இறக்குவதற்கானத் தளங்கள், பயணிகள் அமரும் இடம், குடிநீர், மின்விளக்கு வசதிகள், கழிப்பறைகள், பேருந்துகளின் வருகை, புறப்படும் நேரத்தைக் காட்டும் வரைபலகை உள்ளிட்டப் பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

சேலம் மாவட்டம், கோனூர் ஊராட்சியில் உள்ள தந்தைப் பெரியார் நினைவுச் சமத்துவபுரத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 11.06.2023 அன்று, சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சியில் உள்ள தந்தை பெரியார் நினைவுச் சமத்துவபுரத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு வசிக்கும் மக்களிடம் வசதிகள் குறித்துக் கேட்டறிந்தார்.

சேலம் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள், மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்து விடும் நிகழ்வு ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக 10.06.2023 அன்று சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 11.06.2023 அன்று சேலம் மாநகரில் உள்ள பேரறிஞர் அண்ணா பூங்காவில் புதியதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்து, சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1998ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சியில் உள்ள தந்தைப் பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அச்சமத்துவபுரத்தைச் சீரமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்பேரில் 2021-2022ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.47 இலட்சம் செலவில் 94 வீடுகளுக்கு வெள்ளை அடித்தல், சிறு பழுது நீக்கப் பணிகளும், ரூ.44.20 இலட்சம் செலவில் சாலை வசதி, குடிநீர் வசதி, விளையாட்டு மைதானம், சமுதாயக்கூடம், அங்கன்வாடி மையம், நியாயவிலைக் கடை, சமத்துவபுர வளைவு ஆகிய இதர பொதுக் கட்டமைப்புக்களுக்கான பழுது நீக்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமத்துவபுரத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, சமத்துவபுரத்தில் வசிக்கும் மக்களிடம் அங்குள்ள சாலை வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகள் குறித்துக் கேட்டறிந்தார். அப்போது, அம்மக்கள் அனைத்து வசதிகளும் சிறப்பாக உள்ளதாகவும், சமத்துவபுரத்தைச் சீரமைத்திட நடவடிக்கை எடுத்தமைக்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டனர்.

சேலத்திலிருந்து மேட்டூர் புறப்பட்டேன். வழியில், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கோனூர் ஊராட்சியில் உள்ள பெரியார் நினைவுச் சமத்துவபுரத்தைப் பார்வையிட்டேன்.

1998ஆம் ஆண்டு தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட இந்தச் சமத்துவபுரத்தில் உள்ள வீடுகள் - சாலைகள் உள்ளிட்டவற்றில் பழுது நீக்கிச் சீரமைக்கும் பணிக்குக் கடந்த 2021-2022ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்திருந்தோம்.

தற்போது அங்குள்ள மக்களைச் சந்தித்து, சாலை, குடிநீர் வசதிகள் பற்றிக் கேட்டறிந்தேன். அப்போது அங்கிருந்த மக்கள் அனைத்து வசதிகளும் சிறப்பாக இருப்பதாகவும், சமத்துவபுரத்தைச் சீரமைத்ததற்கு நன்றியும் தெரிவித்தனர்.

அவர்கள் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி நாடெங்கும் பரவி, நாடே சமத்துவபுரமாகிட வேண்டும் என்ற தமிழினத் தலைவர் கலைஞரின் கனவு என் எண்ணங்களில் ஓடியது.

கலைஞர் 100இல் அவரது இலட்சியங்களை மக்களிடம் கொண்டு சேர்த்து, இன்னும் அறியாமையில் இருக்கும் மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமத்துவச் சமுதாயம் அமைத்திட உழைப்போம்!

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைதளப் பதிவு - 11.06.2023

ரூ.50 கோடி மதிப்பில் "நுண் தொழில் நிறுவனங்களுக்கான நிதித் திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் – 28.06.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 28.06.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறையின்கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் ரூ.5.16 கோடிச் செலவில் புனரமைக்கப்பட்ட 26 மாவட்டங்களில் உள்ள பூமாலை வணிக வளாகங்களைத் திறந்து வைத்தார். மேலும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் ரூ.50 கோடி மதிப்பிலான நுண் தொழில் நிறுவன நிதித் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 10 மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூ.5.60 இலட்சம் கடனுதவியாக வழங்கினார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் ஊரகப் பகுதியில் செயல்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நகரப் பகுதிகளில் விற்பனை செய்ய ஏதுவாக ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட அளவிலான முதன்மை விற்பனை வளாகமும், தேவையின் அடிப்படையில் கூடுதல் வணிக வளாகங்களும் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்க் கட்டப்பட்டன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இவ்வணிக வளாகங்களுக்குப் "பூமாலை வணிக வளாகம்" எனப் பெயர் சூட்டித் திறந்து வைத்தார்.

அரியலூர், திருப்பூர், புதிய மாவட்டங்கள் நீங்கலாக 29 மாவட்டங்களில் பூமாலை வணிக வளாகங்கள் செயல்பட்டு வந்தன. பல ஆண்டுகளாக உரிய பராமரிப்பின்றி இருந்த இவ்வளாகங்களைச் சீரமைக்கும் பொருட்டு 29 வணிக வளாகங்களில் பெரம்பலூர் மாவட்ட வணிக வளாகம் சீரமைக்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளதாலும், நாகப்பட்டினம் மாவட்ட பூமாலை வணிக வளாகம் முழுவதுமாகச் சேதமடைந்ததாலும், முதற்கட்டமாக இவற்றில் 26 மாவட்ட அளவிலான பூமாலை வணிக வளாகங்களைப் புனரமைத்து, பழுதுநீக்கம் செய்து, ஒரே மாதிரியான வண்ணம் பூசிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, 26 மாவட்ட பூமாலை வணிக வளாகங்கள் ரூ.5.16 கோடிச் செலவில் புனரமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

மேலும், கிராமப்புறங்களில் வாழும் மக்களைப் பொருளாதார முன்னேற்றம் அடையச் செய்திடும் வகையில், உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் எனப்படும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தருமபுரி, கன்னியாகுமரி, திருப்பத்தூர் மாவட்டங்கள் நீங்கலாக

31 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் உள்ள 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் செயல்பட்டு வரும் மகளிர் நுண் தொழில் நிறுவனங்களை வலுப்படுத்தத் தேவையான புதிய முயற்சிகளை முன்னெடுக்கவும், மகளிர் குழுக்களைத் தொழில் முனைவோராக உருவாக்கி, அந்த நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கவும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வாயிலாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

2023-2024ஆம் ஆண்டிற்கான வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள் மானியக் கோரிக்கையில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ், இந்த நிதியாண்டில் மகளிர் புதிதாகத் தொழில் தொடங்குவதற்கும், ஏற்கெனவே செய்து வரும் தொழிலை விரிவுபடுத்துவதற்கும் 1,000 கிராமங்களில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் "நுண் தொழில் நிறுவனங்களுக்கான நிதித் திட்டம் ரூ.50 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும்" என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, இத்திட்டத்தின் தொடக்க நிகழ்வாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 10 மாவட்டங்களைச் சார்ந்த 10 மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூ.5.60 இலட்சம் கடனுதவியாக வழங்கினார். இந்த நிதியாண்டிற்குள் ரூ.50 கோடி மதிப்பிலான கடனுதவி இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் பயனாளர்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்பட்டுவரும் வட்டாரங்களில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களாகவும், குறைந்தபட்சம் 30 சதவிகித பயனாளிகள் மாற்றுத்திறனாளிகளாகவும், நலிவுற்றோராகவும் இருப்பர். இவர்களின் தொழில் திட்டங்களின் அடிப்படையில் ரூ.70,000 வரை இத்திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்படுகிறவருக்குக் கடனுதவி வழங்கப்படும். மேலும், நுண் தொழில் நிறுவன நிதியுதவி பெறும் தொழில் முனைவோர் தங்களுக்குத் தேவையான தொழில் மேம்பாட்டுச் சேவைகளை மதி சிறகுகள் தொழில் மையத்தின் வாயிலாகப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளன.

படமும் / செய்தியும்

காந்தி மண்டப வளாகத்திலுள்ள நினைவு மண்டபங்களை மேம்படுத்தும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள், சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள நினைவு மண்டபங்களை மேம்படுத்தும் பணிகளை 03.07.2023 அன்று ஆய்வு மேற்கொண்டார். உடன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் உள்ளனர்.

ரூ.235.92 கோடி மதிப்பில் 11ஆம் வகுப்பு பயின்ற 4,89,600 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

தமிழ்நாடு அரசு மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவ – மாணவியர் சிரமமின்றிப் பள்ளிக்குச் செல்லும் வகையில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ – மாணவியர்களுக்கும் தமிழ்நாடு அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

2022–2023ஆம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்புப் பயின்ற மாணவ – மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் விழா 10.07.2023 அன்று சென்னை, திருவல்லிக்கேணி, பெசன்ட் சாலையில் அமைந்துள்ள என்.கே.தி. தேசிய பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் சார்பில் ரூ.235.92 கோடி மதிப்பில் 11ஆம் வகுப்பு பயின்ற 4,89,600 மாணவ – மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் அடையாளமாக 10 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார். ◆

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்–10.07.2023

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
நூற்றாண்டு தொடக்கம்

இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது கலைஞரின் போர்க்குணம்...

– கவிப்பேரரசு வைரமுத்து

சராசரி மனிதர்கள் மரணத்தில் மரிக்கிறார்கள். மாமனிதர்கள் மரணத்தில் பிறக்கிறார்கள். கலைஞர் இப்போது இலட்சியமாய்ப் பிறந்திருக்கிறார். மூன்று தலைமுறைகள் கண்ட கலைஞரை, மூன்றாம் தலைமுறை புரிந்துகொண்டிருக்கிறது.

பள்ளிப் பருவத்தில் திருவாரூர் கமலாலயத்தின் நீண்ட பெருங்குளத்தை நீந்திக் கடப்பதென்று அவரும் அவர் நண்பரும் நீந்துகிறார்கள். பாதி தூரம் கடந்ததும் களைத்துப்போன நண்பர், நீந்த முடியாது கரைக்கே திரும்பிப் போகலாம் என்கிறார். கடந்து வந்த தூரம் பாதி; கடக்க வேண்டிய தூரம் மீதி, எனவே, திரும்பிச் சென்று தோல்வி காண்பதை விட மறுகரையைத் தொட்டு வெற்றி பெறலாம் என்று கலைஞர் தொடர்ந்து நீந்தி வெற்றி பெற்றார்; நண்பரையும் வெற்றிபெற வைத்தார், கலைஞரின் இந்த விடாமுயற்சிதான் தானும் வென்று தமிழ்நாட்டையும் வெற்றிபெற வைத்தது. கலைஞரிடம் இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது இந்தப் போர்க்குணம் தான்.

மாற்றியோசியுங்கள்–கலைஞர் சொல்லும் இரண்டாம் பாடம் இது. அந்தக்காலத் திரைப்பட வசனத்தில் பொங்கலில் கிடக்கும் முந்திரிப் பருப்பு போல, சமஸ்கிருதத்துக்கு மத்தியில் கொஞ்சம் தமிழும் கிடந்தது. சத்திரியப் பாத்திரங்களும் பிராமண மொழியே பேசிக்கொண்டிருந்தன. கலைஞர் மாற்றி யோசித்தார். திரைப்படக் கொட்டகைக்குள் தேன்மழை பொழிந்தது. கலைஞரின் பேனா சொட்டிய மைத்துளியிலிருந்து நட்சத்திரங்கள் பிறந்தன.

அறிவைப் பொதுவுடைமைச் செய் – கலைஞர் சொல்லிச் செல்லும் அடுத்த பாடம் இது. உலக உத்தமர் காந்தி – அகிம்சா மூர்த்தி, அவரே நோயால் துடித்துக் கொண்டிருந்த கன்றுக்குட்டியைக் கொன்றுவிடச் சொல்லியிருக்கிறார். அது கஷ்டமுறுவதைக் காணச் சகியாமல்.

அக்பர் பாதுஷா, ஒரு ராஜபுத்திர ராணியை மணந்து கொள்ளலாமாம்! அவர் மகன் சலீம் ஒரு நடனக்காரியை மணந்து கொள்ளக்கூடாதாம்! இப்படித் தாம் பெற்ற அறிவைப் பாமரர்களுக்கு அள்ளித் தெளித்து அவர்களை ஆளாக்கியது, கலைஞரின் கைவண்ணம். 3 கோடி மக்களும் வெறும் 19 விழுக்காடு கல்வி அறிவு கொண்ட அன்றைய தமிழ்நாட்டைக் கலைவழியே கல்விக் கூடமாக மாற்றிய பெருமை கலைஞருக்கு உண்டு.

பதவி என்பது கிரீடம் அல்ல: அது அன்றாடங்காய்ச்சிகளுக்கான அமுத சுரபி – இது கலைஞரின் அடுத்த பாடம். சமூக நீதி – குடிசை மாற்று வாரியம் – இலவச மின்சாரம் – விவசாயக்கடன் விலக்கு – கை ரிக்சா ஒழிப்பு – இலவச மனைப் பட்டா – தாழ்த்தப்பட்டோருக்கு நில ஒதுக்கீடு - இலவசக் கல்வி - தமிழுக்குச் செம்மொழிப் பெருமை – தமிழ்நாட்டில் கட்டி எழுப்பப்பட்ட கட்டமைப்பு – இருமொழிக் கல்விக் கொள்கையால் ஏழை மாணவர்களுக்கு அகில உலக வாய்ப்பு: இவையனைத்தும் அவர் பெய்த பெருமழையில் சில துளிகள் என்று சொல்லலாம்.

துன்பங்களை உரமாய்ப் போடு – கலைஞரின் வாழ்க்கை பேசப்போகும் இன்னொரு பாடம் இது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் – பாளையங்கோட்டைச் சிறைச்சாலை – நெருக்கடி நிலையின் சவுக்கடி என்று எல்லாத் துயரங்களையும் தம் எதிர்காலத்திற்கான எரி பொருளாக்கிக் கொண்டார் கலைஞர்,

ஜப்பானிய எரிமலை தீக்குழம்பு கக்குமாம். அதன் அக்கினி ஆறு, பல கிலோ மீட்டர் பரவுமாம். கிராமத்து மக்கள் ஊரைக் காலிசெய்து ஓடிவிடுவார்களாம். ஆறிய எரிமலைக் குழம்பு சாம்பலான பிறகு திரும்பி வருவார்களாம். அந்தச் சாம்பலில் விவசாயம் செய்து மூன்று மடங்கு மகசூல் காண்பார்களாம். கலைஞர் கதையும் இதே கதைதான்.

நல்லது வேண்டுமா, நல்லது செய். இது கலைஞர் வாழ்வு கற்றுத்தரும் அடுத்த பாடம். கடற்கரையில் கலைஞருக்கு இடம் கிடைக்குமா என்று கலங்கிக் கிடந்தது தமிழகம். ஆனால், நல்லது செய்தவர்க்கு நல்லதே நடக்கும் என்று நான் மட்டும் நம்பினேன்.

1969 பிப்ரவரி 2, நள்ளிரவு 12:22 மணிக்கு அண்ணா மறைகிறார். அவர் உடல் கிருஷ்ணாம்பேட்டையில் அடக்கம் செய்யப்படும் என்று 1.45 மணிக்குத் தற்காலிக முதலமைச்சர் நாவலர் அறிவிக்கிறார். இல்லை கடற்கரையில் அடக்கம் செய்யப்படும் என்று 2.45 மணிக்குப் பொதுப்பணித் துறை அமைச்சராய் இருந்த கலைஞர் அறிவிக்கிறார். முதலமைச்சர் சொன்னது நடக்கவில்லை; பொதுப்பணித்துறை அமைச்சராய் இருந்த கலைஞர் சொன்னது நடந்தது. அண்ணாவுக்குக் கடற்கரையில் இடம் பெற்றுத் தந்தவர் கலைஞர் மட்டுமே. 1969இல் அண்ணாவுக்குச் செய்த பெருமைதான், 2018இல் கலைஞருக்குத் திரும்ப வாய்த்திருக்கிறது.

பல மாதங்களுக்கு முன்பு காவேரி மருத்துவமனையில் முதல்முறையாக அவர் அனுமதிக்கப்பட்டபோது தொலைபேசியில் பேசினேன். சொற்கள் இன்னும் மிச்சமிருந்த காலம் அது. 'நான் உங்களையே நினைத்துக் கொண்டிருக்கிறேன்' என்றேன். அவர் ஏதோ சொன்னார்; எனக்குப் புரியவில்லை. "என்ன சொல்கிறார் என்று அவர் அருகில் இருந்த உதவியாளர் நித்யாவைக் கேட்டேன். 'நானும் உங்களையே நினைத்துக் கொண்டு இருக்கிறேன்" என்று கலைஞர் சொன்னதாகக் கூறினார். என் அழுகை அன்றே ஆரம்பமாகிவிட்டது. இன்றும் அவரை நினைத்துக் கொண்டிருக்கிறேன்; வாழ்நாளெல்லாம் நினைத்துக் கொண்டேயிருப்பேன்.

நன்றி: நிறைந்து வாழும் கலைஞர் நினைவு மலர் 2019 எனும் நூலிலிருந்து...

கட்டுரை

பழந்தமிழ்

உலகப் பொதுமறை “திருக்குறள்”



– பாரதி கிருஷ்ணகுமார்.

திருக்குறள், மத, இன, மொழி, பிரதேச அடையாளங்களைக் கடந்த படைப்பு.

அதனாலேதான், “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து...” என்று நிமிர்ந்த ஞானச் செருக்கோடு பாடினார் மகாகவி பாரதியார். அதனாலேயே திருக்குறள் உலகப் பொதுமறை என்று போற்றப்படுகிறது.

உலகப் பொதுமறை என்பதன் பொருள், இவ்வுலகிலே இருக்கிற அனைவருக்கும் பொதுவான, ஏற்றுக்கொள்ளவும் பின்பற்றவுமான அரங்களை, நீதிகளை, நெறிமுறைகளை மறை போல உரைப்பதால் திருக்குறளை உலகப் பொதுமறை என்று கொண்டாடுகிறோம். இது எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் கருத்தும் சிந்தனையுமாகும்.

ஆனால், வேறொரு விதத்திலும் திருக்குறளை உலகப் பொதுமறை என்று நாம் உணர இயலும். அஃதாவது, திருக்குறள் ஏதேனும் ஒரு மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட பிரதியை, அம்மொழி அறிந்த ஒருவரிடம் வாசிக்கத் தருவதாகக் கொள்வோம்.

அவ்வாறு தரும்போது, இம்மொழிபெயர்ப்பு இந்தியாவிலே இருக்கிற தமிழ்நாட்டில் பிறந்த, தமிழ் மொழியில் எழுதப்பட்ட திருக்குறள் என்னும் நூலின் மொழிபெயர்ப்பு எனும் அறிமுகம் இல்லாமல் வாசிக்கத் தந்ததால், வாசிக்கிறவர் அந்தப் படைப்பு தன் தாய் மொழியில் தனது வாசிப்புக்காக எழுதப்பட்ட புத்தகம் என்றுதான் திருக்குறளை அறிவார்.

உலகின் எந்த மொழியில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டாலும், அப்பிரதியை வாசிக்கிறவர் மூலநூலையே அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு உலகத்தன்மை பெற்றது திருக்குறள், அதனாலும் அது உலகப் பொதுமறை என்று கொண்டாடப்படுகிறது.

தமிழ், தமிழர், தமிழ்நாடு போன்ற சொற்களோ, பிரதேச, இன, மொழி அடையாளங்களோ இன்றி எழுதப்பட்ட பெருமைக்குரியது திருக்குறள்.

தமிழில் “திரு” என்னும் அடைமொழி. நான் அறிந்த வரையில், சமயம் சார்ந்த இறை வழிபாட்டுக்குரிய நூல்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. திருப்பாவை திருவெம்பாவை, திருமந்திரம், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ் என்று அந்தப் பட்டியல் நீள்கிறது.

ஆனால், சமயச் சார்பற்ற, சமயம் கடந்த பெருமைக்குரிய திருக்குறள் மட்டுமே தமிழில் “திரு” எனும் அடைமொழியோடு சேர்த்து அழைக்கப்படும் ஒரே நூல், திரு என்றால் உயர்ந்தது. குறள் என்றால் அளவில் குறுகியது என்று பொருள்.

“மழித்தலும் நீட்டலும் வேண்டா..” என்ற குறளின் வழியேயும் “கொல்லான். புலாலை மறுத்தானை...” என்று துவங்கும் குறளின் வழியேயும் இந்திய மற்றும் தமிழ்ச் சமூகத்தில் இருக்கும் அனைத்துச் சமயங்களின் கோட்பாடுகளுக்கு எதிராகவும் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கிறார் வள்ளுவர்.

அனைத்திற்கும் மேலாகத் “தெய்வத்தான் ஆகாதெனினும்...” என்று துவங்கும் குறளின் வழியே, தெய்வம் சாதிக்க முடியாததை, செய்திட முடியாததை தன் உழைப்பினால் மனிதன் சாதிக்க முடியும் என்று எழுதினார் திருவள்ளுவர்.

இந்த உலகத்தைத் தாங்கும் அச்சாணி என்று உணர்த்தினார் வள்ளுவர்.

அற நூல்களிலேயே காதலையும் காமத்தையும் வியந்து போற்றிப் பாடிய பெருமைக்குரியது திருக்குறள் மட்டுமே. அதனாலேதான், இல்லறத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த வள்ளுவர், வியக்கத்தக்க விதத்தில் துறவின் பெருமையையும் காட்டிச் சென்றார். ஊழ்வினையைப் பாடிய வள்ளுவரால்தான் ஆள்வினைவுடைமையையும் பாட முடிந்தது.

கல்வி கற்பது ஒரு அறமுடைய ஒழுக்கச் செயல் என்றபோதிலும், திருவள்ளுவர் கல்வியின் சிறப்பை அறத்துப்பாலில் பாடினாரில்லை, அதை பொருட்பாலின் துவக்கத்தில் வைத்தார், நேரிய வழியில் பொருளீட்டுவதற்கும், அதைப் பேணிப் பாதுகாப்பதற்கும் கல்வியே அடிப்படைத் தேவை என்பதை உணர்ந்து அதனைப் பொருட்பாலில் கொண்டு சேர்த்தார். அதிகார வரிசையில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்கிற வரிசையை உருவாக்கி கல்வியின் சிறப்பை அனைவரும் உணரச் செய்தார்.

தமது படைப்பில், தாம் கூறியவை அனைத்தையும், அனைவரும் எல்லாக் காலத்திலும் ஏற்றுக்கொண்டுவிட வேண்டும் என்கிற வரட்டுப் பிடிவாதமும் வள்ளுவருக்கு இல்லை. வள்ளுவர் என்பவர் யார்? அவர் எத்தகையவர்? எங்கு இருந்தார்? என்பதற்கான ஆதாரங்களோ, சான்றுகளோ நம்மிடம் இல்லை. எனவே, இச்சூழலில் படைப்பு மட்டுமே முதன்மை பெறுகிறது. தனது படைப்பை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற இறக்கமும் வள்ளுவருக்கு இல்லை.

“எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்...” எனும் குறளை எழுதியதன் வழியே அவரது கருத்துக்களையே விசாரணை செய்யவும், மாறுபடவுமான வாய்ப்பினை நமக்கு வள்ளுவர் தருகிறார். இது திருக்குறளின் ஆகச் சிறந்த ஜனநாயகப் பண்பைக் காட்டுகிறது. அதனாலேதான்,

இக்குறள் எல்லாம் இறைவன் செயல், அனைத்தையும் அவனே ஆக்கி, காத்து அழிக்கிறான். அவன் கொடுப்பதை யாரும் தடுக்க முடியாது. தடுப்பதை யாரும் கொடுக்க முடியாது என்று காலங்காலமாக நிலவி வரும் அனைத்து நம்பிக்கைகளையும் மூட நம்பிக்கையாக்கிவிடுகிறது.

உழைப்பின் உயர்வை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உரைத்த பெருமை திருக்குறளுக்கே உண்டு, கடவுளால் இயலாததை உழைப்புஈட்டித்தரும் என்றுபாடியதிருவள்ளுவர் கடவுள் வாழ்த்தும் பாடியிருக்கிறார் என்பதும் மனங்கொள்ளத் தக்கது.

உழைப்பின் சிறப்பை அறிந்து உணர்ந்ததாலேதான் வள்ளுவர் வேளாண்மையைச் சிறப்பித்துப் பாடுகிறார். வேளாண்மை இழி தொழிலாகவும், வேளாண் மக்கள் இழி சனங்களாகவும் கருதப்பட்ட காலத்தில், வேளாண்மையை உயர்த்திப் பேசிய ஒரே நூல் திருக்குறள்.

ஏதேனும் ஒரு தொழில் செய்துதான் இங்கு எல்லோரும் வாழ்கிறோம் என்றபோதும் “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்...” என்று உழவின் சிறப்பை உயர்த்திப் பேசினார் வள்ளுவர், எத்தொழில் செய்வோர்க்கும், தமது உழைப்பால் உணவினை விளைவித்துக் கொடுத்து உதவுவதால் அவ்வுழவரே

கல்வி கற்பது ஒரு அறமுடைய ஒழுக்கச் செயல் என்றபோதிலும், திருவள்ளுவர் கல்வியின் சிறப்பை அறத்துப்பாலில் பாடினாரில்லை, அதைப் பொருட்பாலின் துவக்கத்தில் வைத்தார், நேரிய வழியில் பொருளீட்டுவதற்கும், அதைப் பேணிப் பாதுகாப்பதற்கும் கல்வியே அடிப்படைத் தேவை என்பதை உணர்ந்து அதனைப் பொருட்பாலில் கொண்டு சேர்த்தார். அதிகார வரிசையில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்கிற வரிசையை உருவாக்கி கல்வியின் சிறப்பை அனைவரும் உணரச் செய்தார்.

திருக்குறளுக்கு மாறுபட்ட கருத்துக்கள் கொண்ட பல உரைகள் எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

பலர் கூடிய இடத்தில் ஒருவனுக்கு உடுத்திய ஆடை சடக்கென நெகிழ்ந்துவிட்டால் அப்பொழுது அவன் கை விரைவில் அவ்வாடையைப் பற்றி உடுத்தி அவனது மானத்தைக் காத்தல் போல, தம்மில் ஒருவனுக்குத் தீங்கு நேரும்போது உடனே உதவி செய்து அத்தீங்கை ஒழிப்பதே நட்புக்கு இலக்கணமாகும் என்றே இக்குறளுக்கு உரை எழுதப்பட்டிருக்கிறது. துன்பத்தில் இருந்து காப்பாற்றும் பொருட்டு மனதினும் விரைவாக கை முற்படுதலால் துன்பம் நீங்கும் என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த உரை அனைவருக்கும் ஏற்புடையதே ஆகும்.

ஆனால், மறுவாசிப்பில் இக்குறள் வேறு ஒரு பொருள் கொள்ளுவதற்கான சாத்தியப்பாட்டைத் தன்னுள் சுமந்து நிற்கிறது. உடுக்கை இழந்தவன் என்னும் சொல் திட்டவட்டமான இறந்த காலச் சொல், எனில், துன்பத்தில் இருப்பவன் தனது ஆடையை முற்றிலும் இழந்து நிற்கிறான் என்பதே சரியான பொருள்.

இந்த இடத்தில், அவையின் கண் அல்லது பலர் கூடிய இடத்தில் ஒருவனது ஆடை நெகிழ்கிறபோது அவிழ்கிறபோது என்னும் பொருள் தரக்கூடிய நிகழ்காலத் தொடர் சொற்களை வள்ளுவர் பயன்படுத்தவில்லை. எனவே, அவிழ்ந்து கொண்டிருக்கும் ஆடையை விரைந்து பற்றும் கரங்களை நட்புக்கு இலக்கணமாக வள்ளுவர் சொல்லவில்லை. மாறாக, முற்றிலுமாக ஆடையை இழந்த ஒருவனது கைகள், மானத்தை மறைக்கும் பணியைத்தான் செய்யும். எனில் தனக்கு இயல்பாக விதிக்கப்பட்ட பணிகளை விட்டுவிட்டு மானங்காக்கும் பணிக்கு முன் வருகிறது கைகள்.

அதுபோல நண்பனுக்குத் தீங்கு வருகிறபோது தனக்கு விதிக்கப்பட்ட பணிகளை விட்டுவிட்டு நண்பனுக்கு உதவும் பணியை மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்பதே வள்ளுவன் காட்டும் வழி. எனவே, உடுக்கை இழந்தவன் கை என்பது, விரைவை மட்டும் குறிக்கிற சொல் அல்ல. மாறாகப் பண்பையும் விரைவையும் ஒருசேர குறிக்கும் சொல்.

இங்ஙனம் வாசிக்கும்போதெல்லாம், ஒவ்வொரு வாசிப்பிலும் புதிய மாறுபட்ட சிந்தனைகளைத் தரும் ஆற்றலோடு கூடிய படைப்பாகத் திருக்குறள் திகழ்கிறது. அதனாலேதான் "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி குறுகத் தரிந்த குறள்" என்று சிறப்பித்தாள் அவ்வை, வெறுமனே குறளைக் கற்கிற ஒருவரால் குறளின் ஆழத்தை அறிய முடியாது.

கல்வியின் துணைகொண்டு திருக்குறளை அறிவது ஒரு வழிமுறை என்றால், அறிவின் துணைகொண்டு திருக்குறளை அணுகுவது மற்றும் ஓர் அணுகுமுறை. பொருட்பாலில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்னும் அதிகார வரிசையில் குறளை யாசித்தபோதே கல்வி வேறு அறிவு வேறு என்று நமக்கு உணர்த்திய பெருமை திருக்குறளுக்கு உண்டு.

எந்த மொழியில் மொழி பெயர்க்கப்பட்டாலும் அந்த மொழியில் எழுதப்பட்ட இலக்கியம் என்று உணரத்தக்கதும், எந்த மொழியில் இருந்து மொழி மாற்றம் செய்யப்பட்டது என்று கண்டறியப்பட முடியாத சிறப்பும் திருக்குறளுக்கு உண்டு என்று முன்பே குறிப்பிட்டிருந்தோம்.

அந்தச் சிறப்புத் திருக்குறளுக்கு உண்டு என்ற போதிலும் திருக்குறளின் சிறப்புத் திருவள்ளுவர் அல்ல, தமிழ் மொழியே என்று சிறப்பாக உணர முடிகிறது. தமிழைத் தவிர வேறு எந்த மொழியிலும் இத்தனை பொலிவோடும் பொருளோடும் திருக்குறளை எழுத முடியாது என்றே நான் கருதுகிறேன்.

"இன்மையி னின்னாத தியாதெனி னின்மையின்
இன்மையே யின்னா தது"

என்பதான இதுபோன்ற ஒரு குறளை (பல நூறு குறள்களை மேற்கோள் காட்ட இயலும்) தமிழைத் தவிர வேறு எந்த மொழியிலும் உயிரோடும் ஓசையோடும் பொருளோடும் எழுதிவிட இயலாது.

ஒவ்வொரு முறை வாசிக்கிற போதும், அவ்வை சொன்னதுபோல் ஒவ்வொரு குறளுக்குள்ளும் ஏழுகடல்கள் ஆர்ப்பரித்துக்கொண்டே இருக்கிறது. எழுதப்பட்ட நாளில் இருந்து இன்று வரையிலும் எமது மொழியிலும் பிற மொழிகளிலும் தொடர்ந்து வாசிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது திருக்குறள். வரும் நூறு நூறு ஆண்டுகளிலும் அது வாசிக்கப்படும். புதிது புதிதாய் உரைகளும் பொருளும் தந்துகொண்டே இருக்கும்.

என் பள்ளிப் பருவத்தில் நான் வாசித்த திருக்குறள் அல்ல – நான் இப்போது வாசிக்கும் திருக்குறள்தான் அப்படியேமாறாமல் இருந்துகொண்டு, வாசிக்கிறவனுக்குள் நிகழும் மாற்றங்களை உணர்த்திக்கொண்டே இருக்கிறது பிரதி.

நன்றி: இலக்கிய மலர்–2023
எனும் நூலிலிருந்து...

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் புதியதாக நியமிக்கப்பட்டுள்ள காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களைக் காவல்துறைத் தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., அவர்கள் 01.07.2023 அன்று முகாம் அலுவலகத்தில், சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

தமிழரசு

Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள், வேளாண் வணிகத் திருவிழா 2023-ஐ தொடங்கிவைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகளை 08.07.2023 அன்று, சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் திறந்து வைத்தார்.

Published by D.MOHAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : D.MOHAN, I.A.S.,